யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரம்—18

உ

# சைவபோதம்

## இரண்டாம் புத்தகம்

1954

விலை] [சதம் 60

உ

# சைவபோதம்

## இரண்டாம் புத்தகம்

புலோலி

சு. சிவபாதசுந்தரம் B. A. அவர்கள்

செய்தது.

இஃது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது

12-ம் பதிப்பு

விஜய ஆடி சித்திரைமீ

1953

(Copyright Registered)

உ

# அதிகார முறை


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சைவசமயம்—சைவசமயமாட்சி, சைவசமயத்தின் பிரமாண நூல்கள், சைவாபிமானம் ... | 1 |
| 2. | உயிரின் நிலைமை—ஆன்மா-கடவுள்-பாசம், மனிதப் பிறவியின் சிறப்பு ... ... | 8 |
| 3. | பாசங்கள்—ஆணவம், *மாயை, கன்மம் *குறிப்பு, விதி ... ... ... ... | 16 |
| 4. | ஆன்மா—*குறிப்பு ... ... ... ... | 34 |
| 5. | பதி—*குறிப்பு ... ... ... ... | 40 |
| 6. | முப்பொருள்கள்—கடவுளின் பரிபூரணம், அத்துவிதம், சத்து, சித்து, ஆநந்தம் ... | 50 |
| 7. | சிவபெருமானின் மூர்த்தங்கள்—கொடிமரம், பலிபீடம், சிவலிங்கம், நந்தி, உமாதேவியார், விநாயகக்கடவுள், வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், நடேசப் பெருமான், *குறிப்பு ... | 56 |
| 8. | சைவ சாதனங்கள்—திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்ஷரம் ... ... ... ... | 71 |
| 9. | சிவாலய தரிசனம் ... ... ... ... | 76 |
| 10. | நித்தியகருமம் ... ... ... ... | 81 |
| 11. | கடவுள் வழிபாடு—வழிபாட்டின் நோக்கம், தியானம், ஆத்மதியானம், சிவத்தியானம், துதி, நல்லொழுக்கம், *குறிப்பு ... ... | 84 |
| 12. | அறம்—பொதுக்குறிப்புக்கள், அன்பு, புலாலுண்ணாமை ... ... ... ... | 98 |
| | தோத்திரத்திரட்டு ... ... ... ... | 125 |

உ

# முகவுரை

திருச்சிற்றம்பலம்

நெஞ்சே நீ நினையாய்
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

திருச்சிற்றம்பலம்

சிவபெருமானுடைய திருவருளினின்றுந் தோன்றிய வேதாகமங்களும், அவற்றின் வழிநூலாகிய மெய்கண்டசாத்திரம் முதலிய நூல்களும் பதி பசு பாச இலக்கணங்களைக் குறைவற எடுத்துக் காட்டுகின்றன. இவற்றுள் முதனூல்கள் வடமொழியி லிருத்தலாலும், வழிநூல்கள் இலக்கிய இலக்கண தர்க்க நூல்களின் அறிவை வேண்டுதலாலும், இவைகளைக் கற்றுக் கொள்ளுதல் சிறுவர்களுக்கும் இங்கிலிஷ் பாஷையையே அதிகமாய்க்கற்ற மற்றையோருக்கும் மிக அரிது. இவர்களுக்குப் பயன்படத்தக்கனவாய் எளிதான நடையில் நூல்கள் எழுதப்படாமையால், அவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து கவலையுற்று, சிவஞானப் பேறின்மையாலும் கல்வியறிவுக் குறைவினாலும் சந்தேக விபரீதம் நீங்காமையினாலும் எழுதுந் தகுதியில்லாதிருந்தும், சிவபெருமானுடைய திருவருளை முன்னிட்டு ஆசையினால் இந்நூலை எழுதத் துணிந்தேன்.

இதற்குப் பெருந் துணையாயுள்ள நூல் மெய்கண்ட சாத்திரங்களுள் மிக விரிவானதாகிய சிவஞானசித்தியார். அதனுரைகளுட் சிவஞானச் செல்வராகிய சிவாக்கிரயோகியாரது உரை பெரும்பாலும் பின்பற்றப்பட்டது; இதிலுள்ள ஆகமப் பிரமாணங்கள் பெரும்

பாலும் அவருடைய உரையிற் காணப்பட்டவை. வேதப்பிரமாணங்கள் பெரும்பாலும் தயாநந்தசுவாமியுடைய சத்தியார்த்தப் பிரகாசத்தினின்றும் எடுக்கப்பட்டவை. சாயனாசாரியார் மாக்ஸ்முல்லர் முதலியோரது போலிக் கருத்தைக்கொண்டு சிலர் மலைந்துலைவார்களென்றஞ்சியே வேதமந்திரங்கள் எடுத்துக்காட்டவில்லை. அம்மந்திரங்களின் மெய்ப்பொருள் மாத்திரம் தமிழிற் காட்டப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களது சைவவினாவிடை இரண்டாம் புத்தகத்திலிருந்து அநுசரணை யதிகாரப் பகுதிகள் சில எடுத்துப் பேசப்பட்டன.

இந்நூல் சமய அறிவை மாத்திரம் வளர்ப்பதாதலாற் சிவபக்தியை வளர்க்கத்தக்க நூல்கள் இதற்குத் துணையாகக் கற்பது ஆவசியகம். அப்பர்சுவாமி, சம்பந்தசுவாமி, மெய்ப்பொருணயனார், இளையான்குடி மாற நாயனாராகிய அடியார்களுடைய திவ்விய சரித்திரமும், திருவாசகத்திற் போற்றித்திருவகவலும் இந்நாலுக்குத் துணையாகக் கற்கத்தகும். அதிகாரமுறையில் *இக்குறியிட்ட பகுதிகள் கற்கும்போது முதன்முறை விடப்படலாம். பள்ளிக்கூடங்களில் இவைகள் இரண்டாம் ஆண்டிற் படிப்பிக்கப்படத் தக்கவை.

இதிலுள்ள குற்றங்கள் பெரியோரால் எடுத்துக் காட்டப்படில் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ளும் ஆதரமுடையேன்.

சு. சி.

௧௯ ஐப்பசி மீ.

உ

சிவமயம்

# சைவபோதம்

## இரண்டாம் புத்தகம்

## முதல் அதிகாரம் — சைவசமயம்

சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

### 1. சைவசமய மாட்சி

உலகத்திலேயுள்ள சமயங்கள் பல. அவற்றுள் நமது நாட்டிலே வழங்குஞ் சமயங்கள் நான்கு. அவை சைவசமயம், புத்தசமயம், கிறிஸ்துசமயம், இஸ்லாம்சமயம் என்பன. இவற்றுள் புத்தசமயம் 2450 வருஷங்களுக்கு முன் தோன்றியது. கிறிஸ்துவம் 1950 வருஷங்களுக்குமுன் உண்டானதாம். இஸ்லாம்சமயம் 1300 வருஷங்களுக்குமுன் உண்டானது. சைவசமயம் இன்ன காலத்திலே உண்டானதென்பது ஒருவராலும் சொல்லிக் கொள்ள இயலாதது. ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த அருச்சுனன் முதலியோர் சைவசமயிகளாயிருந்தார்கள். அர்ச்சுனனுக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த இராமர் முதலியோருஞ் சைவசமயிகளே. ஆதலாற் சைவசமயம்

சரித்திர காலங்களுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது.

புத்தசமயம் கௌதமபுத்தராலும் அவருடைய சீடராலும் வட இந்தியாவிலே செய்யப்பட்டதெனச் சரித்திரங்கள் சொல்லுகின்றன. o புத்தர் உண்டாக்கிய சமயமாதலால் இதற்குப் புத்தசமயம் என்று பெயர். இஸ்லாம்சமயம் முகம்மது என்பவரால் அராபிய தேசத்திலே உண்டாக்கப்பட்டது. கிறிஸ்துசமயம் கிறிஸ்து என்பவராற் பலஸ்தைன் என்னும் ஊரிலே உண்டாக்கப்பட்டதென்று பலர் சொல்லுகிறார்கள். கிறிஸ்துசெய்த சமயமாதலால் இதற்குக் கிறிஸ்து சமயம் என்றுபெயர். சைவசமயம் என்பதற்குச் சிவத்தை அடையச்செய்யும் சமயம் என்பது கருத்து. சிவம் என்பது கடவுள்.

எல்லாப் புண்ணியங்களையுஞ் சொல்லுவது சைவசமயம் ஒன்றே. கள்ளு முதலிய வெறிப்பொருள்களை உண்ணாமையும், தாழ்ந்த உயிர்களையுங் கொல்லாமையும், புலாலுண்ணாமையும் புண்ணியங்களென்று சைவசமயஞ் சொல்லும். கிறிஸ்து சமயம் இவைகளுள் ஒன்றையாவது புண்ணியம் என்று சொல்லவில்லை. இஸ்லாம் மதம் மேற்சொல்லியவற்றுள் கள்ளுண்ணாமை ஒன்றுமாத்திரம் புண்ணியம் என்று சொல்லும். புத்தசமயம் புலாலுண்ணாமையைப் புண்ணியம்

---

o புத்தி தத்துவத்துக்கு மேற்படாமல் அதையே அந்தமாகக் கொள்ளுஞ் சமயமாதலால் இப்பெயர் வந்ததென்றும், இந்தச் சமயம் கௌதம புத்தருக்குமுன் உள்ளதென்றுஞ் சிலர் கூறுவர்.

என்று சொல்லவில்லை. அன்றியும் எல்லாவற்றிலும் சிறந்த புண்ணியமாகிய கடவுள் வழிபாட்டையும் புண்ணியம் என்று இந்தச் சமயம் சொல்லவில்லை. ஆகவே சுத்தபுண்ணிய மார்க்கத்தைச் சொல்லுவது சைவசமயம் ஒன்றேயாம். சைவசமயத்தின்படி சரியாய் நடப்பவர்கள் ஒவ்வொருவரும் கடவுளை அடைவார்கள். இன்னும் பலவகைகளாலும் சைவசமயம் மற்றைய எல்லாச் சமயங்களிலும் மேலானதா யுள்ளது. அவைகளைப் பின்னே காண்க.

## 2. சைவசமயத்தின் பிரமாண நூல்கள்

ஈரைந்து பத்து என்பது ஓர் உண்மை. இது எக்காலத்திலும் உண்மையா யுள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் ஈரைந்து பத்தேயாம். ஈரைந்து பத்து ஆனது ஒருகுறித்த காலத்திலே அன்று. இப்படியே உண்மைகள் ஒன்றுக்குத் தொடக்கமில்லை. ஆதலால் உண்மைக ளெல்லாம் அநாதி * என்று சொல்லப்படும். சைவசமயக் கொள்கைகள் உண்மைகள். ஆதலாற் சைவசமயக் கொள்கைகள் அநாதி.

ஈரைந்து பத்து என்ற உண்மை விவேகமுள்ள மனிதர் யாவருக்கும் விளங்கும். இதை அறிந்தவர்கள் காலத்துக்குக் காலம் கணக்குப் புத்தகங்களிலே பெருக்கல் வாய்பாட்டிலே எழுதியிருக்கிறார்கள். உபாத்தியாயர்கள் இதைப் பிள்ளை

* அநாதி = அந் + ஆதி = தொடக்க மில்லாதது.

களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதுபோல, கடவுள் அருளிய ஞானத்தைப் பெற்றவர்கள் சைவசமய உண்மைகளை உணருபவர்கள். அவர்கள் அந்த உண்மைகளைக் காலத்துக்குக்காலம் மற்றையோர் அறிவதற்காகச் சொல்லி யிருக்கிறார்கள். கடவுளும் சைவ சமய உண்மையை நேரே உபதேசித்தருளினர். இப்படியாக ஞானிகளாலும் கடவுளாலும் அருளிச் செய்யப்பட்ட சைவசமய நூல்கள் பல. பலவா யிருந்தாலும் அவைகள் சொல்லும் உண்மை ஒன்றேயாம்.

சைவ சமய நூல்கள் வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், மெய்கண்ட சாத்திரம் முதலியனவாம். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு வேதங்களும், காமிகம் முதலிய இருபத்தெட்டு † ஆகமங்களும் கடவுளால் அருளப்பட்டவை. இவைகள் வட மொழியில் உள்ளன; ஒவ்வொரு படைப்புக் காலத் தொடக்கத்திலும் பக்குவமுள்ள ஆன்மாக்களுக்குக் கடவுளாலே உபதேசிக்கப்படுவன. படைப்புக்குத் தொடக்கமில்லாமையால், ஒவ்வொரு சிருட்டியிலும் உபதேசிக்கப் படுவனவாகிய வேதங்களுக்கும்

† காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் ஆகிய இருபத்தெட்டும் சைவாகமங்களாம்.

ஆகமங்களுக்கும் தொடக்கமில்லையாம். தேவாரம் திருநாவுக்கரசுசுவாமிகளாலும், திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளாலும், சுந்தரமூர்த்திசுவாமிகளாலும் தமிழிலே பாடப்பட்டவை. திருவாசகம் மாணிக்கவாசகசுவாமிகளால் தமிழிலே பாடப்பட்டது. திருமந்திரம் திருமூலநாயனரால் தமிழிலே பாடப்பட்டது. மெய்கண்டசாத்திரம் பதினன்கும் தமிழிலே பாடப்பட்டவை. அவற்றின் பெயரும் செய்தவர் பெயரும் வருமாறு:—

| நூல்கள்: | செய்தவர்: |
|---|---|
| 1. திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் |
| 2. திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர் |
| 3. சிவஞானபோதம் | மெய்கண்டதேவநாயனர்; (ரௌரவ ஆகமத்தின் பகுதி; மொழிபெயர்ப்பு) |
| 4. சிவஞானசித்தியார் | அருணந்தி சிவாசாரியர் |
| 5. இருபாவிருபது | ஷை |
| 6. உண்மைவிளக்கம் | மனவாசகங்கடந்ததேவநாயனர் |
| 7. சிவப்பிரகாசம் | உமாபதிசிவாசாரியர் |
| 8. திருவருட்பயன் | ஷை |
| 9. வினவெண்பா | ஷை |
| 10. போற்றிப்பஃறொடை | ஷை |
| 11. கொடிக்கவி | ஷை |
| 12 நெஞ்சுவிடுதூது | ஷை |
| 13. உண்மைநெறிவிளக்கம் | ஷை |
| 14. சங்கற்பநிராகரணம் | ஷை |

மேலே சொல்லப்பட்டவைகள் ஞான நூல்கள் ஆகும். இவைகள் சைவ சமயத்துக்குப் பிரமாணமாயுள்ளவைகள். இவைகள் தவிரப்

புராணங்கள் இதிகாசங்க ளென்று இரண்டு வகையான சைவ நூல்களுண்டு. இவைகள் பெரும்பாலும் பழையசரித்திரங்களைச் சொல்லுவன. இவைகளுட் பல, குறைந்த நிலையிலுள்ளவர்களுக்கும் மிக்க நன்மை பயக்கக் கூடியவைகள்.

புராணங்கள் கடவுளுடைய திருவருட் சிறப்பைச் சொல்லுவன; இவைகளைப் படிப்பதாற் சிவபத்திவளரும். * இவைகளிலே சமயஉண்மைகளை விளக்குகின்ற பகுதிகளுமுண்டு. இவ்வுண்மைகள் தனியே சொல்லப்பட்டால் வாசிக்கிறவர்கள் இலகுவாய் மறந்துவிடுவார்கள். அவைகள் புராணக் கதைகளிலே வரும்போது மனசிலே நன்ருகப் பதிகின்றன. உதாரணமாக, எவருக்காகவாயினும் பொய்சொல்லல் ஆகாது என்பது ஒரு சமய உண்மை. இந்த உண்மை தனியே சொல்லப் பட்டால் இதை மறப்பது இலகுவா யிருக்கும். இதை அமைத்திருக்கும் இனிய ஓர் கதை இருந்தால்

---

* சிவபிரானும் கந்தசுவாமியாரும் திருமணம் செய்தார்களென்று கந்தபுராணம் கூறுகின்றது. கடவுள் திருமணம் செய்தார் என்பது சற்றேனும் பொருந்தாது உமாதேவியார் சிவபிரானுடைய சத்தி; தெய்வயானை அம்மையாரும் வள்ளியம்மையாரும் கந்தசுவாமியாருடைய சத்திகள். கடவுள் சத்தியோடுகூடி உலகங்களைப் படைக்கச் சங்கற்பித்தலையே கடவுளுடைய திருமணமென்று புராணம் கூறுவதென எமது நாவலர் பெருமான் சுப்பிரபோதத்தில் எழுதியருளினர். சுந்தரமூர்த்தி நாயனர் பரவையாரிலும் சங்கிலியாரிலும் ஆசைப்பட்டதும் அவர்களுக்கு ஞானேபதேசம் செய்தற் பொருட்டென்றே கொள்ளுதல் தக்கதாம்.

அது நினைவி லிருக்கும். கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியன புராணங்களிற் சிறந்தன. இவற்றிற் சில பகுதிகளுக்கு வெளிப்பொருள் கொள்ளலாகாது. சைவ இதிகாசங்கள் அடியார்களுடைய சரித்திரங்களைச் சொல்லுவன.

## 3. சைவாபிமானம்

சைவ சமய மொன்றே நம்மைப் பிறவித் துன்பத்தினின்றும் நீக்கிக் கடவுளோடு சேர்க்கத் தக்கதென்றுமேலே காட்டப்பட்டது. குழந்தைக்கு இவரே பிதா என்று காட்டுபவள் அந்தக் குழந்தையினுடைய தாய். அதுபோலக் குழந்தைகளாகிய நமக்குக் கடவுளைக் காட்டுவது நமது அருமையான சைவ சமயமாகிய தாயாம். நம்மைப் பெற்ற தாயிலும் பார்க்க அதிகமாக இந்தத் தாயை நாம் நேசித்து இதை யாவரும் அறியச் செய்வது நம்முடைய கடனாகும்.

நமது நாட்டிலே நமது சமயம் பலவிதமான ஏதுக்களால் வருந்தியது. முன்னுளிலே நமது நாட்டை ஆண்டுவந்த பறங்கியர் முதலானவர்கள் சைவசமயமாகிய நமது தாயைப் பலவகையானும் வருத்தினார்கள்; இங்கிலிஷ் ராச்சியம் வந்தபின்பு அரசாட்சியாரால் துன்புறும விருந்தாலும், வேறு வழியாகப் பெருந் துன்பம் அடைந்தது. ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களி லுள்ளவர்கள் கிறிஸ்து சமயத்தை நாட்டுதற்காக மிஷனரிமாருக்குச் சம்பளங் கொடுத்து இவ்வூருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். கிறிஸ்து சமயத்தை நாட்டுவது

என்றாற் கருத்தென்ன? சைவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதுதானே. சைவர்கள் கிறீஸ்தவர்களானாற் சைவசமயத்தை அழிப்பதாக முடியுமல்லவா? எமது நாடு இப்போது எமது ஆட்சியில் வந்துவிட்டபடியால் எமது சமயத்தை நாம் இலகுவாக வளர்க்கலாம்.

சைவப் பிள்ளைகளைச் சைவப் பள்ளிக்கூடங்களிற் படிக்கச் செய்யவேண்டும். வேண்டிய இடங்களிற் சைவப் பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். அப் பள்ளிக்கூடங்களிலே ஒவ்வொரு நாளும் சைவசமயத்தைப் போதிக்கவேண்டும். முதியோர்களுக்குஞ் சைவப் பிரசங்கஞ் செய்து வரல்வேண்டும். கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் பிழையற நடத்துதல்வேண்டும். அவைகளை நடத்துபவர்கள் பொருள் வரவையும் மகிமையையும் நினையாமற் சைவசமயத்தை வளர்த்துச் சிறப்பிப்பதிலேயே நாட்டமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

## இரண்டாம் அதிகாரம் - உயிரின் நிலைமை

சிவப்பிரகாசம் (2—1)

எண்ணரிதாய் நித்தமா யிருண்மலத்தி லழுந்தி
யிருவினையின் றன்மைகளுக் கீடான யாக்கை
யண்ணலரு ளானண்ணி யவையவரா யதனால்
அலகினிகழ் போகங்க ளருந்து மாற்றாற்
புண்ணியபா வம்புரிந்து போக்குவர வுடைத்தாய்ப்
புணருமிருள் மலபாகம் பொருந்தியக்கா லருளால்
உண்ணிலவும் ஒளியதனா லிருளகற்றிப் பாத
முற்றிடுநற் பசுவர்க்க மெனவுரைப்ப ருணர்ந்தே.

## 1. ஆன்மா, கடவுள், பாசம்

"உன்னுடைய உடம்பு பருத்துவிட்டது" என்று உன்னைப் பார்த்து நான் சொல்லுகிறேன். உன்னுடைய உடம்பு என்றதினாலே நீ வேறு, உடம்பு வேறு என்பது விளங்குகிறது; உன்னுடைய புத்தகம், உன்னுடைய வீடு என்று சொல்லும்போது நீயும் புத்தகமும் வேறு, நீயும் வீடும் வேறு ஆதல் போல. நீ என்பது உயிர். உயிருக்கு ஆன்மா என்று பெயர். *நீ என்று குறிப்பதும் ஆன்மா. அவன் என்று குறிப்பதும் ஆன்மா. நான் என்று குறிப்பதும் ஆன்மா. நாங்கள் எல்லோரும் ஆன்மாக்களே. என்னுடைய சிநேகிதன் இறந்துபோனான் என்பதின் கருத்தென்ன? என்னுடைய சிநேகிதனாகிய ஆன்மா, தான் இருந்த உடம்பினின்றும் நீங்கிவிட்டதென்பதே. எனவே, ஆன்மா அழியவில்லை என்பது விளங்குகின்றது. உடம்பு அழிந்துபோவதை நாம் காண்கிறோம். ஆன்மாக்களாகிய நாங்கள் ஒரு காலத்தும் அழிவதில்லை. ஆன்மாவானது காலத்துக்குக் காலம் எடுத்துக்கொள்ளும் உடம்பே அழிந்துபோவது.

இந்த உடம்பை ஆன்மா எடுப்பதும் விடுவதும் உடம்பினுடைய விருப்பமா? அல்லது ஆன்மாவி

* ஆயினும் "உன்னுடைய ஆன்மா" என்று சிலர் அறியாமையாற் சொல்லுகிறார்கள்; அப்படியானால் நீ ஆன்மா அன்றென முடிகின்றது. ஆன்மாவுக்கு ஆன்மாவாயிருக்கிற கடவுளை உன்னுடைய ஆன்மா என்று சொல்லலாம்.

னுடைய விருப்பமா? வெறும் உடம்பிற்கு அறிவில்லை. ஆதலால் உடம்பு ஒரு உயிரை விரும்ப இயலாது. ஆன்மாவானது ஒரு உடம்பைத் தன்னுடைய விருப்பத்திற்கு எடுப்பதாகவும், விடுவதாகவுந் தோன்றவில்லை. ஏனெனில், எத்தனையோ ஆன்மாக்கள் கொடிய நோயுள்ள உடம்பை எடுத்திருக்கின்றன. அவைகள் தங்கள் எண்ணப்படி உடம்புகளை எடுப்பதானால், இப்படியான உடம்புகளை எடுக்கமாட்டா. ஆதலால், ஆன்மாவினுடைய விருப்பமுமன்று. உடம்பு விரும்பவும் மாட்டாது. ஆதலால் இது ஆன்மாவுக்கும் உடம்புக்குந் தலைவராகிய கடவுளுடைய செயலேயாம்.

கடவுள் ஆன்மாக்களுக்கு உடம்புகளை ஏன் கொடுக்கிறார்?* தம்முடைய நன்மைக்காகவா? அல்லது ஆன்மாக்களாகிய எம்முடைய நன்மைக்காகவா? கடவுளுக்குத் தேவையானது ஒன்றுமில்லை. ஆதலால் அவர் ஆன்மாக்களுடைய நன்மைக்காகவே அவைகளுக்கு உடம்பைக் கொடுக்கிறார். நமக்கு எந்த நன்மை வேண்டியிருக்கிறது? நமக்கு என்ன இடர் இருக்கிறது? என்ன குறைமை, என்ன இடர்களைத் தீர்த்தற்

---

* கடவுள் தம்முடைய நயத்தையே விரும்பித் தம்மை வணங்கவும், தமக்கு ஏவல் செய்யவும் மனிதரைப் படைத்தாரென்று சில புரச்சமயங்கள் சொல்லும். கடவுளை வழிபடுவதனால் அவருக்கு ஒரு லாபமுமில்லை. அவருக்கு ஏவலாளர் வேண்டியதுமில்லை.

காகக் கடவுள் ஆன்மாக்களுக்கு உடம்பைக் கொடுக்கிருர்?

எங்களிலே எத்தனையோ விதமான தீய குணங்கள் உள்ளன. பலவகைப்பட்ட தீய ஆசைகள் நம்மைப் பீடித்திருக்கின்றன. இந்த ஆசைகள் தீய நினைவுகளை எழுப்புகின்றன. தீய நினைவுகளால் தீய செய்கைகள் உண்டாகின்றன. இந்தத் தீய குணங்கள் எல்லாவற்றையும் எங்களிலே உண்டாகச் செய்யும் ஒரு பொருள் இருக்கிறது. அந்தப் பொருள் நம்மை மயக்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு ஆணவம் என்று பெயர். இந்த ஆணவத்திலிருந்து ஆன்மாவை விடுவித்து, ஆன்மாவுடைய மயக்கத்தைத் தீர்ப்பதற் காகவே கடவுள் ஆன்மாக்களுக்குச் சரீரத்தைக் கொடுக்கிருர். வியாதி உடம்பைப் பீடித்து நிற்பதுபோல, ஆணவமானது ஆன்மாவைப் பீடித்து நிற்கின்றது. ஒரு வைத்தியன் வியாதிக் காரனை வைத்தியசாலையில் வைத்து மருந்து கொடுத்துப் பரிகரிப்பதுபோல, கடவுள் ஆணவ மாகிய வியாதியை நீக்குதற்காக, உடம்பாகிய வைத்தியசாலையில் இட்டுத் தமது திருவருளாகிய மருந்தைக் கொடுத்து அதைப் போக்குகிருர். இந்தக் காரணத்தினலே சிவபெருமானுக்கு வைத்தியநாதன் என்று பெயர். நமது சரீரத்திலே ஒரு பகுதியில் ஒரு கொப்புளம் இருந்தால் வைத்தியன் அதைக் கத்தியாற் கீறுகிருன். கீறும் போது நமக்குத் துன்பமாயிருக்கிறது. ஆயினும்

அது அந்நேரம் துன்பமல்லாமல், பின்பு நமக்கு நன்மையாகும்; அதுபோல மகா வைத்தியராகிய கடவுள் நமக்குப் பலவகையான துன்பங்களையும் வரச்செய்வது நம்முடைய நன்மைக்காகவேயாம். அப்படி வருந்துவதினால் நம்முடைய கன்மங்கள் தொலையும்; ஆணவ வலி குறையும்.

ஆணவத்தை இரண்டு வழியாகப் போக்கலாம். அது எழும்பின உடனே அதை அடக்குதல் ஒரு வழி; இது நல்ல வழி. அதை அதன் வழியில் விட்டுத் துட்ட கர்மங்களைச் செய்ய விடுதல் மற்ற வழி; இது தீய வழி; உதாரணமாக, ஆணவத்தினாலே கோபம் உண்டாகிறது. இந்தக் கோபத்தைக் கடவுட்பத்தியினாலே அடக்கிவிட்டால் அது அவ்வளவிலே கெடுகின்றது. அதை வளர விட்டால், நாம் அதனாலே பெரும் பொல்லாங்கு செய்து இந்தப் பிறவியிலும் மறு பிறவிகளிலும் வருந்திய பின்பு அந்த ஆணவம் தொலைகின்றது. "ஆணவத்தை அடக்காமல் விட்டாலும் கடைசியில் அழிகின்றதுதானே; நாம் அதனுடைய வழியில் நின்று பாவங்களைச் செய்தாலும் அது பின்பு கெடுந்தானே; நாம் அதை அடக்கவேண்டியது தென்ன?" என்று ஒருவர் கேட்கக்கூடும். ஒரு வீட்டிலே நெருப்புப் பொறி பறந்தால் அதை உடனே அவித்துவிடுவது எவ்வளவு நன்மை? அதை எரிய விட்டால் வீடு முழுவதும் எரிந்தபின்பு தானாக அவியுந்தானே. இது எவ்வளவு நஷ்டம்? "நமக்கென்ன, வீடு எரிந்தபின்பு நெருப்பு அவியும்

Selvanayaky.

அதைத் தணிப்பானேன்" என்று யாராவது சொல்லுவார்களா? ஆணவத்தை அடக்காமல் விடுதல் வீட்டை எரிய விடுவதுபோலாகும்.

ஆணவத்தை அடக்கிச் செய்யுஞ் செய்கை நல்ல கர்மம் என்று சொல்லப்படும். அதை அடக்காமற் செய்யுஞ் செய்கை தீய கர்மம் என்று சொல்லப்படும். இந்தக் கர்மங்களும் ஆன்மாவைச் சேர்ந்து நிற்கின்றன. நல்ல கர்மம் செய்கிறவர்கள் இன்பத்தை அனுபவிப்பார்கள். தீய கர்மஞ் செய்கிறவர்கள் துன்பத்தை அனுபவிப்பார்கள். அனுபவித்தலாலே கர்மங்கள் தொலைகின்றன.

இப்படியாக ஆன்மாவோடு தொடர்புள்ள பொருள்கள் மூன்று உண்டு. அவையாவன: ஆன்மாவை அடக்கித் தீய எண்ணங்களை எழுப்பி விடுவதாகிய ஆணவமும், அந்த ஆணவத்தால் ஆன்மா செய்யுங் கன்மமும், கன்மத்தைச் செய்கிறதற்குக் கருவியா யிருக்கிற சரீரமுமாம். இம்மூன்றும் ஆன்மாவைக் கடவுளோடு சேர விடாமல் அதைத் தடுத்து வைத்துக்கொண் டிருப்பதனாலே, இவைகள் பாசமெனப்படும். இம்மூன்றிலிருந்தும் ஆன்மா விலகினால், இவைகளால் வருகின்ற துன்பங்கள் நீங்கிக் கடவுளோடு சேர்ந்து நிற்கும். இவைகளிலிருந்து நீங்கின நிலைக்கு வீடு அல்லது மோட்சம் என்று பெயர். நாமெல்லோரும் இந்த மூன்று பாசங்களினின்றும் விலகிக் கொள்ளக் கடவுளை வழிபடல் வேண்டும்.

நாமும் நம்மால் இயன்ற அளவு முயற்சிசெய்தல் வேண்டும். தீய செய்கைகள் தீய எண்ணங்களில் இருந்து உண்டாவன. தீய எண்ணங்கள் சில காலங்களிலே தனித்திருக்கும்போதும், சில காலங்களிலே ० தீயவர்களோடு கூடுவதினாலும் உண்டாவன. ஆதலால் நாம் தீயவர்களோடு கூடுதல் ஆகாது. தனித்திருக்கையில் தீய எண்ணங்கள் தொடங்கும்போது அவைகளை உடனே ஓட்டல் வேண்டும். தனித்திருக்கும்போது அவைகள் தொடங்காமைக்காகக் கடவுளைத் தியானித்தல் வேண்டும்.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை
என்றும் சிவன்ற னிணை"

நல்லவர்களோடு கூடவேண்டும். நல்லவர்களுடைய சரித்திரங்களை வாசித்தல் வேண்டும். நல்லெண்ணம் நற்பேச்சு நற்செய்கையாகிய இவைகளை வளர்த்தல் வேண்டும்

## 2. மனிதப் பிறவியின் சிறப்பு

அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்குநா றுயிரத்தாய்
உண்டுபல் யோனியெல்லாம் ஒழித்துமா னுடத்துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்.

---

० "தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது"

ஆன்மாக்கள் பலவகையான உடம்புகளை எடுக்கின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்திலே,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என்று கூறியருளினர்.

ஆன்மாக்கள் மனிதராகப் பிறக்கின்றன; மிருகங்களாகப் பிறக்கின்றன; பட்சிகளாகப் பிறக்கின்றன; மரஞ்செடிகளாகப் பிறக்கின்றன; தேவராகப் பிறக்கின்றன; இன்னும் பல வகையாகப் பிறக்கின்றன. இவைகளுள், மரஞ்செடி முதலியவைகள் முன் செய்த கர்மத்தின் பலனை அநுபவிப்பன. அவைகள் அதிகமாகக் கர்மம் செய்வதில்லை. ஆதலால் அவைகளுக்கு ஆணவம் தீர்வது குறைவு. மிருகம் பட்சி முதலியன கர்மம் செய்வன; ஆயினும், அவைகள் இது நல்லது இது தீயது என்று பகுத்தறியமாட்டாமல் இருத்தலால் தங்களைத் திருத்திக்கொள்ள இயலாதன. மனிதப்பிறவியிலே ஆணவம் முதலிய பாசங்களினின்றும் நீங்கி மோட்சம் அடைகிறதற்கு வேண்டிய வழிகளெல்லாம் இருக்கின்றன.

இந்த உலகத்திலும் வேறு உலகங்களிலும் கோடிக்கணக்கான பலவகைப்பட்ட பிறவிகள்

உண்டு. இவ்வளவு பிறவிகளில் மிக அரிதாகிய மனிதப்பிறவி நமக்குக் கிடைத்தது எவ்வளவு பெரிய பாக்கியம்! இவ்வளவு அருமையாக இந்த மனிதப்பிறவி நமக்குக் கிடைத்திருக்கிறபொழுது, இதனல் நமக்கு வரக்கூடிய நன்மை ஒன்றையும் நாம் தவறவிடலாகாது. ஒவ்வொரு நிமிஷமும் இந்தப் பாசங்களை நீக்குதற்கு நாம் முயற்சி செய்தல் வேண்டும். நாம் மனித உடம்போடு இருக்கும் ஒவ்வொரு நிமிஷ நேரமும் கோடி பொன்னிலும் பார்க்க விலையுள்ளது. மனிதப் பிறவியிலும் குருடராய் மூடவராய்ச் செவிடராய்ப் பிறவாமல், இழிவான சமயங்களிற் பிறவாமல், மோட்சத்தைத் தந்து கடவுளோடு சேர்க்கத் தக்க தாகிய சைவ சமயத்திலே நாம் பிறந்தது எல்லா வற்றிலும் பெரிய பாக்கியம். ஆதலாற் சைவர்க ளாகிய நாங்கள் மற்றைய மனிதரிலும் பார்க்க மிக அதிகமாகக் கடவுட்பத்தி யுள்ளவர்களாய், உலக இன்பங்களை விரும்பாதவர்களாய், மோட்ச இன்பத்திலே கண்ணுள்ளவர்களாய், இடையரு நல்லொழுக்க முள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

---

## மூன்ரும் அதிகாரம் - பாசங்கள்

ஒரு வேந்தன் சண்டை செய்யத் தொடங்கு முன் தன் எதிரியினுடைய சேனைப்பலம், செல்வம், போர்த்தொழிலுக்குரிய கருவிகள் முதலாயவற்றை நன்ருக ஆராய்ந்து அறிதல் வேண்டும். எதிரி

யுடைய பலத்தைக் குறைவாக நினைத்துச் சண்டைக்குப் போனால் தோல்வியே வந்து சேரும். அதுபோல, நம்மைப் பிடித்திருக்கும் பாசங்களை நாம் வெல்லவேண்டுமானால், அவைகளுடைய பலத்தையுந் தன்மையையும் நன்றாக உணர வேண்டும். பாசங்களுள் தலையா யிருப்பது ஆணவமாம்.

## 1. ஆணவம்

ஆணவமானது ஆன்மாவின் அறிவைத் தடுத்து நிற்பது. இதனாலே ஆன்மாவிலே ஆசை கோபம் மயக்கம் கொடுமை முதலிய தீயகுணங்கள் உண்டாகின்றன. "நான் பெரியவன், நான் என்னுடைய சுகங்களை நினைக்க வேண்டும்" என்று சொல்லப்பண்ணும் அகந்தையையும், "இது என்னுடைய பொருள், இது பழுதின்றி இருத்தல் வேண்டும்" என்று சொல்லப்பண்ணும் மமதை யையும் அது உண்டாக்கும்; மிகுந்த வல்லமை யுள்ளது; ஆன்மாவோடு அநாதியாயுள்ளது. ஆன்மா எப்போது உண்டோ அப்போது ஆணவமும் அதனோடு உள்ளது. ஆதலால் அதற்குச் சகசமலமென்று பெயர். ஆன்மாவுக்குத் தொடக்கம் இல்லாததுபோல ஆணவத்திற்குந் தொடக்கமில்லை.

இந்த ஆணவத்தை வெல்லுதற்கு நமக்குத் துணையாயுள்ளது கடவுளுடைய திருவருளாம். கடவுள் நம்மீது தமது திருவருளை இடைவிடாது

பொழிந்துகொண் டிருக்கிறார். அந்தத் திருவருளை நாம் ஏற்றுப் பயன்படுத்தினால், இந்த ஆணவத்தின் வல்லமையைத் தடுப்பது மிகவும் இலகுவாகும். வேந்தனுக்கு எவ்வளவு சேனைகள் இருந்தாலும் அவைகளை அவன் போர்க் களத்துக்குக் கொண்டுபோகாவிட்டால் அவன் தோல்வியடைவது நிச்சயம். அதுபோலக் கடவுளுடைய அளவில்லாத திருவருள் இருக்கவும், நாம் அதைப் பெறுதற்குத் தகுதியில்லாம லிருந்தால் நாம் ஆணவத்திற்குத் தோற்பது நிச்சயம். ஆணவமானது எப்போதும் நம்மோடுள்ளது. அது எப்போதும் நம்மை மயக்க முயற்சி செய்வது. நாம் அதை வெல்லவேண்டுமானால், எப்போதும் கடவுளுடைய அருளைப் பயன் படுத்துதற்காக அதைப் பாராட்டி அவரிலேயுள்ள அன்பை வளர்த்தல் வேண்டும். ஆணவம் முயற்சி செய்யும்போது ஏதாயினும் ஒரு தீய எண்ணத்தை மனத்திலே ஆக்கும்; ஆக்கும்போது நாம் விழிப்பாயிருந்து அதை ஓட்டல்வேண்டும். நாம் இருக்கும் இடத்துக்கு ஒரு விஷப்பாம்பு வந்தால், நாம் எவ்வளவாகப் பயந்து அதைக் கலைத்து விடுகின்றோம்; யாராவது அதைத் தூக்கிக் கழுத்திற் போட்டுக் கொள்வார்களா? இல்லையே. அதுபோல, தீய எண்ணங்கள் வந்தால் அவைகளுக்கு இடங் கொடுத்து அவைகளுடைய வழியிற் போகலாகாது. பாம்பு வந்து நம்மைக் கடிக்கும்படி விட்டு அதன் பின்பு வைத்தியஞ் செய்வது எவ்வளவு புத்தியீனம். அதுபோல, ஒரு தீய

எண்ணம் வந்து தீயசெயலாக முடிந்தபின்பு, அதனாலே பாடுபடுவது பெரும் புத்தியீனம். அன்றியும், ஒருமுறை ஒரு தீய எண்ணத்திற்கு இடங் கொடுத்தால் பின்பு அதை ஓட்டுதல் அரிது. ஆதலால், ஆணவமானது தீயஎண்ணங்களை எழுப்பிவிடும்போது கடவுளுடைய திருவருளால் அதை அடக்கி அதனுடைய வல்லமையைக் கெடுத்துவிடல் வேண்டும்.

## 2. மாயை

ஆணவம் முயற்சி செய்தற்குக் கருவியா யுள்ளது சரீரம். ஆணவத்தினாலே நமக்கு ஒருவனிலே கோபம் உண்டானால், கோபத்தினாலே அவனுக்கு அடிப்பது நமது சரீரம். இப்படி இருத்தலினாலே சரீரம் பொல்லாததென்று சிலர் சொல்லுவார்கள். உள்ளபடி சரீரத்திலே ஒரு குற்றமுமில்லை. 'எய்தவ னிருக்க அம்பை நோவ தேன்?' என்பதுபோல, பொல்லாங்கு செய்விக்கிற ஆணவ மிருக்கச் சரீரத்திலே குற்றஞ் சொல்லுவ தேன்? சரீரம் தானாகப் பொல்லாங்கு செய்யா விட்டாலும், அது பெரும்பாலும் ஆணவத்துக்குத் துணையாகி நிற்பதால், அதையும் நாம் அடக்கி வைத்துக் கீழ்ப்படுத்தல் வேண்டும். இந்தச்சரீரம் சில காலங்களிலே கடவுளுடைய திருவருளின் முயற்சிக்கு இடமாய் நின்று புண்ணியஞ் செய்யவும் நல்லறிவை விளக்கவும் கருவியாய் இருக்கும்.

நமக்குப் பல சரீரங்கள் உள்ளன. இரத்தம் தசை எலும்பு தோல் முதலியவற்றால் ஆக்கப் பட்டதாய் நாம் காணுகிற சரீரம் ஒன்று இருக் கின்றது. இதற்குத் தூலசரீரம் என்று பெயர். இது தவிர இரண்டு சரீரங்களுண்டு. அவை சூக்கும சரீரமும் காரண சரீரமுமாம். சூக்கும சரீரம் உணருதல் நினைத்தல் விரும்புதல் முதலிய உட்செய்கைகளைச் செய்தற்குக் கருவியா யுள்ளது. காரண சரீரம் கடவுளுடைய திருவருளினால் ஆன்மாவினுடைய அறிவையும் தொழிலையும் விளக்கி ஆனந்தத்துக்குக் காரணமா யுள்ளது.

தூல சரீரத்திலே அன்னமயகோசம் பிராண மயகோசம் என்று இரண்டு பகுதி உண்டு. அன்னமயகோசம் வெளிப்பகுதி. பிராணமய கோசம் அன்னமயகோசத்தை ஒருவாறு இயக்கு வது; இயக்குவதால் பிராணமயம் என்னும் பெயரைப் பெறும். சூக்கும சரீரத்துக்கு மனோமய கோசம் என்றும் பெயர். காரண சரீரத்திலே விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்று இரண்டு பகுதிகளுண்டு. விஞ்ஞானமயகோசம் ஞானத்தைக் கொடுப்பது. ஆனந்தமயகோசம் ஆனந்தத்தைக் கொடுப்பது. ஆகவே மூன்று சரீரங்களும் ஐந்து கோசங்களாக உள்ளன. ஒருவன் இறக்கும்போது முதல் இறப்பது அன்னமயகோசம். பின்பு இறப்பது பிராணமய கோசம்; மற்றவைகள் அழிவதில்லை. அவை சர்வ சங்காரத்தில் அல்லது முத்திநிலையில் அழியும்.

தூலசரீரம் நீங்கிய பின்பு; (க) சில ஆன்மாக்கள் சூக்கும சரீரந் திரிந்த வேறு சரீரத்தோடு இன்பத்தை அல்லது துன்பத்தை அனுபவித்துக் கொண் டிருப்பதுண்டு. இன்பத்தை அனுபவிக்கும்போது சூக்கும சரீரம் பூதசார சரீரமாகின்றது; துன்பத்தை அனுபவிக்கும்போது யாதனா சரீரமாகின்றது. புண்ணியம்செய்த ஆன்மா இன்பத்தை அனுபவிக்கும். பாவஞ் செய்த ஆன்மா துன்பத்தை அனுபவிக்கும். இன்பத்தை அனுபவிக்கும் நிலைக்குச் *சுவர்க்க மென்று பெயர். துன்பத்தை அனுபவிக்கும் நிலைக்கு நரகம் என்று பெயர். இப்படி அனுபவித்த பின்பு ஆன்மாவானது பிறவியை எடுக்கின்றது. அந்தப் பிறவிக்கு வேண்டிய தூலசரீரம் சூக்கும சரீரத்தைச் சார்ந்து உண்டாகின்றது. நாம் ஒரு விளா மரத்தை வெட்டினால், பின்பு அதினுடைய வேரிலிருந்து ஒரு மரம் முளைக்கின்[illegible]. அது போலத் தூலதேகம் அழிந்த பின்ன[illegible] சூக்கும தேகத்தைச் சார்ந்து வேறு தூலதேகம[illegible]ண்டாகின்றது. (உ) சில ஆன்மாக்கள் சும்ம[illegible]ருந்து விட்டுப் பிறவியை எடுக்கும். (ங) சில ஆன்மாக்கள் உடனே பிறவியை எடுப்பதுமுண்டு.

குறிப்பு: "மனித சரீரம் எடுத்த ஆன்மா மிருக சரீரத்தை எடுக்குமா"? என்று கேட்கக்

---

* விதிப்படி சிவபுண்ணியஞ் செய்தோர் பதமுத்தி என்னும் நிலையை அடைவர்.

கூடும். எடுக்க மாட்டாது என்று சிலர் எண்ணு கிறார்கள். இது பிழையான எண்ணம். அது எடாது என்பதற்கு அவர்கள் சொல்லுகிற நியாயம் என்னவென்றால், "ஆன்மா வர வர நயப்படு கின்றது. ஆன்மா நயப்படுதற்கு அடையாளம் அதனுடைய சரீரம் நயப்படுதல். மிருக சரீரம் மனித சரீரத்திலும் நயந்ததன்று. ஆதலால் மனிதசரீரம் எடுத்த ஆன்மா மிருக சரீரத்தை எடுக்கமாட்டாது" என்பதே. இவர்களுடைய நியாயத்திலே பிழை எதுவென்றால், "ஆன்ம நயத்துக்குச் சரீர நயம் அடையாளம்" என்பது. சரீர நயத்துக்கும் ஆன்ம நயத்துக்கும் தொடர்பு இல்லை. ஆன்மநயம் குணத்தினலே விளங்கும். கொடிய தீயரான மனிதரிலும் பார்க்க நற்குண முள்ளதாகிய பசு மேலான ஆன்மா. மனிதருக் குள்ளும் நல்ல சரீரமும் விவேகமு முள்ளவர்கள் தீயவர்கள[illegible] இருக்கிறார்கள். மெலிந்த சரீரமும் விவேகக்[illegible]றைவு முள்ளவர்கள் அநேகர் நற்குண முள்ள[illegible]ளா யிருக்கிறார்கள். நற்குண முள்ள வர்க[illegible]யர்ந்த ஆன்மாக்கள். ஆதலாற் சரீரம் குறைவா[illegible]ய் இருத்தலினலே ஆன்மாவும் தாழ்ந்த தாய் இருத்தல் வேண்டுமென்ற எண்ணம் பிழை. மனித சரீரம் எடுத்த ஆன்மா எந்தச் சரீரமும் எடுக்கலாம். அப்படி எடுக்கக்கூடுமாதலினலேதான் அப்பர் சுவாமிகள்:

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தரல் வேண்டுமிவ் வையகத்தே

தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே"

என்று சொல்லியருளினர்.

கர்மம் செய்தற்கு நமது உடம்பு மாத்திரம் போதியதன்று. இந்த உடம்பு இருப்பதற்கு உலகம் வேண்டும். இது நிலைப்பதற்கு உணவுப் பொருள்கள் வேண்டும். ஆணவம் முயற்சிசெய்து ஆசை முதலிய வற்றை உண்டாக்குதற்குப் பிற பொருள்கள் வேண்டும். ஆகவே ஆணவமானது முயற்சி செய்தற்கு நமது உடம்பும் உலகங்களும் உலகங்களிலே உள்ள அநேக பொருள்களும் வேண்டும்.

உடம்புகளும், உலகங்களும், பிற உயிரில்லாப் பொருள்களும் மாயை என்னும் பொருளிலிருந்து தோன்றுவன. மாயை மிகவும் நுண்மையான பொருள். காற்றானது தண்ணீரிலும் எவ்வளவு நுண்ணியதோ, அதிலும் பார்க்க ஆகாசமானது காற்றிலும் நுண்ணியது. ஆகாசம் காற்றிலும் எவ்வளவு நுண்ணியதோ அதிலும் மாயையானது ஆகாசத்திலும் நுண்ணியது. மாயையானது சுத்த மாயை சுத்தாசுத்தமாயை அசுத்தமாயை என மூன்று வகைப்படும். இவைகள் சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆத்மதத்துவம் என்று முறையே சொல்லப்படும். மாயையை இரண்டாக வகுக்கும்போது, சுத்தாசுத்தமாயை அசுத்த மாயையில் அடங்கும்.

### சிவதத்துவங்கள் ரு

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை 5

### வித்தியாதத்துவங்கள் எ

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை. 7

### ஆத்தும தத்துவங்கள் உச

அந்தக்கரணம்:- மனம், புத்தி, சித்தம்,† அகங்காரம் 4
ஞானேந்திரியம்:- காது, துவக்கு, கண், நாக்கு, மூக்கு 5
கர்மேந்திரியம்:- வாய், கால், கை, பாயு, உபத்தம் 5
தன்மாத்திரை:- சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் 5
பூதம்:- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் 5

24

ஆகத் தத்துவங்கள் 36

துவக்கு என்பது தோலிலே சூடு, குளிர், மென்மை, கடினம் ஆகிய இவைகளைக் காட்டுவது. ரசம் - சுவை. கந்தம் - மணம்.

தூலசரீரமானது பூதங்களாலும், சூக்கும சரீரமானது சூக்குமபூதம் முதல் வித்தியா தத்துவமீறான தத்துவங்களாலும், காரண சரீரமானது சிவதத்துவங்களாலும் ஆக்கப்பட்டன.

குறிப்பு:— ஆணவத்தின் மூலமாக்கியினலே நான் இராமனிலே கோபங் கொள்ளுகிறேன்.

† சித்தத்தை மனத்தோடு சேர்த்து, அதற்குப் பதிலாகக் குணத்தை ஒரு தத்துவமாகக் கொள்ளுவர் சிலர்.

இராமன் என்னிலே கோபங்கொள்ளுகிறான். இராமனில்லாவிட்டால் எனக்கு அந்தக் கோபம் உண்டாகாது. உண்டாகாமையால் ஆணவம் முயற்சிசெய்ய இயலாது. ஆதலால் என்னிலிருக்கும் ஆணவம் முயற்சி செய்தற்காகவே கடவுள் இராமனைப் படைத்தார் என்று சிலர் சொல்லக் கூடும். இந்த எண்ணம் மிகப் பிழையான தென்பது மற்றப் பக்கத்தைப் பார்க்கும்போது இலகுவாக விளங்கும். இராமனும் என்னிலே கோபிக்கிறான்; அப்படியானால் இராமனுக்காகக் கடவுள் என்னைப் படைத்திருத்தல் வேண்டும்; இராமன் எனக்காகப் படைக்கப்பட்டானென் பதும், இராமனுக்காக நான் படைக்கப்பட்டே னென்பதும் ஒன்றுக்கொன்று மாறுனவை. ஒருவருக்காக இன்னொருவர் படைக்கப்படவில்லை. உலகத்திலேயுள்ள எல்லா உயிர்களும் அவை அவை ஈடேறுதற்காகப் படைக்கப்பட்டவை. ஒன்றுக்காக மற்றொன்று படைக்கப்படவில்லை. * ஆயினும் அவைகள் தங்கள் தங்கள் முயற்சி களைச் செய்யும்போது, ஒன்றோடொன்று தொடர் புள்ளவைகளாய் வருகின்றன.

---

* இதை உணராதவர்கள் உலகத்திலேயுள்ள உயிர்களெல்லாம் மனிதனுக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்றும், ஆடு, கோழி, மீன் முதலியவைகளைக் கொன்று தின்னலாம் என்றும் பிதற்று வார்கள். அவைகளும் ஆன்மாக்கள்தாமே; நாங்களும் அந்தப் பிறவிகளை எடுப்பதுண் டல்லவா?

## 3. கன்மம்

துளசித்தாமருடைய பிள்ளைக்கு அடிமையினுடைய பிள்ளை அடித்தபொழுது, அவருடைய மனைவி அடித்தவனைத் தண்டிக்கவேண்டுமென்று சொன்னாள். அவர் அவனை மன்னித்து மகிழ்விக்க வேண்டுமென்று சொன்னார். ஒரே காரியத்திலே இப்படி ஒன்றுக்கொன்று மாறாக இரண்டுபேர் ஏன் நினைத்தார்கள்?

துளசித்தாமருடைய மனைவியின் எண்ணம் என்னவென்றால், 'நாங்கள் மேலானவர்கள்; எங்களுடைய பிள்ளைக்கு அடிமை கைநீட்டலாமா?" என்பது. ஆகவே அவளிலே அகந்தை மமதை என்ற குணங்கள் முளைத்து நின்றன. இந்தக் குணங்கள் ஆணவத்தினால் உண்டாவன. அவள் ஆணவத்தின் வழியில் நின்றாள்.

துளசித்தாமர் நினைத்ததாவது, "கடவுள் ஒருவரே மேலானவர்; அவர் படைத்தவர்களாகிய நாங்கள் எல்லோரும் அவருக்குச் சரிதான்; நாமும் அப்படியே எண்ணல்வேண்டும்; கடவுள் ஏற்கத் தக்கதாக நாம் நடத்தல் வேண்டும்". ஆகவே இவர் கடவுளுடைய திருவருள் வழியிலே நின்றார். இவர் திருவருள் வழியில் நிற்க, மனைவி ஆணவத்தின் வழியில் நின்றபடியால், இவர்களுடைய எண்ணங்கள் ஒன்றுக்கொன்று மாறாக இருந்தன. அவருடைய எண்ணம் நல்வினையான எண்ணம்; மனைவியின் எண்ணம் தீவினையான எண்ணம்.

இப்படியாக வினைகள் இரண்டுவகை. எது நல்வினை, எது தீவினை என்று பகுத்தறிதற்கு வழியென்ன? உலக இன்பங்களைக் கொடுக்கக்கூடியவைகளாய் ஆன்மாவைக் கெடுக்குஞ் செயல்கள் தீவினைகளாம். ஆசை, கோபம், பெருமை, செருக்கு, நீதியீனம் முதலியவைகள் தீவினைக் குணங்களாம். ஆணவத்தை அடக்கி ஆன்மாவை ஈடேற்றுஞ் செயல்கள் நல்வினைகளாம். கடவுட்பத்தி, அன்பு, நீதி, உண்மை, பொறுமை முதலியவைகள் நல்வினைக் குணங்களாம். கடவுளுக்கும் மெய்யடியாருக்கும் செய்யப்படும் தொண்டுகளும் வழிபாடும் சிவநல்வினை அல்லது சிவபுண்ணியம் எனப்படும். மற்றைய ஆன்மாக்களுக்குச் செய்யப்படும் நல்வினை பசுநல்வினை அல்லது பசுபுண்ணியம் எனப்படும்.

வினையானது மனம், மொழி, மெய் என்னும் மூன்று வழியாகச் செய்யப்படும். களவு செய்ய வேண்டுமென்று எண்ணுதல் மனத்தினாற் செய்யப்படும் வினை. களவு செய்யும்படி ஒருவனை ஏவுதல் மொழியினாற் செய்யப்படும் வினை. களவு செய்தல் மெய்யினாற் செய்யப்படும் வினை. [மெய் - உடம்பு]

ஒருவன் என்னை ஏசுகிறான். அப்போது, "என்னை இவன் ஏசலாமா? நான் இவனுக்கு அடிக்கவேண்டும்" என்ற தீய எண்ணம் ஆணவத்தின் முயற்சியினால் உண்டாகிறது. அந்த எண்ணத்தை அடக்காவிட்டால் நமக்கு எத்தனையோ வகையான தீமைகள் உண்டாகும்.

முதலாவது, நான் அவனை அடித்தால் அவன் என்னை அடிப்பான். நமக்குக் கோபம் உண்டாகும். கோபத்தினலே கொலை முதலான பெரும் பிழைகள் செய்யவேண்டியும் நேரிடும். இரண்டாவது, இன்றைக்கு என்னுடைய கோபம் ஒருவனிலே பலித்ததானல், நாளைக்குக் கோபம் இருமடங்காக வரும். ஆணவத்துக்கு இடங் கொடுத்தால் அது ஆன்மாவை விட்டுவையாது. மூன்றாவது, கெட்ட செய்கைகள் அதிகமாகச் செய்துவந்தால், அந்தப் பழக்கமே கெட்டசெய்கையைச் செய்விக்கும். நாம் பிழையென்று நினைத்தாலும் நம்முடைய சொல்லுக் கமையாமற் சரீரம் செய்துவிடும். எமது நண்பர் ஒருவர் மாமிசம் புசித்தல் பாவச் செய்கையென நன்ருக உணர்ந்து அதை விடவேண்டுமென்று தீர்மானித்தார். வீட்டிலே அது சமைக்கக்கூடாதென்று கட்டளையிட்டார். ஆயினும் அவருடைய நண்பரொருவர் அவரையும் வேறு சிலரையும் ஒருநாள் விருந்துக் கழைத்தார். அங்கே மாமிச போசனமும் தாவர போசனமும் வெவ்வே றிடத்திலே வைக்கப்பட்டிருந்தன. இவர் மாமிசத்தைக் கண்டவுடனே வாயூறித் தம்முடைய தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல் மா மி ச த் தை யுண்டார். "நீங்கள் ஏன் இந்த வேலையைச் செய்தீர்கள்" என்று அவருடைய சிநேகிதர் கேட்டபொழுது "வாய் சொல்வழி கேளாதாம்" என்று மறுமொழி சொன்னர். இப்படியாகச் சிலர் ஒரு செய்கையைப் பலமுறை செய்வதினல், அவர்களுடைய

சரீரம் அவர்களுடைய சொல்லைக் கேளாமல் வழக்கப்படி நடப்பதுண்டு. இயல்பாக மனம் தலைவனும், சரீரம் அடிமையுமாய் உள்ளன. ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டால் சில காலங்களிலே சரீரம் தலைவனுயும் மனம் அடிமையாயும் மாறி விடுகின்றன. நாலாவது, தீவினை செய்தவர்கள் அதற்காக இந்தப் பிறவியிலும் நரகங்களிலும் அடுத்த பிறவிகளிலும் வருந்துவார்கள். நெருப்பிலே கை வைத்தவனுக்குக் கை புண்ணுவது நிச்சயமாவதுபோல, தீவினை செய்தவர்களுக்குப் பலவகையான துன்பங்கள் உண்டாவது நிச்சயம்.

இப்படியில்லாமல், கோபம் வந்தபோது கோபத்தை அடக்கினுல் மனத்திற்குச் சஞ்சலமில்லை. பின்னொருமுறை கோபம் வருகிறபொழுது அதை அடக்குவது இதிலும்பார்க்க எளிதாயிருக்கும். ஆணவம் வலி குறையும். நாம் கோபத்தை அடக்கிவிட்டோமென்று ஒரு மகிழ்ச்சி உண்டாகும். ஆன்மாவானது ஈடேறும். நல்வினையினுல் இவ்வளவு நன்மைகளெல்லாமிருக்கவும், தீவினை செய்யப் புகுதல் பைத்தியமல்லவா?

இந்த நல்வினை தீவினைகளைக் கன்மம் என்று சொல்லுவர். ஒருவன் முற்பிறவிகளிலே நற்கன்மம் செய்திருந்தால், இந்தப் பிறவியிலே அதற்குப் பலனுகிய இன்பத்தை அனுபவித்தற்குரிய பொருள் கிடைக்கின்றது என்று வைத்துக் கொள்ளுவோம். அவன் அந்தப் பொருளை மது

பானஞ் செய்தல், பிறருக்குத் தீங்குசெய்தல் முதலிய தீய கருமங்களிற் செலவு செய்கிறான்; அல்லது வறியவர்களுக்குக் கொடுத்து நல்ல கருமங்களைச் செய்து செலவிடுகிறான்; ஆகவே, முன் செய்த நற்கருமத்தின் பலனாகிய பொருளை அநுபவிக்கும்போது, நல்வினை அல்லது தீவினை செய்கிறான். ஆகவே, பழைய வினையின் பயனை அநுபவிக்கும்போது புதிதாக வினை செய்கிறான். அநுபவிக்கப்படுகிற வினைக்குப் பிராரப்தம் என்று பெயர். அநுபவிக்கும்போது செய்யப்படும் புதிய வினைக்கு ஆகாமியம் என்று பெயர். அநுபவிக்கப்படாமல் எஞ்சியிருக்கிற வினைக்குச் சஞ்சிதம் என்று பெயர். பிராரத்தம் ஒரு பிறவியிலே அநுபவிக்கப்படும் வினை.

மேலே சொல்லப்பட்ட பசுவினை சிவவினைகள் தவிர வேறொருவகையான வினையுண்டு. அது ஆணவம் வலிகெட்ட காலத்திற் செய்யப்படும் வினை. ஒரு மாடு தாகத்தினால் தவிக்கும்போது ஒருவன் அதற்குத் தண்ணீர் கொடுக்கிறான். அவன் அந்தச் செய்கையைப் பின்பு நினைத்து "நான் செய்தேன்" என்று சொன்னால் அது மேலே சொல்லிய நல்வினையாகி, அவனுக்கு இன்பமாகிய பலனைக் கொடுக்கும். அதற்காக அவன் சிலகாலம் சுவர்க்கத்திலே இன்பம் அநுபவிக்கவேண்டும். அவன் "நான் செய்தேன்" என்றுணராமல் கடவுளுடைய திருவருள் செய்தது என்று அந்தச் செய்கையைக் கடவுளுக்கு

ஒப்புவித்துவிட்டால், அது நிலையற்ற இன்பமாகிய பலனைத் தராமல், நிலையானதாகிய மோட்சத்துக்கு அவனைத் தகுதியுள்ளவனாக்கும். இப்படியான வினை நல்வினையிலும் மிகவும் மேலானது.

வெறுவினை யென்றொரு வினையுண்டு. இது நல்வினை தீவினைகளிலே சேராதது. நூல் நூற்றல், கல் வெட்டுதல் முதலியவைகள் வெறுவினைகளாம்.

ஆகவே செயல்கள் அறுவகைப்படும்.

வெறுவினை, பசுத்தீவினை, பசுநல்வினை, சிவத்தீவினை, சிவநல்வினை, பற்றில்லாத வினை.

குறிப்பு:—1. "ஒவ்வொரு கர்மமும் புதிதாக உண்டாவதுதானே; கர்மம் அநாதியாவதெப்படி?" என்று கேட்டால், ஒரு கருமத்தின் பலனை அனுபவிக்கும்போது புதிதாகக் கருமம் தோன்றுகிறது. இப்படியே ஒன்றுமுடிய ஒன்று தோன்றிச் சங்கிலித்தொடர்போல வருதலால், ஒவ்வொரு கருமமுந் தனியே தொடக்க முள்ளதாயினும் கருமங்கள் முழுவதையும் பார்க்கும்போது அநாதியாகும். இதற்குப் பிரவாக அநாதியென்று பெயர். இஃதன்றி, தொழில் செய்தற்கு மூல காரணமா யுள்ளது கன்மம் என்னும் அநாதியான பாசம்.

## 2. விதி அல்லது ஊழ்

இன்னது செய்தால் இன்னது வருமென்பது விதி. நன்மை செய்தால் இன்பம் உண்டாகும்.

முயற்சி செய்தால் அதற்குத் தக்க பலன் உண்டாகும். இவைகள் விதிகளாம். இந்த விதிகள் சிவபெருமானுடைய இச்சாசத்தியினாலே நிறைவேற்றப்படுகின்றன.

நாம் இப்பொழுது அனுபவிக்கும் இன்ப துன்பங்களின் ஒரு பகுதி ஊழின் பலன். மற்றொரு பகுதி நாம் இப்போது செய்யும் முயற்சியின் பலன். ஊழின் பலன் துன்பமாயிருந்தால், நாம் இப்போது செய்யும் நல்ல முயற்சியின் பலனை அது குறைக்கும். அதன் பலன் நல்லதாக இருந்தால், நாம் இப்போது அற்ப முயற்சி செய்தாலும் அதிக பலனைத் தரும். ஒருவன் முன்னே கடன்காரனாயிருந்தால், இப்போது அவன் பொருளைச் சம்பாதித்தாலும் பெருஞ் செல்வனாயிருத்தல் இயலாது. ஏனென்றால், இப்போது சம்பாதிப்பதின் ஒரு பகுதி பழைய கடனுக்குப் போய்விடும். "சம்பாத்தியம் கடனுக்குப் போகின்றதே! நான் செல்வனாயிருக்க முடியவில்லையே! நான் இப்பொழுது பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதனாற் பயனென்ன?" என்று ஒருவன் சும்மா இருந்தால், இவனுடைய கடன் குறையாமல் எப்போதும் இவன் கடன் காரனாயே யிருப்பான். எவ்வளவு அதிகம் பொருள் சம்பாதிக்கிறானோ அவ்வளவு அதிகம் அவனுடைய கடன் குறையும். பின்னர்ச் செல்வனாயும் வரலாம். அதுபோல, ஊழினால் வருந்துகிறவன் முயற்சி செய்யாமலிருந்தால், மிக அதிகம் வருந்துவான்.

முயற்சி செய்தால் அதற்குத் தக்கதாக வருத்தங் குறையும். ஆதலால், ஊழ் தன்னுடைய முயற்சியைச் செய்ய, நாம் நம்முடைய முயற்சியைச் செய்ய வேண்டும். ஊழ் தன்னுடைய பலனைத் தரும்; தற்கால முயற்சியும் தன்னுடைய பலனைத் தரும்; இதுவே விதி. நமக்கு இப்போது வரும் இன்ப துன்பங்களெல்லாம் ஊழினால் மாத்திரம் வருமென்பது விதியல்ல. அநேகர் விதி இன்ன தென்று விளங்காமையால் முயற்சி செய்யாமல் வீணர்களாகி வருந்துகின்றார்கள்.

திருவள்ளுவர்

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்." [தெய்வம்-ஊழ்.]*

3. ஒருவன் செய்த கர்மத்தின் பலனை அவனே அநுபவித்தல் வேண்டும். எனக்காக வேறொருவர் கடவுளை வணங்குவதினால் எனக்குப் பலனில்லை. அந்தப் பலன் அவருக்குத்தான் உள்ளது. நான் ஒரு பாவஞ் செய்தேனென்று வைத்துக் கொள்வோம். அந்தப் பாவத்தினாலே எனக்கொரு கொடிய வியாதிவந்தது. வியாதியை நீக்குதற்காக வேறொரு ஆன்மாவை வருத்துவது

* நமது இன்ப துன்பங்களுக்குக் காரணம் பிராரப்தமாயினும், அவை சேரும் வழியால் இரண்டு வகைப்படும். பிராரப்தத்துக்குத் தக்கதாகக் கிடைத்த சரீரம் முதலிய கருவிகளைக்கொண்டு பெறப் படுவன ஒருவகை. எற்ற முயற்சியின்றிப் பெறப்படுவன மற்றொரு வகை; இரண்டாவது வகை ஊழ் எனப்படும்.

பெரும் பைத்தியம். இது உடம்பிலே யிருக்கிற அழுக்கை நீக்குதற்காகக் குளிக்கிறதற்கென்று குளத்துக்குப் போன ஒருவன், அங்கேயுள்ள சேற்றை யள்ளிச் சரீரம் முழுதும் பூசிக்கொண்டு வருவதுபோலாகும். வருத்தம் வந்தால் "ஆடு வெட்டுவேன்" என்று நேருவது இப்படியான ஒரு பைத்தியம். ஆடும் நம்மைப்போன்ற ஒரு ஆன்மாதானே. நாம் செய்த கர்மத்தின் பலனை அது ஏன் அனுபவிக்கின்றது? முன்னே செய்த பாவம் போதாமல் அந்த ஆட்டை வெட்டுகிற பாவத்தையுஞ் சேர்த்துக் கொள்வதுதான் இந்த மதியீனர்களுடைய செய்கை.

---

## நான்காம் அதிகாரம்—ஆன்மா

நான் என்று சொல்வது ஆன்மா, நான் என்பது சரீரமன்று. நான் ஒரு பாம்பைக் கண்டேன் என்று சொல்லுகிறபொழுது, பாம்பைக் கண்டது சரீரமன்று. அதைக் கண்டது நான் ஆகிய ஆன்மா. ஆன்மா காணுதற்குச் சரீரம் உதவியாயுள்ளது. பாம்பு எனக்கு முன் வரும்போது, அதிலே இருக்கிற ஒளி என்னுடைய கண்ணுக்கூடாகப் போய்த் திரிபுற்று மூளையிலே ஒரு தாக்கத்தை உண்டாக்குகின்றது. அந்தத் தாக்கத்தை ஞானேந்திரியமாகிய கண் ஆன்மாவுக்குக் காட்டுகின்றது. ஆன்மா புத்தியைக் கொண்டு அதைப் பாம்பென்று அறிகின்றது.

காண்பதற்குக் கருவியாயுள்ளவைகள் கண்ணையும் மூளையையும் அங்கமாகவுடைய தூல சரீரமும், புத்தியை அங்கமாகவுடைய சூக்கும சரீரமுமாம்.

ஆன்மாவானது தூலம் சூக்குமம் காரணம் ஆகிய மூன்று வகையான சரீரங்களிலும் நின்றுகொண்டு தன்னுடைய முயற்சிகளைச் செய்யும்; சரீரங்கள் யந்திரங்கள்போல உள்ளன. ஆன்மா யந்திரங்களைக்கொண்டு வேலை செய்விக்கும் யந்திரகாரன்போல உள்ளது. யந்திரகாரன் இல்லாமல் யந்திரம் அசையமாட்டாது.

ஆன்மாக்களில் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று மூவகையுண்டு. விஞ்ஞானகலர் கர்மம் அசுத்தமாயை என்னும் இரண்டுமலங்கள் இல்லாதவர்கள். பிரளயாகலர் அசுத்தமாயை என்னும் ஒரு மலம் இல்லாதவர்கள். இவர்களில் ஒருவகையார் இயல்பாகவே மேலே சொல்லப்பட்ட பாசங்களில்லாதவர்கள். மற்றொருவகையார் அவைகள் இடையிலே நீங்கப் பெற்றவர்கள். இவர்களுள் விஞ்ஞானகலர் ஞானத்தினாலும், பிரளயாகலர் பிரளயத்திலும் கலை முதலியவற்றினின்றும் நீங்கினவர்கள்.

சகலர் எல்லா மலங்களும் உள்ளவர்கள்; மனிதர்களாகிய நாங்களும், தேவர்களும், மிருகம் பட்சி முதலிய இயங்கியற் பொருள்களும், புல் பூண்டு முதலிய நிலையியற் பொருள்களும் சகலர்களாம்.

ஆன்மாக்களெல்லாம் இளைப்பாறுதற்காகச் சிவபெருமான் உலகங்க ளெல்லாவற்றையும் ஒரு காலத்திலே அழித்தருளுவர். அந்தக் காலத்துக்குச் சர்வசங்கார காலமென்று பெயர். அப்போது சகலராயுள்ள ஆன்மாக்கள் கர்மமும் உடம்பாகிய மாயையும் இல்லாமல், ஆணவமாகிய ஒரு மலத்தோடு மாத்திரம் இருப்பார்கள். இப்படியிருக்கும் இவர்களுடைய நிலைக்குக் கேவலநிலை யென்று பெயர். மூன்று மலங்களோடு மிருக்குந் தற்கால நிலைக்குச் சகலநிலை யென்று பெயர். மூன்று மலங்களும் நீங்கிச் சுத்தமா யிருக்கும் கடைசி நிலைக்குச் சுத்தநிலை என்று பெயர். இந்தச் சுத்த நிலையே மோட்சமென்றும் வீடென்றும் சொல்லப்படும். (வீடு என்பது—விடு என்ற வினையிலிருந்து தோன்றியது; பாசங்கள் விடப்பட்டநிலை யென்பது கருத்து; மோட்ச மென்பதின் கருத்தும் இதுவே).

ஆன்மாக்கள் அறியாமையைத் தரும் பாசங்களினலே கட்டுண்டு, பிழையானதைச் சரியென்றும், சரியானதைப் பிழையென்றும் நினைத்து மயங்கி வருந்துகின்றன; அவைகளுடைய வருத்தத்தைத் தீர்ப்பதற்காகக் கடவுள் தமது திருவருளை அவைகளுக்கு மேலே சொரிந்துகொண்டிருக்கிறார். சில காலங்களில் ஆன்மா முற்றாகப் பாசங்களின் ஆட்சிக்கு உட்பட்டு நிற்கும். அப்போது அது தீயகுண முள்ளதாய்த் தீமைகளைச் செய்யும். தீமை செய்வதினலே, இந்தப் பிறவியிலே பல வகையான துன்பங்களை யடைந்து நரகங்களிலே

வருந்தி, அடுத்த பிறவிகளிலும் வருந்தும். வேறு சில காலங்களிலே அது, திருவருள் வழிப்பட்டு நின்று, ஆணவத்தை அடக்கிச் சரியானதைச் செய்யும். ஆகவே ஒருகாலம் ஆணவத்துக்கு அடங்கியும், ஒருகாலம் ஆணவத்தை அடக்கியும் நிற்கும்.

ஆன்மாவின் ஒரு பக்கத்திற் சிவபெருமானது திருவருளும், மற்றப் பக்கத்தில் மலங்களும் உள்ளன. திருவருளை ஆன்மாவோடு சேர்ப்பது திருவருட் சத்தியாம். மலங்களை ஆன்மாவோடு சேர்த்து அவைகளை முயற்சிபண்ணி அவைகளின் வலிமைக் கெடுப்பது திரோதான சத்தியாம். ஆகவே ஆன்மாவும், அதன் ஒரு பக்கத்தில் இரண்டு பொருள்களும், மற்றப் பக்கத்திலே இரண்டு பொருள்களும் ஆக ஐந்து பொருள்கள் உள்ளன. சிவம், திருவருட்சத்தி, ஆன்மா, திரோதானசத்தி, மலங்கள் இந்த ஐந்து பொருள்களும் ஸ்ரீபஞ்சாக்கரத்தால் விளக்கப்படுகின்றன.

## திருவருட்பயன்

"ஊனநடன மொருபால், ஒருபாலாம்
ஞானநடம், தான்நடுவே நாடு"

இந்த உண்மையைத் தீட்சை பெற்றவர்கள் ஆசாரியரிடம் அறிந்துகொள்க.

குறிப்பு: 1. ஆன்மாக்கள் எல்லாம் எக் காலத்திலும் உள்ளவைகள்; சில காலத்துக்கு

முன் கடவுளால் உண்டாக்கப்பட்டவைக ளென்று அறிவில்லாத சிலர் சொல்லுவர். இது பிழையான எண்ணம். கடவுள் பரிபூரணர். அவருக்குத் தேவையானது ஒன்றுமில்லை. ஆதலால், ஆன்மாக்கள் கடவுளுக்குத் தேவையானவைகளல்ல. ஆன்மாக்கள் இல்லையாயின், கடவுளைத் தவிர வேறொருவர் இருக்கவுமில்லை. ஆகவே ஆன்மாவைத் தேவையாக உடையவர்கள் ஒருவரும் இருக்கவில்லை. ஒரு தேவையு மில்லாமற் கடவுள் அவைகளைப் படைக்கமாட்டார். ஒருவருக்கும் ஒரு பலனும் இல்லாத செய்கையைப் பைத்தியகாரனுஞ் செய்யான். ஆதலால், கடவுள் ஆன்மாக்களை ஒரு காலத்திலும் உண்டாக்கவில்லை. ஆகவே, ஆன்மாக்கள் ஆக்கப்படாதவைகள்; ஆதலின் அநாதியாயுள்ளவைகள்.

2. ஆன்மா அநாதியாதலால் அதைக் கட்டி வைத்திருக்கும் ஆணவ மலமும் அநாதியாகும். ஏன் என்றால், ஆணவம் உயிரில்லாத பொருள்; அது தானாகப் போய் ஆன்மாவைப் பிடிக்கமாட்டாது. அது கெட்ட பொருள்; ஆதலினாலே அதைக் கடவுள் ஆன்மாவோடு சேர்க்க மாட்டார். ஆதலால் ஆணவம் அநாதியாய் ஆன்மாவோடு நிற்கின்றது.

3. இந்த அநாதியான ஆணவத்தை நீக்குதற்காகக் கடவுள் ஆன்மாக்களுக்குப் பிறவிகளைக் கொடுக்கின்றார். ஆதலால் பிறவியும் அநாதியா

யுள்ளது. அஃதாவது இதற்கு முன் ஆன்மாக்களாகிய நாங்கள் எல்லோரும் எண்ணில்லாத பிறவிகளை எடுத்திருக்கின்றோம். ஏனென்றால், கடவுள் எக்காலமும் நல்லவர்; கணக்கில்லாத காலம் நாங்கள் ஆணவத்தினால் வருந்துவதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இதை நீக்க வேண்டுமென்று இடையிலே மாத்திரம் நினைக்க மாட்டார்; எப்போது ஆணவம் உண்டோ, அப்போதே கடவுள் அதை நீக்குதற்காக எங்களுக்குப் பிறவிகளைத் தந்திருப்பார். ஆதலால் எங்களுடைய பிறவிக்குத் தொடக்க மில்லை. இதற்கு முன் நாமெடுத்த பிறவிகள் எண்ணில்லாதவைகள். இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுக்க வேண்டிவரும். ஆணவம் தீர்ந்த அன்றைக்குப் பிறவிகளும் தீரும். மாணிக்கவாசகசுவாமி முதலிய அநேக ஆன்மாக்கள் ஆணவம் நீங்கிப் பிறவியும் அற்றனர்.

4. பிறவி எப்போதுண்டோ அப்போது பிறவியிலே செய்யப்படும் வினையும் உண்டு. பிறவி அநாதியாதலால் கர்மம் அநாதி. ஆகவே ஆன்மாவும், அதைப் பிணித்திருக்கும் மலங்களும், அதற்குரிய பிறவியும் தொடக்க மில்லாதவைகள்.

5. "தொடக்கமில்லாத பொருள் அழிய மாட்டாது; ஆதலால் ஆணவம் அழியமாட்டாது" என்று ஒருவர் கேட்கக்கூடும். ஆணவம் அழியாவிட்டாலும், அதனுடைய வலிமை சிவசத்தியினுடைய வலிமையாற் கெடுக்கப்படுகின்றது.

6. "தொடக்கமில்லாததாகிய பிறவி எப்படி அழியும்" என்றால், பிறவி ஒவ்வொன்றும் தொடக்கமுள்ளது. அது அழிகின்றது. தொடக்கமில்லாதது பிறவியின் பரம்பரை; பரம்பரை பொருளன்று; ஆதலால் அது அழியும்.

---

## ஐந்தாம் அதிகாரம்—பதி

### (யசுர் வேதம் 40—8)

*"கடவுள் சர்வவியாபகராய், சுத்தசத்தாய், சர்வசத்தியுடையவராய், சர்வ வல்லமையுடையவராய், நிர்மலராய், பரிபூரணராய், சர்வஞ்ஞராய், பதியாய், நித்தியராய், சுவதந்திரராய் இருக்கிறார்".*

கடவுள் ஒருவரே. அவர் எல்லா உயிர்களுக்கும் உயிராக இருக்கிறார்; எல்லா உலகங்களிலும் இருக்கிறார்; இவைகள் எல்லாவற்றையுங் கடந்து அப்பாலும் இருக்கிறார். அவர் எங்கும் உள்ளவர். கடவுளே எல்லாவற்றையும் நடத்துபவர். ஆதலால் அவர் எல்லாவற்றையும் அறிபவர். (எல்லாம் அறிதல் சர்வஞ்ஞத்துவம் எனப்படும்). அவர் காலதத்துவத்தைக் கடந்தவர் ஆதலாலும், இயல்பாகவே மலத்தினின்று நீங்கியிருத்தலாலும் என்றும் அறிபவராவர். (என்றும் அறிதல் அநாதிபோதம் எனப்படும்.) அவர் ஒன்றை விசாரித்தறியாமல் அதை நேரே இயல்பாக அறிபவராதலால் இயற்கையுணர்வு உடையவர். இயற்கை உணர்வு நிராமயான்மா எனப்படும். அவர் ஒரு

காலமும் ஒருவிதமான குறைவுகளேனும் அல்லது தேவைகளேனும் இல்லாதவராதலால் நித்தியா னந்தர் அல்லது நித்திய பரிபூரணர் எனப்படுவர். நித்திய பரிபூரணம் திருப்தி எனப்படும். அவர் பிறருடைய எண்ணப்படி நடவாதவராய்த் "தாமார்க்குங் குடியல்லாச் சங்கர" ராய் மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் தமது பேரருளால் வசப்படுத்துதலால் சுவதந்திரர்.

இந்தப் பெரிய பூமியோ, இதிலும் பன்மடங்கு பெரிதான சூரியனோ, சூரியனிலும் பெரிய நட்சத் திரங்களோ இவைகளெல்லாம் அவரையே ஆதார மாகக் கொண்டிருக்கின்றன. இந்த உலகங்க ளெல்லாம் அவராலே உண்டாக்கப்பட்டன. இவைகள் அவராலே நடைபெறுகின்றன. அவ ருடைய வல்லமைக்கு எல்லையில்லை. ஆதலால் அவர் அநந்தசத்தியை உடையவர். அவர் உயிர்களில் அளவில்லாத இரக்கம் உடையவர். ஆதலால் அலுத்தசத்தி யுடையவர். அவர் மாயையினல் ஆக்கப் பட்ட தேகம் இல்லாதவராய், சுத்தமான சத்தி வடிவ முடையவர். ஆதலால் அவருக்கு விசுத்ததேகம் உண்டு.

மேலே கூறிய எட்டுக் குணங்களுள் நிராம யான்மா விசுத்ததேகம் என்னும் இரண்டையும் விட்டுக் கடவுளுக்கு ஆறு குணங்கள் சொல்வது மூண்டு. இந்த ஆறு குணங்களும் சுத்த சட்குணம் எனப்படும். இவற்றுள் சுவதந்திரம் அநந்தசத்தி

ஆகிய இரண்டையும் சத் என்றும், சர்வஞ்ஞத்து வம் அநாதிபோதம் ஆகிய இரண்டையும் சித் என்றும், திருப்தி அலுப்தசக்தி ஆகிய இரண்டை யும் ஆநந்தம் என்றும் வைத்து மூன்று குணங்க ளாகச் சொல்வதுமுண்டு. இந்த மூன்றும் சச்சிதா னந்த மென்று தொடுத்துச் சொல்லப்படும்.*

உலகத்திலே நாம் அறிகிற பொருள்களில் மரம் கல் முதலியவைகள் ரூபமுள்ளன. காற்று ஆகாயம் முதலியன ரூபமில்லாதன; (அரூபம்). இப்படியான பூதப் பொருள்களுக்கு மாத்திரம் ரூபம், அரூபம் என்ற பேதம் சொல்லப்படத் தக்கது. கடவுள் இவைகளைப்போன்ற பொரு ளல்லர். அவருக்கு ரூபம் அரூபம் என்ற பேதம் இல்லை. ஆனபடியால் அவர் ரூபியுமல்லர் அரூ பியு மல்லர்; அவர் ரூபியோ அரூபியோ என்று கேட்பது இராமாயணப் பிரசங்கம் ஒரு ஆட்சுமை இருக்குமோ? இராதோ? என்று கேட்பதுபோ லாகும். இவ்வளவு நுட்பமாகப் பாராவிட்டால், அவர் அரூபியென்று சொல்லலாம். அவர் இன்ன குண முள்ளவர் இன்னவிதமானவரென்று எங்கள் புலன்களினாலாவது புத்தியினாலாவது அறிந்து கொள்ளல் இயலாது. அவர் நமக்குச் செய்யும் நன்மைகளால் நாம் அவருடைய தன்மையை

* புல்லறிவாளராகிய நாம் கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை அறியவேண்டி யிருத்தலால், இக்குணங்கள் கற்பிக்கப்பட்டன. உள்ளபடி அவர் இந்தக் குணங்களைக் கடந்தவர். "குணமொன்று மில்லான்" என்பது திருவாசகம்.

ஒருவாறு அறியலாம். அவருடைய திருவருளால் மாத்திரம் அவர் இப்படிப்பட்டவரென்று நாம் அறியலாம்.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடைய னல்லனொருவ னல்லனோரூர
னல்ல னோருவம னில்லி
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு
மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்த
னிவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே.

திருச்சிற்றம்பலம்

அவருடைய திருவருளை நாம் பெறவேண்டு மானால் அவரிலே இடையறாத அன்புள்ளவர்களாய் இருத்தல்வேண்டும். "பத்தி வலையிற் படுவோன் காண்க" என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். நமக்கு இப்போதுள்ள பத்தியை வளர்த்துக் கொண்டு வந்தால் நாம் அவரை அறியலாம்.

அவர் செய்தருளுந் தொழில்கள் ஐந்து. அவைகள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவைகளாம். அவைகளுக்கு முறையே சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்ற பெயர்களும் உண்டு. உலகத்திலுள்ள சரம் (இயங்கும் பொருள்), அசரம்

(இயங்கமாட்டாதவைகள்) என்னும் உயிருள்ள பொருள்களையும், நிலம் நீர் முதலிய உயிரில்லாப் பொருள்களையும் உண்டாக்குதலே படைத்தல். அந்தப் பொருள்களை வேண்டிய காலம் வரையிற் காப்பது காத்தல். பின் அவைகளை அழிப்பது அழித்தல். ஆன்மாக்களின் மலத்தின் வீரியத்தைத் தடுத்தல் மறைத்தலாம். ஆன்மாக்களைப் பாசங்களினின்றும் முற்றாக நீக்கிப் பேரின்பத்தைக் கொடுத்தல் அருளலாம். இந்த ஐந்து தொழில்களுக்கும் பஞ்சகிருத்தியம் என்று பெயர்.

ஆன்மாக்கள் ஆணவமலத்தி னின்றும் நீங்குதற்கு வினைகள் செய்து வினைப்பயன்களை அனுபவித்தல் வேண்டும். அப்படி வினைகள் செய்வதற்காகத்தான் அவைகளைச் சரீரங்களுடன் கூடிப் பிறக்கச்செய்தலாகிய படைத்தல் செய்யப்படும். முன் செய்த கர்மத்தின் பலனாகிய இன்ப துன்பங்களை அநுபவித்தற்காகக் காத்தல் செய்யப்படுகின்றது. பிராரப்த அநுபவம் முடிந்தவுடன் தூலவுடம்பு அழிக்கப்படும். வேலை செய்து களைத்தவன் பின் சும்மா இருந்து ஆறுவதுபோல, பிறந்து இறந்து பல கர்மங்களையுஞ் செய்து இளைத்த உயிர்கள் சிலகாலம் ஆறியிருக்கும்படியாகவே அழித்தல் என்னும் கிருத்தியம் செய்யப்படுகின்றது. இதிலே மற்றைய உடம்புகளும் அழியும்.

ஆன்மாக்கள் சுத்தமடையும்பொழுது, இன்பத்தைத் தருவதாகிய புண்ணியத்திலாவது துன்

பத்தைத் தருவதாகிய பாவத்திலாவது மனஞ் செல்லாது. அவைகளுக்குச் சிவஞானத்திலே மனஞ் செல்லும். இது மலங்களினது வீரியத்தைத் தடுத்தலினால் உண்டாகும். இப்படிச் செய்தல் மறைத்தலாம். † இந்த நாலு கிருத்தியங்களின் பயனாக ஆணவமலம் வலிகெட்டு நிற்கும்போது, சிவபெருமான் மற்றைய மலங்களையும் நீக்கி மெய்ஞ்ஞானத்தையும் பேரின்பத்தையுங் கொடுத்தலே அருளல் எனப்படும். ஆகவே, பஞ்சகிருத்தியத்தினால் ஆன்மாக்கள் பாசங்களினின்றும் நீங்கி நித்திய வாழ்வாகிய பேரின்பத்தை அடைகின்றன. இந்த ஐந்து தொழில்களில் மறைத்தலைக் காத்தலோடும் அருளலை அழித்தலோடுஞ் சேர்த்து மூன்று தொழிலாகச் சொல்வதுமுண்டு. சிவபெருமான் இந்தப் பஞ்சகிருத்தியங்களையும் தமது வல்லமையினாலே செய்கிறார். இந்த வல்லமைக்குச் சத்தி என்று பெயர். இந்தச் சத்தியானது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னுந் திருமேனிகளில் நின்று செய்யும். இவர்களெல்லாரும் சிவபேதங்களாவர். புராணங்களிலே சில இடங்களிற் சொல்லப்படும் பிரமா விஷ்ணு முதலியோர் ஆன்மபேதங்களாவர்.

---

† மறைத்தல் என்பதற்கு வேறு கருத்துஞ் சொல்லப்படுகின்றது. இங்கே சொல்லப்படுங் கருத்து மறைஞானதேசிகர் சிவஞான முனிவர் முதலியோரது கருத்தாகும்.

நாம் ஒரு காலத்திலே படிக்கின்றோம்; ஒரு காலத்திலே விளையாடுகின்றோம்; ஒரு காலத்திலே உண்ணுகின்றோம்; ஒரு காலத்திலே மகிழ்ச்சியடைகின்றோம்; ஒரு காலத்திலே துக்கப்படுகின்றோம்; இப்படி எங்களுடைய நிலையும் மனமும் எப்போதும் வேறுபட்டுக்கொண்டே இருக்கின்றன. கடவுளோ பஞ்சகிருத்தியங்களைச் செய்யும்பொழுது ஒருவகையான திரிபும் அடைவதில்லை. சூரியனுடைய கதிர்களின்முன் சில பூக்கள் அலருகின்றன; சில பூக்கள் வாடுகின்றன. ஆயினும் சூரியன் ஒருவித மாற்றத்தையும் அடையவில்லை; அதுபோலவே, பஞ்சகிருத்தியஞ் செய்யும்பொழுது சிவபெருமான் யாதொரு மாற்றத்தையும் அடைவதில்லை. இதனாலே சிவபெருமானுக்கு நிர்விகாரி (மாற்றமில்லாதவர்) என்று பெயருண்டு.

சிவபெருமானுடைய சத்தியாகிய உமாதேவியார் திருவருட்சத்தியாம். அதிலிருந்து பராசத்தியும், பராசத்தியிலிருந்து திரோதான சத்தியாகிய ஆதிசத்தியும், அதிலிருந்து இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியும் தோன்றின. இவற்றுள் இச்சாசத்தியானது இன்னதின்பின் இன்னது இன்னவகையாக நடக்கவேண்டுமென்று நியமித்து ஆன்மாக்களுக்கு அருள் செய்வது. கிரியாசத்தியிலிருந்து ஜநநி ஆரணி ரோதயித்திரி என்னுஞ் சத்திகள் தோன்றிப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் செய்யும். ஞானசத்தி ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுப்பது.

நெருப்பின் சுடுகையானது, தொழில்வேறு பாட்டால், வறுத்தல் எரித்தல் அவித்தல் பொரித்தல் என்று பலவகைப்பட்டாலும், சுடுகை என்பது ஒன்றுதான். இதுபோலச் சிவ சத்தியானது தொழில் வேறுபாட்டாற் பராசத்தி, திரோதான சத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி என்று பலவகைப்பட்டாலும், சத்தி ஒன்றுதான்.

சிவபெருமான் ரூபமில்லாதவராயினும், அவர் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகஞ் செய்தற்காக. அவருடைய திருவருள் உருவமெடுத்து வருதலுமுண்டு. தன் பங்குக்கரையை அடைப்பவரின்றி வருந்திய செம்மனச்செல்விக்குக் கூலியாள்போல உருவங்கொண்டு வந்ததும், பிரசவ வேதனையினல் வருந்திய பெண்ணுக்கு அவளுடைய தாய்போல வந்து உதவிபுரிந்ததும், அப்பர்சுவாமிக்குப் பொதி சோறு கொடுத்ததும் சிவபெருமானுடைய திருவருளேயாம். சிவபெருமானுடைய திருவருள் அடியவர்களுக்கு அருள் செய்யும்படி வேறும் பலவித உருவங்கொண்டு வந்ததாக இன்னும் அநேக சரித்திரங்களுண்டு. அந்த உருவங்கள் எங்களுடைய உருவங்கள் போன்றவைகளல்ல. எங்களுடைய உருவம் தசை எலும்பு முதலிய அசுத்தமாயைப் பொருள்களால் உண்டாக்கப்பட்ட அசுத்த தேகம்.

குறிப்பு: பலவகைப்பட்ட சமயங்களிற் பலவித தெய்வ வழிபாடுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒரு சமயத்திலே, தெய்வம் மிருகபலி மது

பானம் முதலிய வற்றில் விருப்பமுள்ளதென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அத்தெய்வத்தை வழி படுகிறவர்கள் மிருகபலி குடிவகை முதலியவைகளை நிவேதிப்பது அவருக்குப் பிரியமாய் இருக்கு மென்று எண்ணுகிறார்கள். அதனாலே ஆடு கோழி முதலிய பிராணிகள் கதறக் கதற வெட்டிப் படைப்பது பாவமென்று அவர்கள் நினைக்கிறதில்லை. அவைகளை வெட்டும்போழுது அவைகள் படும் பாட்டைக் கண்டும் அவர்களுடைய மனசு உருகுவ தில்லை.

கள் முதலிய குடிவகைகளைக் கடவுளுக்கு அவர்கள் நிவேதிப்பதினாலே அவைகளை அவர்கள் விலக்கமாட்டார்கள். தமது தெய்வம் மது மாமி சத்தை ஏற்றுக் கொள்ளும்பொழுது, அவருடைய அடிமைகளாகிய தாங்கள் அவைகளை அருவருத் துத் தள்ளுவது குற்றமாகும் என்று நினைத்து மாமிசபோசனஞ் செய்யவும் மதுபானம்பண்ண வும் ஏவப்படுகின்றார்கள். தெய்வத்துக்கு மிருக பலியும் மதுபானமும் உவப்பானவைகள் என்று சொல்லும் சமயங்களில் இவர்கள் நின்று கடவுள் வழிபாடு செய்வதினாலே இவர்கள் ஈடேறுவதற்கு அவசியமான குணமாகிய சீவகாருண்ணியமில்லாது வன்னெஞ்சராய், மதுபானிகளாய் இவற்றால் இன் னும் பல பாவங்களைச் செய்து உலைகின்றார்கள்.

இப்படியே கொலை, புலாலுண்ணல், மதுபா னஞ் செய்தலாகிய பாவங்களைப் பாவமென்று

விலக்காத சமயத்தவர்கள் இவைகளைத் தாங்களும் விலக்காமையாற் பாவிகளாகின்றார்கள். தெய்வங்கள், பலிகொடாவிட்டால், தங்களைப் பலி எடுத்துப் பழிவாங்குமென்று நினைக்கிறவர்களுமுண்டு. இவர்கள் கடவுளைப் பயத்தினால் வழிபடுகிறார்கள். சிறு பிள்ளைகளுக்குப் பேய் பூதங்களில் எப்படி மெய்யன்பு உண்டாவதில்லையோ, அப்படியே இவர்களுக்கும் தங்கள் தெய்வத்தில் உண்மையான அன்பு உண்டாவதில்லை. இதனால் இவர்கள் கடவுளின் "கற்றாவின் மனம்போலக் கசிந்துருகும்" மெய்யன்பைப் பெறும் பாக்கியம் இல்லாதவர்களாகின்றார்கள். இவைகளை உற்று நோக்கும்பொழுது "நாம் எந்தச் சமயத்தில் நின்று எந்தத் தெய்வத்தை வழிபட்டாலும் சரிதானே" என்று நினைப்பது மூடத்தனமென வெளியாகின்றது.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்"

(சித்தியார் சு. 11. 25.)

என்று சொல்லப்பட்டிருத்தலால், மற்றைய தெய்வங்களை* வழிபடுவோர் தமது வழிபாட்டின் அள

---

* பிறதெய்வத்தை வழிபடலாற் பயனுண்டு என்று இத் திருவிருத்தம் கூறுவதன்றித் தெய்வமல்லாதவரை வழிபடலாற் பயனுண்டு என்று கூறவில்லை. சைவருட்சிலர் தகுதியற்ற பெண்களையும் ஆண்களையும் வணங்கி வீண்காலம் போக்குகின்றனர். எம்மவருட் சிலர் வெட்கமின்றி இப்படியானவர்களுக்குப் பூசையும் செய்கின்றனர். இதை நாவலர் பெருமான் சுப்பிர போதத்திலே கண்டித்தருளினர்.

வுக்குத்தக்க பலனை அடைந்தாலும், அச் சமயங்களில் விதிக்கப்பட்ட தீவினைகளைச் செய்து வருந்தி உண்மையை அறியாது இடர்ப்படுவர் ஆதலாற்றான்,

"காண்பவன் சிவனேயானுல் அவனடிக் கன்புசெய்கை
மாண்பறம் அரன்றன்பாதம் மறந்துசெய் அறங்க
ளெல்லாம் வீண்செயல்"

(சித்தியார், சு. 11, 27.)

என்று மேலே காட்டிய செய்யுளுக்கு மூன்றாஞ் செய்யுளில் ஆசிரியர் கூறினர். ஆதலால் ஒருவன் கடவுளைப் பற்றியும் எள்ளளவும் தவறில்லாமற் சொல்லும் மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைக் கைக்கொண்டு, அச்சமய நூலின்படி கடவுளை வழிபட்டாலன்றிக் கடவுள் வழிபாட்டின் சரியான பலனை அடைய மாட்டான்.

---

## ஆறும் அதிகாரம்—முப்பொருள்கள்

### இருக்கு வேதம் (1-164-20)

"பதி, பசு ஆகிய இரண்டும் நித்தியப் பொருள்கள். அவைகள் அறிதல் முதலிய குணங்களை யுடையன. பதியானது பசுவில் வியாபித்து ஐக்கியமாய் இருக்கிறது. கிளைகளாகிய உலகங்கள் தோற்றுதற்கிடமாயுள்ள அடிமரமாகிய பிரகிருதிமாயை நித்தியப்பொருள். பிரகிருதியில் உண்டாகும் இன்ப துன்பங்களைப் பசு அநு

பவிக்கும்; பதி அநுபவிப்பதில்லை. பதியானவர் இவற்றுக்கு உள்ளும் புறத்தும் எங்கும் பிரகாசிக்கிறார். பதி, பசு, பிரகிருதி ஆகிய மூன்று பொருள்களும் வெவ்வேறு".

## 1. கடவுளின் பரிபூரணம்

ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் இருக்கும்போது அதற்குள்ளே ஒரு கல்லைப் போட்டால் அந்தக் கல்லளவு தண்ணீர் வெளியே சிந்தும். ஏனெனில் கல்லும் தண்ணீரும் ஒரே இடத்தில் இருக்கமாட்டா. ஒரு பெட்டிக்குள்ளே நிறைய மணலிருந்தால் அதற்குள்ளே ஒரு தேங்காயை வைக்கவேண்டுமானல் அந்த மணலில் ஒரு பகுதியை எடுக்கவேண்டும். ஏனென்றால், பெட்டியிலுள்ள இடம் முழுவதையும் மணல் நிறைத்துக் கொண்டது. மணல் இருக்கும்போது அது இருக்கின்ற இடத்திலே தேங்காய் இருக்க மாட்டாது. இப்படியே பூதப்பொருள்கள் ஒன்று இருக்கிற இடத்திலே வேறொன்று இருக்கமாட்டாது.

ஆயினும் பூதப்பொருளும் பூதப்பொருள் அல்லாத பொருளும் ஒரே இடத்தில் இருத்தல் கூடும். எப்படியெனில், ஒரு பொருளும் அதிலுள்ள சூடும் ஒரே இடத்தில் இருத்தல்கூடும். சூடு இருப்பதற்கு வேறு இடம் வேண்டியதில்லை. பூதப் பொருள்களுக்கு மாத்திரம் இடம் வேண்டும். மற்றையவைகளுக்கு இடம் வேண்டியதில்லை.

பூதப்பொருள்கள் மாயையிலிருந்து தோற்று பவைகள். கடவுள் மாயையிலிருந்து தோற்றுகிறவ ரல்லர். ஆதலால் கடவுள் பூதப்பொருளல்லர். அவர் இருப்பதற்கு இடம் வேண்டியதில்லை. இந்த உண்மையை அறியாதவர்கள் சொல்லுகிறதாவது: "உலகங்களிலே மண் கல் முதலிய பொருள்கள் இருக்கின்றன; அவைகள் இருக்கிற இடத்திலே கடவுள் இருக்க இயலாது. கடவுள் எங்கும் இருக்கிறார் என்பது உண்மை; ஆதலால் உலகம் என்பது இல்லாதபொருள். அது பொருள்போலத் தோன்றுவதல்லாமல் பொருளன்று. ஆன்மாக் களும் கடவுளும் ஒரே இடத்தில் இருக்கமாட்டா. ஆதலால், ஆன்மா என்று ஒரு பொருள் வேறாக இல்லை; ஆன்மா என்று சொல்லப்படும் பொருளும் கடவுள்தான்" என்பதாம். இவர்கள் ஆன்மாவும் கடவுளும், மண் கல் முதலிய பொருள்கள்போல, இடம் வேண்டிய பொருள்களென்று எண்ணு கிறவர்கள், ஆன்மாவும் கடவுளும் இடம் வேண்டிய பொருள்களல்ல. ஆதலால் மற்றைப் பொருள்கள் இருந்தாலும் கடவுள் எங்கும் இருக்கக்கூடியவர். அவர் ஆன்மாவிலும் இருக்கலாம். ஆதலால் ஆன்மாக்களும் பாசங்களும் இருந்தாலும் கடவுள் எங்கும் உள்ளவர்.

## 2. அத்துவிதம்

உலகத்திலேயுள்ள பொருள்களெல்லாம் சூடு உள்ளவைகள். நாம் ஒரு மரத்தைக் காண்கிறோம். அதிலே சூடு இருக்கின்றது. ஆகவே அங்கே

மரம், சூடு என்ற இரண்டு பொருள்கள் இருக்கின்றன. ஆயினும் நாம் அங்கே ஒருபொருள்தான் இருக்கிறதென்று சொல்லுகிறோம். இதற்கு இரண்டு நியாயமுண்டு. முதலாவது சூடானது மரத்தில் தங்கியிருக்கிற பொருள். இரண்டாவது மரத்தோடு ஒத்துப் பார்க்கும்பொழுது சூடானது அவதானிக்கக்கூடிய பொருளன்று. ஆதலால் ஒரு பொருள்தான் இருக்கிறதென்று சொல்லுகிறோம். உள்ளபடி இரண்டு பொருள்கள் இருக்கின்றன.

இப்படியே கடவுளிலே ஆன்மாக்கள் தங்கி இருக்கின்றபடியாலும், கடவுளோடு ஒத்துப் பார்க்கும் போது ஆன்மாக்கள் அவதானிக்கக் கூடிய பொருள்களல்லவாதலாலும், கடவுளும் ஆன்மாவும் ஒரே பொருள் என்று சொல்லுவர். அன்றியும் ஆன்மாக்கள் கடவுளோடு வேறற நிற்கின்றன. வேறற நிற்றல் அத்துவிதம் எனப் படும். ஆதலால் கடவுளும் ஆன்மாவும் அத்துவிதம்.

### 3. சத்து

சத்து என்பதன் கருத்து உள்ள பொருள். அசத்து என்பது இல்லாத பொருள். கடவுள், ஆன்மா, பாசமாகிய மூன்றும் உள்ள பொருள்களாம். ஆயினும் கடவுளின் பெருமையை நோக்கும்போது ஆன்மாவானது இல்லாத பொருள் என்று நினைக்கப்படத்தக்கதாயிருக்கிறது. எதுபோல வெனில், நட்சத்திரங்கள் இரவில் ஒளி

தருவதுபோலப் பகலிலும் ஒளி தருகின்றன. ஆயினும் சூரியனுடைய ஒளி அவைகளுடைய ஒளியிலும் பார்க்க மிக அதிகம் பிரகாசிப்பதினாலே, நட்சத்திரங்களுடைய ஒளியைப் பகலிலே நாங்கள் காண்பதில்லை; முழுவதும் சூரியனுடைய ஒளி என்றே எண்ணுகிறோம். இப்படியே கடவுளையும் ஆன்மாவையும் ஒத்து அவதானிக்கும்போது, கடவுள் சத் என்றும், ஆன்மா அசத் என்றும் சொல்லுகிறோம். பாசங்களையும் ஆன்மாவையும் ஒத்துப் பார்க்கும் பொழுது, பாசங்கள் அற்ப பொருள்களாதலால் அவைகள் அசத் என்றும், ஆன்மா சத் என்றுஞ் சொல்லப்படும். ஆதலால் ஆன்மாவுக்குச் சதசத் என்னும் பெயருண்டு. இவைகளைத் தனித்தனி பார்க்கும்போது சத்துக்களாம். கடவுள் சுத்த சத் ஆவர்.

## 4. சித்து

சித்து என்பதன் கருத்து அறிவுள்ளது. கடவுள் அறிவேயாயுள்ளவர். ஆதலால் கடவுள் சித்துப் பொருளாவர். பாசங்கள் அறிவில்லாதன. அவைகள் அசித்துப் பொருள்கள். ஆன்மா தன்னறிவில்லாமல் இருத்தலால் அசித்தாகவும், அறிவிக்க அறிதலினால் சித்தாகவும் எண்ணப் படுகின்றது. ஆதலால் அது சித சித் என்று சொல்லப்படும். கடவுள் சுத்தசித் ஆவர்.

## 5. ஆநந்தம்

ஆன்மாக்கள் பாசங்களிலே கட்டுப்பட்டு இருத்தலினாலே அவைகள் பேரின்பத்தை

அநுபவியாமலிருக்கின்றன. உலகத்திலே அவைகளுக்கு வரும் இன்பங்கள் உள்ளபடி துன்பங்களுக்குக் காரணமானவைகளாம். ஒரு குழந்தை மோதகத்தைத் தின்னுகிறபொழுது இன்பத்தை அனுபவிக்கிறதென்று சொல்லுகிறோம். அது உள்ளபடி இன்பமன்று. ஏனென்றால், அதை ஒரு காகம் பறித்துக்கொண்டு போய்விட்டால், அல்லது அது வயிற்றிலே மந்தப்பட்டு வியாதி உண்டாக்கினால் துன்பமாய் முடிகின்றது. அல்லது வேறொருநாள் மோதகந்தின்ன விரும்பும்போது, மோதகம் இல்லாவிட்டால் துன்பமாய் முடிகின்றது. உலகப் பொருள்கள் ஆசையை எழுப்புகின்றன. அந்த ஆசையினாலே துன்பம் உண்டாகும். ஆதலால், உலக இன்பங்களெல்லாம் உள்ளபடி துன்பங்களாம். நாம் பாசங்களோடு சார்ந்து நிற்கும் வரைக்கும் நமக்குச் சுத்த இன்பம் இல்லை. நமக்கு உண்மையான இன்பம் வருவது நாம் கடவுளோடு சார்ந்து நிற்கும்பொழுதேயாம். கடவுள் இன்பமே உருவாயுள்ளவர். ஆதலால் கடவுள் சுத்த ஆநந்தம் ஆனவர்.

மேலே கூறியவகையால் கடவுள் சுத்தசத் * என்றும், சுத்தசித் * என்றும், சுத்த ஆநந்தம் * என்றும் விளங்கும். சிவம் என்னும் பெயருக்கு இம் மூன்று கருத்தும் உண்டு. ஆகலான், கடவுளுக்குச் சிவம் என்று பெயர்.

---

* இந்தத் தன்மைகள் கடவுளுடைய தடத்தலக்கணங்களாம். அவருடைய சொருபலக்கணம் வாக்குக்கு எட்டாதது. "சொல் விறந்து நின்ற தொன்மை" என்பது திருவாசகம்.

## ஏழாம் அதிகாரம்
## சிவபெருமானின் மூர்த்தங்கள்

கடவுள், ஆன்மா, ஆணவம், கர்மம், மாயை என ஐந்துவகையான பொருள்கள் உண்டு. நாங்கள் உலகத்திலுள்ள பலவகையான பொருள்களை அறிகிறோம். ஆகாயத்திலே தோற்றுகிற சூரியன் சந்திரன் முதலிய உலகங்களைக் காண்கிறோம். கண்ணுக்குத் தோற்றாத காற்றுப் பொருள்களைப் பரிசத்தினால் அல்லது அலைகளில் உண்டாகிற சத்தத்தினால் அறிகின்றோம் இவைகள் எல்லாம் மாயையில் இருந்து தோற்றிய பொருள்களாம். மாயைப் பொருள்களை அல்லாமல் வேறொரு பொருளையும் நாங்கள் கண் முதலிய பொறிகளினால் அறிந்துகொள்ள இயலாது. ஆகலால் மாயைப்பொருளல்லாத கடவுளைக் கண் முதலிய புலன்களால் அறிதல் இயலாது.

நாம் ஒரு புகைவண்டியை ஒருமுறை பார்த்தால், பின்பு அதனுடைய உருவத்தை மனத்திலே எண்ணுதல்கூடும். நாம் ஒரு பொருளைக் காணுவிட்டாலும், அது இப்படிப்பட்டதென்று எமக்கு ஒருவர் சொன்னால், அப்படியான பொருளை நாம் மனசிலே நினைத்தல் கூடும். கடவுளை நாம் இப்படி நினைத்துக்கொள்ளவும் இயலாது. ஆகலாலே "உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்" என்றும், "சித்தமுஞ் செல்லாச் சேட்சியன்" என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்லியருளினார்.

ஆயினும், நம்மை ஈடேற்றுதற்காக நாம் கடவுளை நினைக்கவேண்டி இருக்கிறது. கடவுளிலே பற்று வளர வளரப் பாசங்கள் வலி கெடுகின்றன. அல்லாமலும் நாம் கடைசியாய் அடையவேண்டிய பொருள் கடவுளாம். ஆதலால் நாம் அவரை நினைப்பது அவசியம். அவரை அறியாமல் நாம் அவரை நினைப்பது எப்படி? இதற்கு வழியை வேதங்களிலும் ஆகமங்களிலும் கடவுள் காட்டியருளி யிருக்கின்றார்.

கடவுள் தம்மை வழிபடுதற்கு அநேக † திருவுருவங்களைக் கற்பித்தருளி யிருக்கின்றார். அவை சிவலிங்கமும், உமாதேவியார், விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர், நடேசர் முதலியவர்களைக் குறிக்குந் திருவுருவங்களுமாம். இந்தத் திருவுருவங்களை நாம் கோயில்களிலே காணலாம். இவைகளுள் நடேசர் சிவபெருமான் என்றும், உமாதேவியார் சிவபெருமானுடைய திருவருட்சத்தி என்றும், மற்றைய நால்வரும் சிவபெருமானுடைய திருக்குமாரர் என்றும் பொதுவாகச் சொல்லப் படுவர்.

வாதுள ஆகமம்

"யோகீநாஞ்சயதீநாஞ்சத்யாநிநாம்மந்த்ரிணுந்ததா!
த்யாநபூசாநிமித்தாயநிஷ்களம்சகளம்பவேத்!!"

---

† அவைகளை அவருடைய உருவங்களென்று நினைக்கலாகாது. அவருக்கு உருவமே இல்லை. அவைகள் நாங்கள் தியானிப்பதற்காகக் கற்பிக்கப்பட்டவைகள்.

திருக்குமாரர் என்றது * அவரிலிருந்து வேறுகாமல் தோன்றும் திருவருட்சத்திகளே. ஆதலால் விநாயகர் முதலியோரும் அவருடைய திருவருட் சத்தியாம். சத்தியும் சிவமும் நெருப்பும் அதன் சூடும்போல ஒன்ருனவைகள். ஆகவே சிவபெருமான், உமாதேவியார், விநாயகர் என்ற பல பேர்கள் இருந்தாலும் பதி ஒரே பொருளாம். அப்பர் சுவாமிகள், "ஒருவர்தாம் பல பேருளர் காண்மினே" என்ருர். இருக்கு வேதம் ( 1. 124. 64 ). "இந்திரன், மித்ரன், வருணன், அக்கினி, திவ்யன், சுபர்ணன், கருத்மான் முதலிய பல பெயர்களால் அறிவாளிகள் கடவுளைச் சொல்லுகிருர்கள். ஆயினும் கடவுள் ஒருவரே" என்று கூறுகின்றது.

இத்திருவுருவங்களைக் கோயிலிலே கண்டு கடவுளென்று நாம் வணங்கவேண்டும். கோயில் அல்லாஇடங்களிலே இவைகளை மனத்தில் எண்ணி வணங்கவேண்டும். இந்தத் திருவுருவங்களிலே கடவுளுடைய குணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

* "கணேசஸ்து கலோத்பவ" என்றும், "ஷண்முகோஹ்ருதயேஜாத:" என்றும் வாதுள ஆகமங் கூறுகின்றது. சிவஞானசித்தியாரிலே ( சு. 1 47 ) சிவபெருமானுடைய திருவுருவமும் உருவத்தின் கூறுகளும் எல்லாம் திருவருளே என்று சொல்லப்படுதலால், அவருடைய கழுத்தும் இருதயமும் அருளேயாம். ஆதலால் அவற்றில் முறையே தோன்றியவராக எண்ணப்படும் விநாயகக்கடவுளும் சுப்பிரமணியக்கடவுளும் அவருடைய திருவருளாம்.

## கொடிமரம்

திருவிழாக் காலத்திலே கோயிலுக்குப் போனல் கொடிமரத்திலே ஒரு சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். சீலையிலே ஒரு பசு எழுதப்பட்டிருக்கின்றது. அந்தச் சீலையோடு ஒரு தர்ப்பைக் கயிறு சேர்ந்திருக்கின்றது. கொடிமரம் சிவம் என்றும், பசு எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைக் கயிறு பாசம் என்றும் சிவாகமம் சொல்லுகின்றது.

## அசித ஆகமம்

"பதிஸ்தம்பஇதிப்ரேக்தோபசு: ககஇதீஸ்ம்ருத:
ரஜ்சு: பாசஇதிப்ரேக்த: த்ரிவிதாஸ்தேசமந்திச."

கடவுளிலே ஆன்மா தங்கியிருப்பதுபோலக் கொடிமரத்திலே சீலை தங்கியிருக்கின்றது. கொடிமரமும் சீலையுமென்று இரண்டு பொருள்கள் இருந்தாலும், அதைப் பார்க்கிறவர்கள் கொடிமரமென்று ஒரே பொருளாக மதிக்கிருர்கள். சிவமும் ஆன்மாவும் அத்துவிதமென்பதை இது விளக்குகின்றது. கயிறு சீலையைச் சுற்றியிருப்பதுபோலப் பாசம் ஆன்மாவைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. முந்திய அதிகாரத்திலே சொல்லப்பட்ட முப்பொருட் சம்பந்தங்களைக் கொடிமரத்திலே காணலாம்.

## பலிபீடம்

கொடிமரத்துக்கு அப்பாலே பலிபீடத்தைக் காணலாம். அதுவும் சிவத்தையே குறிக்கும்.

அதற்குப் பத்திரலிங்கம் என்று பெயர். * அதிலே நாம் நம்முடைய அகங்காரத்தைப் பலிசெய்து, "நம் செயல் ஒன்றுமில்லை, எல்லாம் சிவன் செயலே" என்று தெளியலாம்.

## சிவலிங்கம்

அதற்கு அப்பால் மூலஸ்தானத்திலே சிவலிங்கம் இருக்கிறது. சிவலிங்கம் சோதிக் கொழுந்து ரூபமுள்ளது. ○ சோதி என்பது ஞான சோதி; நமது பாசங்களை எரிப்பதாகிய நெருப்பு வடிவம்; நெருப்பானது அழுக்குப் பொருள்களை எரிப்பதுபோல, சிவமாகிய ஞானம் ஆன்மாக்களுக்கு அஞ்ஞானத்தைக் கொடுப்பனவாகிய பாசங்களை எரிப்பது. ஆகவே சிவலிங்கம் சிவபெருமானது ஞானரூபத்தைக் குறிக்கின்றது. வணங்குவோர் தங்களைச் சிவபெருமானுகிய லிங்க அக்கினியிலே ஒப்புக்கொடுத்துவிட்டால், அது அவர்களுடைய பாசங்களை எரித்து அவர்களைச் சுத்தமாக்கிவிடும்.

---

* "பலிபீடம் பத்திரலிங்கமாம்" திருமந்திரம்.

○ ஓம் என்னும் எழுத்துக் குறிக்கும் பொருளாகிய பிரணவம் ஞானரூபம். சிவலிங்கம் பிரணவரூபம் என்று திருமந்திரம் கூறுகின்றது. ஆதலாலே சிவலிங்கம் ஞானரூபம் என்றறிக. "இலிங்க நற்பீடமிசையும் ஓங்காரம், இலிங்கநற்கண்டம் நிறையும் அகாரம் இலிங்கத்துள் வட்டம் நிறையும் உகாரம். இலிங்கம் மகார நிறை விந்து நாதமே."

## நந்தி

அப்படிச் சுத்தமாக்கப்பட்ட ஆன்மாவைக் குறிப்பது பலிபீடத்துக்கும் சிவலிங்கத்துக்கும் இடையிலேயுள்ள நந்தியாம்; நந்தி என்றால் சிவன் என்பது கருத்து. பாசங்களினின்றும் நீங்கிய ஆன்மாவானது சிவமாகி அருளுருவம் பெற்று அவரோடு ஒன்றாக நிற்கும் என்பதை அது காட்டுகின்றது.

குறிப்பு: வேதாகமங்களிலுள்ள உண்மைகளின் சாரம் முழுவதும் கோயிலிலுள்ள திருவுருவங்களில் அமைந்திருப்பதைக் காண்க.

## உமாதேவியார்

உமாதேவியார் சிவபெருமானுடைய அருட் சத்தி என்று சொல்லப்படுவர். இவ்வுலகத்தில் எங்களை அதிக அன்பாய்க் காத்துவருபவர் நமது தாயாரே. அதுபோல நம்மைத் தமது அன்பினாலே ஈடேறச்செய்பவர் சிவ அருட்சத்தியாகிய உமாதேவியாரே. ஆதலால் நாம் அவரை நம்முடைய அம்பாள் என்று சொல்லுகிறோம். அவருக்கு அபயம் வரதம் என்னும் இரண்டு திருக்கரங்கள் உண்டு. பாசங்களாற் கட்டுப்பட்டு அஞ்ஞானமாகிய இருளால் மூடப்பட்டிருக்கும் ஆன்மாவானது உய்தற்பொருட்டுத் திருவருளைத் தேடி வரும்பொழுது, உலகத் துன்பங்களுக்குப் பயப்பட வேண்டாமென்று குறித்து ஆறுதல் பண்ணி, அநுக்கிரகஞ் செய்யும் பாவனையையுடைய திருக்

கரம் அபயகரமென்று சொல்லப்படும். ஞான மாகிய திருவடியைக் காட்டி, "இதைத் தருவோம் பெற்றுக்கொள்" என்று குறிக்குந் திருக்கரம் வரதகரம் எனப்படும். இப்படியான திருக்கரங்கள் மற்றைய மூர்த்திகளுக்கும் உள்ளன.

## விநாயகக் கடவுள்

விநாயகக் கடவுளுக்கு யானைமுகம் போன்ற முகம் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். இந்த முகம்* ஓம் என்ற எழுத்தைப்போன்று அதைக் குறிக்கின்றது. இந்த எழுத்துப் பிரணவமாகிய சுத்த ஞானத்தைக் காட்டுவது.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் புதமலர் தலைக்கணி வோமே."

விநாயகக் கடவுள் சுத்த ஞானமே உருவமாக உடையவர். சிவபெருமானும் ஞானமே உருவமாக உடையவர். ஆதலால் விநாயகக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரேயாவர். சிவலிங்கமும் பிரணவரூபம் என்பது முன்னே காட்டப்பட்டது. விநாயகக் கடவுள் ஞானமே உருவமாக உடைய மூர்த்தியாதலால், ஞானத்தைப் பெறுதற்காக அவரை நாம் வழிபடுகின்றோம்.

---

* சம்ஸ்கிருதத்தில் தென்னெழுத்திலும், வடவெழுத்தில் (தேவநாகரம்) வேதோபநிடதங்களில் சம்யுத்தாட்சர பிரணவத்தி லும் துதிக்கை போன்ற பகுதியைக் காண்க.

## வைரவக் கடவுள்

வைரவக் கடவுளுடைய திருக்கரத்திலே சூலாயுதம் இருக்கிறது. அதற்கு மூன்று கவர்கள் உண்டு. அந்த மூன்று கவர்களும் ஐந்தொழில்களையுஞ் செய்யும் ஆரணி, ஜநநி, ரோதயித்திரி என்ற மூன்று சத்திகளையும் குறிக்கின்றன என்று வாதுள ஆகமம் கூறுகின்றது. மேலும் பட்டினத்தடிகள்,

"மூவிலை யொருதாட் சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே."

எனக் கூறியருளினர்.

வைரவக் கடவுள் சூலாயுதத்தைத் தரித்திருப்பதனால் அவர் பஞ்சகிருத்தியங்கள் செய்பவரென்று நன்கு விளங்குகின்றது. பஞ்சகிருத்தியஞ் செய்பவர் சிவபெருமானாதலால், வைரவக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரே என்பது வெளிப்படை.

அன்றியும் முன்னொரு காலத்திலே பிரமா முதலிய தேவர்க ளெல்லாரும் செருக்குள்ளவர்களாகிக் கடவுளை வணங்காமல் மிகவும் கெட்டு அலைந்தார்கள். வைரவக் கடவுள் அவர்கள் கெட்டுப்போனதைக் கண்டு இரக்கங் கொண்டு பிரமாவுடைய தலைகளில் ஒன்றைக் கிள்ளியும், மற்றைத் தேவர்களுக்கு வேறு வைத்தியஞ் செய்தும், அவர்களுடைய செருக்கை அகற்றி அவர்களை நல்வழிப்படுத்தினரென்று புராணங்கள்

சொல்லுகின்றன. ஆயினும் அப்பர் சுவாமிகள் "பிரமன்றன் சிரமரிந்த பெரியோய் போற்றி!" எனச் சிவபெருமானே பிரமாவுடைய தலையைக் கிள்ளினாரென்று பாடியருளினர். இதனாலும், வைரவக் கடவுளும் சிவபெருமானும் பேதமற்றவர்களென்று விளங்குகின்றது. தேவர்கள் கெட்டுப் போகாதபடி அவர்களுடைய செருக்கை அடக்கி அவர்களை நல்வழிப்படுத்திக் காத்தது போல, நம்முடைய செருக்கையும் அடக்கி நாம் உய்தற்காக வைரவக் கடவுளை வழிபடுகிறோம்.

## வீரபத்திரக் கடவுள்

நாமெல்லோரும் உலக காரியங்களைத்தாம் அதிகமாக நினைக்கின்றோம். கடவுளை அவ்வளவு அதிகமாக நினைக்கிறதில்லை. கடவுளை நினைக்கிற பொழுதும், சில காலங்களிலே உலக காரியங்களைப்பற்றிய எண்ணம் வந்து கடவுளைப்பற்றிய எண்ணத்தை மறைத்துவிடுகின்றது. ஒருநாள் ஒருவர் சிவபூசை செய்துகொண்டிருந்தார். அப்போது அவருடைய எசமானன் அவரைக் கூப்பிட்டான். அவர் சிவபூசையை அவ்வளவில் விட்டு, அவனிடம் போனார். சிவபூசையிலும் பார்க்க எசமானனுடைய பேச்சு மேலானதென்று அவர் நினைத்தார். இப்படியாக நினைப்பது எல்லாப் பிழைகளிலும் பெரும் பிழை; இப்படியே கடவுளுடைய முதன்மையை மறப்பதாகிய பிழையை நீக்குதற்காக வீரபத்திரக் கடவுளை நாம் வழிபடுகின்றோம்.

முற்காலத்திலே தக்கன் என்று ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமான் மேலானவரல்லர் என்று நினைத்து நடந்தான். வீரபத்திரக் கடவுள் அவனிலே இரங்கி அவனைப் பரிகரித்து அவனுக்கு நல்லறிவு வரச்செய்தார். தக்கனுக்கு இப்படி நல்லறிவு வரச்செய்தவர் சிவபெருமானே என்று மாணிக்கவாசக சுவாமிகள்:—

திருச்சிற்றம்பலம்

"தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடி
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ"

திருச்சிற்றம்பலம்

என்று பாடியருளினர். ஆதலால் வீரபத்திரக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரேயாவர்.

### சுப்பிரமணியக் கடவுள்

சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரேயென்பது கந்தபுராணத்தில் இலகுவிற் காணலாம். சிவபெருமான் அப்படிச் சொல்லியருளியதாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டுநின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான்சீரும்
போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"

மேலும், சுப்பிரமணியக் கடவுள் குருமூர்த்தியுமாம். "குருவடிவாய் வந்தென் உள்ளங் குளிரக் குதிகொண்டவே" என்பதைக் கந்தரலங்காரத்திற்

காண்க. உலக குருவாகிய அகத்திய முனிவருக்கு இவரே குருவாயிருந்தருளினார்.

“அருமறை யாகமம் மங்கமருங் கலைநூ றெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருவே”

என்று சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டிருக்கிறது. எங்களுடைய குருவாக இருந்து பாசங்களை நீக்குதற்கு ஆகவேண்டிய வழிகள் எல்லாவற்றையும் அறிந்து மோட்சத்தைப் பெறுதற்காக நாம் சுப்பிரமணியக் கடவுளை வழிபடுகின்றோம். அவருக்குப் பக்கத்திலேயுள்ள தெய்வயானையம்மை *கிரியாசத்தியாகும். ஆதலால் நல்ல செய்கைகளை நாங்கள் செய்தற்காக அவரைப் பணிகின்றோம். வள்ளிநாயகியம்மை *இச்சாசத்தி. ஆதலால் நமக்கு நல்ல இச்சைகள் (விருப்பங்கள்) உண்டாதற்காக அவரை வணங்குகிறோம். அவருடைய திருக்கரத்திலேயுள்ள வேலாயுதம் *ஞானசத்தி. ஆதலால் நமது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைப் பெறுதற்காக வேலாயுதத்தை வணங்குகிறோம்.

## நடேசப் பெருமான்

நடேசப் பெருமானுடைய ஒரு திருக்கரத்திலே உடுக்கை இருக்கின்றது. அது படைத்தலாகிய

* இம்மூன்று சத்திகளும் சிவபெருமானுடைய சத்திகளாவர்; இவர்கள் சுப்பிரமணியக் கடவுளிடத்தும் இருத்தலாலும் சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரே யென்பது பெறப்படும்.

தொழிலைக் குறிக்கின்றது. அபயமாகிய ஒரு திருக்கரம் காத்தலாகிய தொழிலைக குறிக்கின்றது. வேறொரு திருக்கரத்திலே நெருப்பு இருத்தல் அழித்தலைக் குறிக்கின்றது. ஊன்றி நிற்கின்றதாகிய ஒரு பாதம் மறைத்தலைக் குறிக்கின்றது. உயர்த்திய மற்றப் பாதம் அருளைக் குறிக்கின்றது.

"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்தி லுற்றதி ரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

நடேசப் பெருமானுடைய திருவுருவத்துக்கு இன்னும் அநேக பொருள்கள் உண்டு; தீட்சை பெற்றவர்கள் அவைகளை "உண்மை விளக்கம்" என்னும் நூலிலே பார்த்தறிக.

குறிப்பு: மேலே சொல்லப்பட்ட மூர்த்தங்கள் நாம் கடவுளை வழிபடுதற்காக அவரால் விதிக்கப் பட்டவைகளாம். இவைகளைப்பற்றிய வேறு சில உண்மைகள் ஒருகுருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த சம்பாஷணையாகக் கீழே காட்டப்படுகின்றன.

சிஷ்யன். கோயிலிலே காணப்படும் இந்தத் திருவுருவங்கள் கடவுளா? அல்லது கடவுளுடைய அடையாளங்களா?

குரு: அந்தத் திருவுருவங்கள் அடையாளங்களல்ல, அவைகள் கடவுளேயாம். ஏனென்

ரால், கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றார். ஆதலாலே அந்தத் திருவுருவங்களிலும் நிறைந்திருக்கின்றார். ஆதலால் அவைகள் கடவுளேயாம்.

சிஷ்: தெருவிலே ஒரு கல்லை அல்லது மரத்தைக் கடவுளென்று கும்பிடலாமா? அவைகளிலும் கடவுள் நிறைந்திருக்கிறார்தானே.

குரு: நமக்குப் பிரியமானல் அவைகளையுங் கும்பிடலாம். கோயிலிலுள்ள திருவுருவங்களிலே கடவுளுடைய தன்மைகளைக் காட்டும் அறிகுறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் தியானத்துக்கும் வணக்கத்துக்கும் பெருந் துணையாய் உள்ளவைகள். இந்த அறிகுறிகள் தெருவிலே கிடக்கிற கல்லிலும் மரத்திலும் இருக்கின்றனவா? இந்தத் திருவுருவங்களிலே. கடவுளுடைய மந்திரரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்தத் திருவுருவங்களை வழிபடுதல் கடவுளால் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இந்தத் திருவுருவங்களை வழிபடுதல் கடவுளை வழிபடுதலாம்.

சிஷ்: அறிவாலே கூடினவர்களுங் கோயிலுக்குப் போகவேண்டுமா?

குரு: எவர்களுங் கோயிலுக்குப் போகவேண்டியதுதான். மாணிக்கவாசக சுவாமிகள்,

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் முதலானவர்களிலும் பார்க்க அறிவாலே கூடினவர்கள் எப்போதாவது இருந்தார்களா? அவர்கள் எப்போதாவது கோயிலுக்குப் போகாமல் இருந்தார்களா? எந்த ஞானிகளும் கோயிலை விலக்கமாட்டார்கள்.

சிஷ். சிலர் "மனந்தானே கோயில்; மனசிலே கடவுளைக் கும்பிட்டாற் போதாதா?" என்று சொல்லுகிறார்கள்; அது சரிதானா?

குரு: கடவுளை வணங்குவதிலே விருப்பமில்லாதவர்கள் மாத்திரம் இப்படிப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். சிவபத்தி யுள்ளவர்கள் ஒருவரும் இப்படிச் சொல்லமாட்டார்கள். மனசிலே கும்பிடுவதெப்படி?

சிஷ்: கடவுளை ஒரு உருவம்போல நினைத்துக் கும்பிடலாம்.

குரு: கோயில்களி லுள்ள திருவுருவங்களுக்கு இருக்கின்ற மகிமை ஒன்றும் அந்த உருவத்துக்கில்லையே. அன்றியும் மனசிலே உருவம் உண்டாக்கிக் கும்பிடுவதிலும் பார்க்க, கண்ணாலே காணும் ரூபத்தைப் பார்த்துக் கும்பிடுவது இலகு. ஒரு பெரிய கணக்கை மனத்தாலே செய்வதிலும் பார்க்க, அதிலுள்ள எண்களை ஒன்றிலே எழுதிச் செய்வது எவ்வளவு இலகு. ஆத

லால் கோயிலிலுள்ள திருவுருவங்களை வணங்குவது உத்தமம். கோயிலுக்குப் போக இயலாத காலங்களிலே மந்திர வடிவமைக்கப்பட்ட அந்தத் திருவுருவங்களை நினைத்துக்கொண்டு நாங்கள் கும்பிடலாம். (யோகிகள் ஞானிகளுக்கு வேறு வழிகளுமுண்டு.)

சிஷ்: வேறெதை நாம் வணங்கலாம்?

குரு: சிவனடியார்களையும், திருநீற்றையும், உருத்திராக்கத்தையும், பஞ்சாக்கரத்தையும் சிவபெருமான் என்று நாம் வணங்கலாம்.

சிஷ்: சிவனடியார் என்பவர் யார்?

குரு: சிவனிலே மெய்யன்பு நிறைந்தவர்கள் சிவனடியார்களாம். மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், சண்டேசுரர் முதலிய நாயன்மாரும், அகத்தியர், ததீசி முதலிய முனிவர்களும், பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களும், மெய்கண்டதேவர் முதலிய ஞான நூலாசிரியர்களும் சிவனடியாருக்குட் பிரசித்தி பெற்றவர்கள்.

"தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவினின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன்
நீபரன் றன்னைநெஞ்சி னினைவையே னிறைந்தபூசை
யாய்பரம் பொருளைநாளு மர்ச்சிநீ யன்புசெய்தே."

சித்தியார் (II 28)

———

# எட்டாம் அதிகாரம்—சைவசாதனங்கள்

## 1. திருநீறு

திருநீறானது சிவசத்தியின் வடிவமாயுள்ளது. சம்பந்தசுவாமி பாடியருளிய திருநீற்றுப் பதிகமானது பரையின் வரலாறாகும் * என்னும் ஆன்றோர் வாக்கு இதற்கு நேரான சான்றாகும். "நீற்றுப் பதிகம் நிகழ்த்துங்காலை மாற்றுப் பரையின் வரலாறாகும்" என்பது அவ்வாக்கு. "முத்தி தருவது நீறு" என்றும், "போதம் தருவது நீறு" என்றும் சம்பந்த சுவாமிகள் பாடியருளியதும் இதைக் காட்டுகின்றது. எவ்வாறெனில் ஆன்மாக்களுக்கு முத்தியையும் போதத்தையும் (சிவஞானம்) கொடுப்பது சிவசத்தி எனத் திருவருட்பயன் † முதலிய ஞான நூல்கள் கூறுகின்றன. திருநீறு முத்தியையும் போதத்தையும் கொடுத்தலால், அது சிவசத்தியென்பது பெறப்படுகின்றது. அதிலே சிவசத்தி சாந்நித்தியமாதற்குச் சிவசிவ என்னும் மந்திரத்தையேனும் செபித்தல் வேண்டும். அநுட்டான முறையாகப் பூசும்போது பதினொரு மந்திரங்களும் அதிலே பதிக்கப்படவேண்டும்;

திருநீற்றை உத்தூளனமாகவேனும் திரிபுண்டரமாகவேனும் தரிக்கலாம். ‡ உத்தூளனமாவது

---

* பரை என்றது சிவசத்தியாகிய பராசத்தியையாம்.

† "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி" (I 2)

‡ திருநீற்றை வட்டமாயேனும் சதுரமாயேனும் அணிதலாகாது.

பரவப் பூசுதல். திரிபுண்டரமாவது மூன்று குறியாகத் தரிப்பது. மூன்று குறியாகத் தரிக்கும் போது குறிகள் வளையாமலும் இடையறாமலும் ஒன்றையொன்று தீண்டாமலும் இடைவெளி அதிகமிருக்கத் தரித்தல்வேண்டும். சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள், புயங்கள், முழங் கைகள், மணிக்கட்டுக்கள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னும் பதினாறு இடத்தும் குறி தரிக்கலாம். நெற்றியில் இரண்டுகடைப் புருவ நீளமும், மார்பிலும் புயங்களிலும் ஆறங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வொரு அங்குல நீளமுமாகத் தரிக்கவேண்டும். திருநீற்றுக்குமேலே சந்தனமேனும் குங்குமமேனும் அணிதலாகாது. இவற்றைத் திருநீற்றுக்குக் கீழே புருவ நடுவிலே தரிக்கலாம்.

காலையிலும் மத்தியானத்திலும், மாலையிலும் ஸ்நானஞ் செய்தவுடனும் பூசைக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ்செய்து கால் கழுவியபின்னும் திருநீறு ஆவசியகம் பூசவேண்டும்.

திருநீற்றின் மகிமை சம்பந்த சுவாமி பாடியருளிய திருநீற்றுப் பதிகத்திலும், வேதங்களிலும் அநேக உபநிஷதங்களிலும் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றது. ப்ருக்த்ஜாபால உபநிஷத்திலே (1—14) திருநீற்றுக்கு ஐந்து பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன: விபூதி (மேலான செல்வம்) பசிதம் (+ ஒளியைத் தருவது) ஒளி

(= ஞானம்). பஸ்பம் (= பாவங்களை நீக்குவது); க்ஷாரம் (= தடைகளை அறுப்பது); ரட்சை (=காப்பது) என்பனவாம். ஒருவன் திருநீறு பூசினால்; அத்திருநீறு படிகின்ற ஒவ்வொரு மயிர்த் துவாரமும் சிவலிங்கமாகின்றதென்றும், அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. (7—5)

காலாக்கி ருத்ரோபநிஷத்திலே திரிபுண்டரத்தின் முதற்குறி பிரணவத்தில் அகரத்தையும், கிரியாசத்தியையும், மகேசுவரனையுங் குறிக்கின்றது என்றும், இரண்டாவது குறி உகரத்தையும் இச்சாசத்தியையும், சதாசிவனையுங் குறிக்கின்றது என்றும், மூன்றாவது குறி மகரத்தையும் ஞானசத்தியையும் மகாதேவனையுங் குறிக்கின்றது என்றும் ஏழாம் எட்டாம் ஒன்பதாம் மந்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது.

நெஞ்சுவிடு தூது

"ஆதியின்மேல்,
உற்றதிருநீறுஞ் சிவாலயமும் உள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே."

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வா யுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே."

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே."

திருச்சிற்றம்பலம்

## 2. உருத்திராக்ஷம்.

ஆன்மாக்கள் பாசங்களினால் அடையுந் துன்பங்களைக் குறித்துச் சிவபெருமான் இரங்குகின்றார். அவருடைய இரக்கம் அவரது திருக்கண்ணினின்றுஞ் சொரிந்து கொண்டிருக்கின்றது. அந்த இரக்கத்தைக் குறிப்பது உருத்திராக்ஷமாம். (உருத்திரன் - சிவன். அக்ஷம் - கண்). ஆதலால் சைவர்கள் உருத்திராக்ஷ மணி தரிப்பர். உருத்திராக்ஷத்தைக் காணும்பொழுதெல்லாம் அது சிவபெருமானுடைய கருணையென்று நாம் அதை வணங்கல்வேண்டும். "சிவபெருமான் நம்முடைய பாசங்களாகிய துன்பத்துக்காக இவ்வளவு இரங்குவாரானால், நாம் அவைகளைப் போக்க எவ்வளவு முயற்சி செய்தல்வேண்டும்! நாம் உலக இன்பங்களை நினைத்தலாகாது" என்று உருத்திராக்ஷத்தைக் காணும்போது நாம் எண்ணுகிறோம். சந்தியாவந்தனம், சிவமந்திர செபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம் முதலிய சிவ வழிபாடு செய்யுங் காலங்களில உருத்திராக்ஷம் தரிப்பது உத்தமம். உருத்திராக்ஷம் சிரசில் இருபத்திரண்டு மணியும், கழுத்தில முப்பது மணியும், கைகளிற் பன்னிரண்டு மணியுமாகத் தரிக்கலாம். உருத்திராக்ஷம் தரிப்பவர்கள் உள்ளபடி சிவபத்திமான்களாய் இருத்தல்வேண்டும்.

## 3. பஞ்சாக்ஷரம்

கடவுளைத் தியானிப்பதற்கு மந்திரத் தியானத்தைப்போல வாய்ப்பானது வேறொன்றுமில்லை.

சிவ மந்திரம் பஞ்சாக்ஷரம் என்று சொல்லப்படும். சைவ சமயத்தவர்களுக்கு விபூதி தரிப்பது எவ்வளவு ஆவசியகமோ அவ்வளவு ஆவசியகம் பஞ்சாக்ஷர செபம்.

தீக்ஷை பெற்றவர்கள் மாத்திரம் அம்மந்திரத்தைத் தியானிக்கவும், ஓதவும் உரித்துள்ளவர்கள். சைவசமயிகளெல்லாரும் பஞ்சாக்ஷர செபஞ் செய்தல்வேண்டும். ஆதலாற் சைவசமயிகள் எல்லாரும் தீக்ஷை பெற்றிருத்தல் வேண்டும். சமய தீக்ஷை பெறாதவன் சைவசமயி எனப்படத் தகுதியில்லாதவன். ஒவ்வொரு சைவசமயியும் ஏழு வயதிலாவது அதற்கண்மையிலாவது சமய தீக்ஷை பெற்றுக் கிரமமாகப் பஞ்சாக்ஷர செபஞ்செய்து வருதல் வேண்டும். பஞ்சாக்ஷரத்தின் பொருளையும் பெருமையையும் சிவதீக்ஷை பெற்றவர்கள் உண்மை விளக்கம் திருவருட் பயன் முதலிய சைவசித்தாந்த நூல்களிற் காணலாம். திருஞானசம்பந்த சுவாமி, பஞ்சாக்ஷர மகிமையைப் பற்றிப் பின் வருமாறு பாடியிருக்கின்றார் :—

திருச்சிற்றம்பலம்

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவதும்
நாத ஞமை நமச்சி வாயவே."

திருச்சிற்றம்பலம்

———

## ஒன்பதாம் அதிகாரம்—சிவாலய தரிசனம்

ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துக்கொண்டு கோயிலுக்குப் போதல் வேண்டும். கோயிலுக்குக் கிட்டப் போனவுடனே கால்களைக் கழுவிக் கோபுரத்தைக் கும்பிட்டுக்கொண்டு திருநந்தி தேவரை வணங்கி, "பகவானே, அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசிப்பதற்கு அனுமதி தந்தருளும்" என்று வேண்டிக்கொண்டு உள்ளே போதல்வேண்டும். பின்பு பலிபீடத்தையும் நந்திதேவரையும் கும்பிடவேண்டும். அதன்பின் பிள்ளையாரையும், சிவலிங்கப் பெருமானையும், உமாதேவியாரையும், நடேசர், தக்ஷிணமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், சமயகுரவரையும் தரிசனம் செய்தல்வேண்டும்.

பிள்ளையாரைத் தரிசனஞ் செய்யும்பொழுது, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டிக் கும்பிடல் வேண்டும். கும்பிடும்போது வடக்கு அல்லது கிழக்கு நோக்கி நிற்றல்வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் மூன்று தரத்துக்குக் குறையாமற் செய்தல்வேண்டும். தலை, கைகள், செவிகள், மோவாய் புயங்கள் என்னும் எட்டு அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம். தலை, கைகள், முழந்தாள்கள் என்

னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். பின்பு எழுந்து இரண்டு கைகளையுங் குவித்துத் தியானஞ் செய்துகொண்டு மெல்லமெல்லக் கோயிலைச் சுற்றி வந்து பின்பும் சந்நிதானத்திலே நமஸ்காரஞ் செய்தல்வேண்டும்; * பிரதக்ஷிணஞ் செய்தபின்பு, சண்டேசுரர் சந்நிதியை யடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து வணங்கல் வேண்டும், பின்பு சுவாமி சந்நிதானத்தில் வந்து ஒருமுறை நமஸ்காரஞ்செய்து வீட்டுக்குப் போதல்வேண்டும். ஒவ்வொருநாளுங் கோயிலுக்குப் போவது உத்தமம்; ஒவ்வொரு நாளும் போக இயலாதவர்கள் திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயக சதுர்த்தி, விநாயகசட்டி, கந்தசட்டி, சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி முதலிய புண்ணிய காலங்களிலாயினும் சுவாமி தரிசனஞ் செய்தல் வேண்டும்.

கோயிலுக்குப் போனால் வேடிக்கைகளை விரும்பாமற் சிவ வழிபாட்டிலேயே மனசைச் செலுத்தல்வேண்டும். இந்த ஊரிலே வருஷத்துக்கு இரண்டுமுறை பெரிய நீதிபதி விசாரணைக்கு வரு

---

* பிரதக்ஷிணம் - சுற்றிக் கும்பிடுதல்; சரீரம் - முழுவதும் நிலத்திலே பொருந்தச் சுற்றுதல் அங்கப்பிரதக்ஷிணம் என்று சொல்லப்படும்.

கிறார். அங்கே நாம் நிற்கும்பொழுது எவ்வளவு அமைதியாயும் பயபத்தியாயும் நிற்கிறோம்; இருமல் வந்தாலும் அடக்கிவிடுகிறோம். நீதிபதிக்குமுன்னே இவ்வளவு பயபத்தியாய் நின்றால், நமது சக்கரவர்த்திக்குமுன் எப்படி நிற்போம். அப்படியானால் கடவுள் சந்நிதானத்திலே நாம் எப்படி நிற்க வேண்டும்? நமது சக்கரவர்த்திக்கு இந்தப் பூமியில் ஒரு சிறு பகுதியுண்டு; இந்தப் பூமி முழுவதும் அவருக்கிருந்தால் அவர் எவ்வளவு பெரியவராயிருப்பார். இந்தப் பூமியிலும் சூரியன் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரிது. சூரியனிலும் ஆயிரம் மடங்கு பெரிய நட்சத்திரங்கள் கோடாநு கோடி உள்ளன. இவைகள் எல்லாவற்றையும் உண்டாக்கிய சிவபெருமான் எவ்வளவு பெரியவர் என்பதை யோசித்துப் பாருங்கள்! உண்டாக்கியதும் எப்படி! உண்டாக்க வேண்டுமென்று அவர் நினைக்கவுமில்லை, அவர் இருக்க எல்லாம் உண்டாகின்றன. இப்படியானால் சிவபெருமானுடைய பெருமை எவ்வளவு? பெரிய நீதிபதிக்கு முன்னே நிற்கும்போது இருமல் வந்தாலும் அடக்கிக்கொண்டு பயபத்தியாய் நிற்றல்வேண்டுமானால், சிவபெருமானுடைய சந்நிதானத்திலே நாம் எவ்வளவு பயபத்தியாய் நிற்றல்வேண்டும்? கோயிலுக்குப் போகிறவர்கள் இயன்ற அளவு தொண்டு செய்வது உத்தமம். குடை பிடித்தல், விளக்குப் பிடித்தல், வாகனங் காவுதல், பூந்தோட்டத்துக்கு நீர்ப்பாய்ச்சுதல், கூட்டுதல், மெழுகுதல் முதலிய திருத்தொண்டுகளில் ஒன்றாவது செய்தல்வேண்டும்.

சில கோயில்களிலே நிகழும் திருவிழாக்களிலே மூன்று பெருங் கொடும் பாதகங்கள் செய்யப்படுகின்றன. கடவுளிலே அன்புடையவர்கள் அப்படியான விழாக்கள் நடைபெறும் போது அந்த இடங்களுக்குப் போகலாகாது; போகிறவர்கள் அந்தப் பாதகங்களுக்கு உடன்பட்டவராய்ப் பாதகர்களாவார்கள்.

இவற்றுள் மிகக் கொடிய பாதகம் சுவாமியுடைய திருமேனியிலே பொய்க் கரங்களையும் பொய்க் கால்களையும் கட்டுதலாம். இவைகளைச் சுவாமியிலே கயிற்றினால் வரிந்து இறுக்கிக்கட்டுதல் எவ்வளவு கொடிய சிவத்துரோகமாகும். அதைச் சுவாமியென்று நினைப்பவர்கள் இந்தக் கொடிய வேலையைச் செய்வார்களா? இப்படியான பொய்க் கைகளையும் கால்களையும் எங்களுடைய உடம்பிலே யாராயினும் கட்டுதற்கு வந்தால் நாங்கள் விடுவோமா? சுவாமியை ஒரு பாவைப்பிள்ளையென்று நினைப்பவர்மாத்திரம் அஞ்சாமல் இப்படியான செயல்களைச் செய்வார்கள். சுவாமியைப் பாவைப் பிள்ளையாக நினைத்தல் சுவாமியை எவ்வளவு நிந்தித்தலாக முடியும்!

இரண்டாவதான கொடிய பாதகம் யாதெனில், கோயிலிலே பெண்களைக்கொண்டு நடனம் செய்வித்தலாம். கோயிலுக்குப் போகிறவர்கள் கடவுளை வணங்குதலைக் கைவிட்டு இவர்களுடைய நடனத்தைப் பார்ப்பார்களாயின், அவர்கள் இந்தப்

பெண்களைக் கடவுளினும் மேலாக மதிப்பவர்களாகின்றனர். இப்படியாகக் கடவுளை அவமதித்தல் பெருஞ் சிவத்துரோகமேயாம்.

மூன்றாவதான சிவத்துரோகம் அர்த்தயாம காலத்தின்பின் பூசை திருவிழா முதலியவற்றை நடத்துதலும் தரிசித்தலுமாம். சில இடங்களிலே சூரியோதயத்தின் பின்னரே விழா முடிகின்றது. இது சிவாகம விதிக்கு முழு மாறான செய்கை. கடவுளிலே அன்புடையவர்கள் அர்த்தயாம காலம் சென்றவுடனே கோயிலை விட்டுப் புறப்படுதல் வேண்டும். சிவராத்திரியில் மாத்திரம் நான்கு யாமங்களிலும் சுவாமி தரிசனம் செய்தல் தக்கதாம்.

இன்னுந் திருக்கோயிலிலே செய்யலாகாத குற்றங்கள்: (1) ஆசாரமில்லாது போதல், (2) கால் கழுவாது போதல், (3) எச்சில் உமிழ்தல், (4) மலசலங் கழித்தல், (5) மூக்குத்தூள் போடுதல், (6) மூக்குநீர் சிந்துதல், (7) வெற்றிலை பாக்கு உண்டல், (8) போசனபானம் பண்ணுதல், (9) ஆசனத்திருத்தல், (10) சயனித்தல், (11) காலை நீட்டிக்கொண்டிருத்தல், (12) மயிர் கோதி முடித்தல், (13) சூதாடல், (14) தலையிலே சீலை தரித்துக்கொள்ளுதல், (15) தோளிலே சீலை இட்டுக்கொள்ளுதல், (16) போர்த்துக்கொள்ளுதல், (17) சட்டையிட்டுக்கொள்ளுதல், (18) பாதரட்சையிட்டுக்கொள்ளுதல், (19) விக்கிரகத்தைத் தொடுதல்,

(20) நிருமாலியத்தைக் கடத்தல், (21) நிருமாலியத்தை மிதித்தல் (22) கொடித்தம்பம், பலிபீடம், இடபதேவர், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், (23) வீண் வார்த்தை பேசுதல் (24) சிரித்தல், (25) சண்டையிடுதல், (26) விளையாடுதல் (27) சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல். (28) ஓடி வலம்வருதல், (29) சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், (30) முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், (31) திருவிளக்கு அவியக்கண்டுந் தூண்டாதொழிதல் முதலியனவாம்.

---

## பத்தாம் அதிகாரம் — நித்திய கருமம்

எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முயற்சி உள்ளது. சிலர் பொருள் தேடுகிறார்கள்; சிலர் வேறு முயற்சிகள் பார்க்கிறார்கள். இந்த முயற்சிகளை அவரவர் செய்கிறதற்கு ஒவ்வொரு தூண்டுகோல் இருக்கின்றது. சிலர் படிப்பிலே யுள்ள ஆசையாற் படிக்கிறார்கள். சிலர் உபாத்தியாயர் தாய் தகப்பன் முதலியோருடைய ஏவுதலாற் படிக்கிறார்கள்; பொருள் தேடுகிறவர்கள் தங்களுடைய தேவைக்காக அதிலே முயற்சி செய்கிறார்கள். சிலர் பொழுது போக்கில்லையே என்ற எண்ணத்தினால் ஏவப்பட்டுச் சில முயற்சிகளைச் செய்கிறார்கள். இப்படியாக நாங்கள் இந்த முயற்சிகளைச் செய்கிறதற்குப் பல தூண்டுகோல்கள்

உள்ளன. அவைகளைச் செய்யாவிட்டால் நமக்கு மனத்துன்பம் அல்லது சரீரத் துன்பம் வந்து சேரும்.

கடவுள் வழிபாடு என்ற முயற்சிக்கு ஒருவித மான தூண்டுகோலுமில்லை; அதைச் செய்யாவிட் டால் துன்பந் தோற்றுவதுமில்லை; அதை நினைக் கப்பண்ணுதற்கு இயல்பிலே ஒரு வழியுமில்லை. ஆதலால் நாம் ஒவ்வொருநாளும் கடவுளைப் பல முறை நினைப்பதற்காகச் சில வழிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் நித்திய கருமம் என்று சொல்லப்படும்.

நாங்கள் இங்கே பிறந்து பாடுபடுவதெல்லாம் நம்மைப் பீடித்திருக்கும் மலங்களினின்றும் நீங்கிக் கடவுளோடு சேர்ந்து பேரானந்தத்தை அடை வதற்காகவாம். கடவுள் வழிபாடு இல்லாமல் இது இயலாது. ஆதலாற் கடவுளை வழிபடுதற்கு நிச்சய மான வழியாகிய நித்திய கருமத்தைப்போல நமக் குப் பெருந்துணை வேறென்ன உள்ளது. குருட னுக்கு வழிகாட்டிபோல, நமக்கு நித்திய கருமம் வழிகாட்டியாயுள்ளது. நாம் அதை ஒழுங்காகவுஞ் சரியாகவுஞ் செய்தால், மலங்களினின்றும் நீங்கிப் பேரானந்தமாகிய முத்தியை இலகுவில் அடை வோம்.

விடிகிறதற்கு முன் நித்திரைவிட் டெழுதல் வேண்டும். எழும்பும்போது "சிவ சிவ" என்று சொல்லிக் கடவுளைத் தியானித்தல் வேண்டும்.

பின்பு கை கால் கழுவித் திருநீறு பூசிக் கடவுளைத் தோத்திரம்பண்ணல் வேண்டும். அவசிய கருமம் முடித்துப் பல் விளக்கிய பின்பு முகங் கழுவி விபூதி தரித்துச் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும். சீலை முதலியவைகளைத் தோய்த்து விட்டு ஸ்நானஞ்செய்யப் போகும்பொழுது சிவ பெருமானை வணங்கித் தண்ணீரைச் சிவசத்தி என்று பாவித்து அதனாலே சரீரத்தையும் மனத்தையும் சுத்தம்பண்ணுவதாகப் பாவித்தல் வேண்டும். பின்பு விபூதி தரித்துக்கொண்டு சிவத்தியானம் செய்தல் வேண்டும். தீக்ஷை பெற்றவர்கள் சந்தியாவந்தனஞ் செய்தல் வேண்டும். அதன்பின் கோயிலுக்குப் போய்வருவது நல்லது. உண்ணத் தொடங்குமுன் சிவபெருமானைத் தியானித்து அவருக்கு நிவேதனஞ் செய்தல் வேண்டும். நிவேதிக்கும்பொழுது நம்மையும் அவருக்கு ஒப்புக் கொடுத்ததாகப் பாவித்தல் வேண்டும். படைத்த சாதத்தின் ஒரு பகுதியைக் காகம் முதலிய பிராணிகளுக்காக எடுத்து வைத்தல் வேண்டும். உண்ணும் போது அவசியமில்லாத பேச்சுப் பேசாமற் சிவ பெருமானை நினைத்தல் வேண்டும். உணவு முடிந்த பின்பு விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும்; வீட்டைவிட்டு வெளியே போகும்போது விபூதி தரித்தல்வேண்டும். விபூதி தரிக்கும்போதெல்லாம் சிவபெருமானைத் தியானித்தல் வேண்டும். வழியிலே கோயில்களைக் கண்டாற் கும்பிட்டுக்கொண்டு போதல் வேண்டும். கோயிலிலே அடிக்கப்படுகிற மணிச்சத்தங் கேட்கும்போதெல்

லாம் கடவுளைத் தியானித்தல் வேண்டும். தம்முடைய வேலைகள் செய்து முடிந்தபின் வீண் கதைகள் பேசப் போகாமற் கடவுளைத் தியானித்தல் வேண்டும். அன்றேல் தேவாரம், திருவாசகம், சிவனடியார் சரித்திரம் முதலிய பத்தி நூல்களை அல்லது ஞானசாஸ்திரங்களை வாசித்தல்வேண்டும். அன்றேல் அவைகளைப் பற்றிப் பேசல்வேண்டும். நித்திரைக்குப் போகுமுன் விபூதி பூசல்வேண்டும்.

இப்படிச் செய்து வந்தால், ஆன்மாவைப் பற்றியும், கடவுளைப்பற்றியும் உள்ள எண்ணம் அதிகமாக வரும்; உலக இன்பங்களைப் பற்றிய எண்ணம் அதிகம் வராது. சிவ பத்தியினலும் நல்லொழுக்கத்தினலும் ஆன்மா ஈடேற்றமடையும். நாம் பிறவி எடுத்த பலனை அடைந்து கொள்வோம்.

---

## பதினெராம் அதிகாரம்—கடவுள் வழிபாடு

### திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

முத்த னைமுதற் சோதியை முக்க ணப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காளிங்கே வம்மின்நீ ருங்கள் பாசந் தீரப் பணிமினே
சித்த மார்தருஞ் சேவடிக் கணஞ் சென்னி மன்னித் திகழுமே.

திருச்சிற்றம்பலம்

### 1. கடவுள் வழிபாட்டின் நோக்கம்.

கடவுள் வழிபாட்டின் நோக்கம் உண்மைப் பொருளாகிய கடவுளுடைய திருவடிகளை அடைத

லாம். நமது மனம் பொதுவாக உலக இன்பங்களைப் பற்றுகிறது. சிலர் உணவுச் சுவையையும், சிலர் இடம்பமான உடை உத்தரீயங்களையும், சிலர் மதிப்புக் கீர்த்திகளையும், சிலர் மற்றைச் சிற்றின்பங்களையும் மேம்பட்ட பொருளென்று எண்ணி மயங்குகின்றார்கள். அப்படி மயங்குதலினாலே தங்களுடைய காலத்தையுங் கருத்தையும் இவைகளைப் பெறுவதிற் போக்குகிறார்கள்.

மேலே சொல்லப்பட்டவைகள் ஆணவத்தின் முனைப்பினால் உண்டாகும் அஞ்ஞான ஆசைகள் யாவும் நிலையற்றவைகள்; பொய்யானவைகள்; கடவுள் ஒருவரே மெய்ப்பொருள்; அவருடைய திருவருளே நிலையான செல்வம்; கடவுள் வழிபாட்டினாலே பொய்யான இன்பங்களிலே உள்ள பற்றை விட்டு மெய்ப்பொருளாகிய அவருடைய திருவருளையும் பேரின்பமாகிய அவருடைய திருவடிகளையும் பெற விரும்புகின்றோம்.

ஆதலால், கடவுளை வழிபடும்போது உலக இன்பங்களை விரும்பி வழிபடுதல் தகுதியன்று; உலக இன்பங்களைப் பெறுதலே நோக்கமாக நாங்கள் பிறக்கவில்லை. அந்த இன்பங்களிலேயுள்ள பற்றைப் போக்கி ஞானத்தை வருவித்தற்காகவே நாம் விவேக சிருட்டியாய்ப் பிறந்திருக்கிறோம். அவருடைய திருமுன்னிலையில் நின்றுகொண்டு, "கடவுளே, என்னைப் பெரிய பணக்காரனுக்கல்வேண்டும்; என்னுடைய சம்பளத்தை

உயர்த்துவிக்கவேண்டும்; எனக்குக் காணி பூமி அதிகமாக வரப்பண்ணவேண்டும்'' என்று சிலர் வேண்டுதல் செய்கிறார்கள். இது கடவுள் வழிபாட்டின் நோக்கத்துக்கு முழு மாறான கருத்து. உலக இன்பங்களுக்குரிய பெருஞ் செல்வம் முதலியவைகள் ஆன்மாவின் வியாதியாகிய ஆணவத்துக்குத் துணையாகவும் நிற்பன. இவற்றிலேயுள்ள பற்றைக் கெடுத்துக் கடவுளிலே முழுப் பற்றையும் வைத்தலே எம்முடைய இறுதி நோக்காம். நம்முடைய சரீரத்தைக் காப்பாற்றுதற்காக நமக்கு அளவான உணவு வேண்டியதுதான். அதை நாம் பெற்றுக்கொள்ளுதற்குக் கடவுள் வழி கொடுத்திருக்கிறார். நம்மால் வேறொன்றும் இயலாவிட்டால் பிச்சை எடுத்து உண்ணலாம். ஆதலால் போசனத்துக்காகவும் கடவுளை வேண்டுதல் செய்தல் அவசியமில்லை. நமது இனத்தவர்களையும் சிநேகிதர்களையும் செல்வத்தையும் துணையென்று நினைத்து இல்வாழ்க்கையில் இருக்கும் நாங்கள் நமது தேவைகளுக்காகக் கடவுளை வேண்டுதல் செய்வது முறையன்று.

எம்மவருட் பலர் கொடிய நோய் வந்தகாலத்திலும் அவைகளை நீக்கும்படி கடவுளை வேண்டுதல் செய்து வருகின்றனர்.

நமது சுகத்தைக் குறித்துக் கடவுளை வேண்டுவதால் தீமைகளும் வருதல்கூடும். ஒரு மனிதன் கடவுளை மிகவும் வேண்டுதல்பண்ணி வந்தான். அவனுடைய மனைவிக்கு ஒருமுறை ஒரு பொல்

லாத ரோகம் உண்டானது. அவளுடைய நோயை மாற்றும்படி அவன் இராப்பகலாகக் கடவுளை வேண்டுதல் பண்ணினன். அவளுடைய நோய் மாறவில்லை. அவள் இறந்துபோனாள். அவள் இறந்த அன்றைக்கே அவன் கடவுளை மறந்தான். சைவனாயிருந்த அவன் அன்றுதொடங்கி விபூதி பூசுவதுமில்லை; கடவுளை வணங்குவது மில்லை; அன்றைக்கே வீணனானன். இப்படியான வரங்களைக் கடவுளிடம் கேட்பதினால், உள்ள கடவுட் பத்தியும் முற்றாக அற்றுப்போக வீணர்களாகவும் நேரும்.

ஆயினும், முன் கடவுளிலே பத்தியில்லாத அநேகர் பிறருடைய ஏவுதலினாற் கடவுளை வேண்டுதல் செய்து தாம் விரும்பியவற்றை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் அதினாலே யிருந்த பத்திமான்களானார்கள். வேண்டுதல்செய்து கிடையாவிட்டாற் கடவுளை மறக்கக்கூடியவர்கள் இப்படியாக வேண்டுதல் செய்யவேகூடாது. மறக்கமாட்டாதவர்கள் இப்படிச் செய்தல் பெருங் குற்றமன்று.

ஆன்மாவாகிய நாம் ஆணவமாகிய கொடிய வியாதியினாற் பீடிக்கப்பட்டு அளவில்லாத துன்பங்களை அளவில்லாப் பிறவிகள்தோறும் அநுபவித்து வருகின்றோம். இந்த வியாதியோடு ஒத்துப் பார்க்கும்பொழுது, நமது சரீரத்துக்கு வருகின்ற வியாதி ஒரு வியாதியன்று. இந்தச் சரீரம் இன்றைக்கோ நாளைக்கோ இன்னுஞ் சில வரு

ஷத்திலோ அழியும். அழிகிற இயல்பையுடைய உடம்பை அழிக்கவரும் வியாதி ஒரு வியாதியா? ஒருகாலமும் அழியாததாகிய ஆன்மாவின் வியாதி யல்லவோ கொடிய வியாதி! இந்த வியாதி எங்களை அளவில்லாத காலமாக வருத்தி வருகின்றது. இந்த வியாதியை நீக்கும்படி கடவுளைக் கேட்கிற் கேட்க லாம். இதை ஆயிரந்தரங் கேட்டபின்பு ஒருமுறை நமது சரீர வியாதியைத் தீர்க்கும்படி கடவுளைக் கேட்கலாம். சரீரம் இருந்தால் ஆன்மாவும் ஈடே றுந்தான். சரீர வியாதிக்காக எவ்வளவு கவலைப் படுகின்றோம். ஆன்மாவின் வியாதியாகிய ஆண வத்தைப் போக்குதற்கு நாம் அதிற் கோடிமுறை அதிகங் கவலைப்படல் வேண்டும். இந்த வியாதி யைத் தீர்த்தற்காக நாம் எப்போதும் கடவுளை வணங்குதல் வேண்டும். மாணிக்கவாசக சுவாமி கள் "பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானு முன் னைப் பரவுவனே" என்றும், "வருகவென்றென்னை நின்பால் வாங்கிடவேண்டும் போற்றி" என்றும், "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டு வனே" என்றும், "நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே" என்றும், "நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப், பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே" என்றும் வந்தனைசெய்தார்.

கடவுள் இந்த ஆணவமாகிய வியாதியை மாற்றுவதே தமது தொழிலாக உடையவர். இந்த வியாதியை மாற்றும்படி அவரை வேண்டுதல் செய் தால், இந்த வியாதி விரைவாக எம்மைவிட்டு நீங்

கும். இந்தத் தீரா நோயைத் தீர்த்தருளும் வைத்தியராதலினாலே, அவர் *"வைத்தியநாதன்" எனவும் சொல்லப்படுவர். ஆதலால், அவரிடம் ஏதாயினும் ஒன்று கேட்க விரும்பினால் இந்த வரத்தைக் கேட்பதே தகுதி. இதைக் கேட்டால், இது நமக்குக் கிடைப்பது நிச்சயம். உலக விஷயங்களைப்பற்றிக் கேட்பது தகுதியன்று; கேட்டாற் கிடையாமற் போவதுமுண்டு.

நமக்கு நிலையான செல்வம் சிவபெருமானுடைய திருவடியாகிய மெய்ஞ்ஞானமாம். அதைப் பெறுதற்காகக் கடவுளை வழிபடல்வேண்டும். நாம் எந்தப் பிறவி எடுத்தாலும் நம்மிலே அளவில்லாத மெய்யன்பு உடையவர் அவர் ஒருவரே. ஆதலால் அவரிலே நமக்குப் பற்று வருதற்காக அவரை வழிபாடு செய்வது அவசியம். அவரை இடைவிடாமல் நாம் தியானிக்கக்கூடியதாக அவருடைய அருளைப் பெற விரும்புவதும் அவசியம்.

## 2. தியானம்—ஆத்ம தியானம்

கடவுள் வழிபாட்டின் முக்கியமான அங்கம் தியானம். தியானமாவது நினைத்தல். நாம் இரண்டு காரியத்தைப் பற்றித் தியானித்தல் வேண்டும்.

---

சிவஞானசித்தியார் (சு. 11-33)

* "அருளினு லுரைத்த நூலின் வழிவாராத் தருமஞ் செய்யின்
இருளுலா நிரயத் துன்பத் திட்டிரும் பாவந் தீர்ப்பன்
பொருளுலாஞ் சுவர்க்க மாதி போகத்தாற் புணியந் தீர்ப்பன்
மருளுலா மலங்க டீர்க்கும் மருந்திவை வயித்ய நாதன்."

நாம் ஆணவத்தினாலே பீடிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் அநேக பிழைகளைச் செய்கின்றோம். இந்தப் பிழைகளினாலே நாம் கெடுகின்றோம். நாம் ஈடேறுதற்காக இன்னது செய்யலாம் இன்னது செய்யக்கூடாது என்று கடவுள் விதித்தருளியிருக்கிறார். நாம் நிலையற்ற இன்பங்களுக்காக அந்தவிதிகளைப் பொருட்படுத்தாமல் நடக்கின்றோமென்று எங்களுடைய நிலையை நினைத்தல் ஆத்ம தியானமாம். இப்படித் தியானித்த பின்பு இனிமேல் இப்படிச் செய்யமாட்டோமென்று திடமான தீர்மானஞ்செய்து,

"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கொள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவிலும்போய்
சொல்லாமற் சொற்களைக்கேளாமல் தோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே"

## சிவத்தியானம்

கடவுள் ஞானமாயுள்ளவர். எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாதவர். நாம் கடவுளோடு சேர்ந்து அந்த ஆனந்தத்தை அநுபவித்து மெய்ஞ்ஞானத்தை அடைதல் வேண்டும். இது கடவுளைப் பற்றிய தியானத்தின் முதற்பகுதி.

இரண்டாவது, கடவுள் நமக்கு எவ்வளவு காரியங்களைத் தந்தருளினார்; இந்த அருமையான சரீரத்தைத் தந்தருளினார். இந்தச் சரீரத்தின் விலையை மதிக்கக்கூடியவர் யாவர்? உலகத்திலேயுள்ள செல்வம் முழுவதையும் ஒருங்கு கொண்டு

வந்து குவித்துக் கொடுத்தாலும், இப்படியான ஒரு தேசத்தை விலைக்கு வாங்க முடியுமா? ஒரு மோதிரத்தை ஒருவர் உனக்கு உபகாரமாகத் தந்தால் அவரை எவ்வளவாக நேசிக்கிறாய்? விலை மதிக்கப்படாத இந்தச் சரீரத்தைத் தந்தருளிய கடவுளை நாம் எவ்வளவாக நேசித்தல் வேண்டும்? நம்மை ஈடேற்றுதற்காக இதைப்போன்ற கோடானுகோடி சரீரம் எத்தனை நமக்கு முன்னே தந்தருளினர்!

மூன்றாவது, ஒரு குழந்தைக்கு வேறு இனத்தவர்கள் நூறுபேர் இருந்தாலும், அதனுடைய தாய் அதைப் பார்ப்பதுபோல அவர்களெல்லாருங் கூடினாலும் அவ்வளவு அன்பாகப் பார்த்தல் முடியுமா? தாய்போன்ற ஒரு திரவிய முண்டா? கடவுளோ பெற்றதையினும் பார்க்கக் கோடிபங்கு நம்மிலே அன்புள்ளவர்; பெற்ற தாய் இந்தப் பிறவியிலே மாத்திரம் நம்மைக்காப்பாள். அதுவும் இந்தப் பிறவி முழுவதும் காப்பாற்ற அவளுக்கு வல்லமையில்லை, கடவுளோ என்றால் எத்தனை கோடி பிறவி எடுத்தாலும் ஒவ்வொரு நிமிஷமும் அன்பு பொழிந்துகொண்டிருக்கிறார். நாம் பெற்ற தாயை நேசிப்பதிலும் பார்க்க எத்தனை கோடி பங்கு அதிகமாகக் கடவுளை நேசித்தல் வேண்டும்.

நாலாவது, நமக்கொரு கொடிய வியாதி வந்தால் அந்த ஒரு வியாதியை மாற்றுகிற வைத்தியனுக்குப் பொருள் கொடுத்த பினனும் நாம் அவனில் மிகவும் அன்பு பாராட்டுகிறோம்.

அழிவதாகிய இந்த ஒரு சரீரத்துக்கு வந்த வியாதியைப் பொருள் வாங்கிக்கொண்டு மாற்றின வைத்தியனிலே நமக்கு இவ்வளவு அன்பு உண்டாகுமானல், அழியாததாகிய ஆன்மாவுக்கு உள்ளதாய்க் கோடிகாலம் நீங்காத வியாதியை நம்மிடம் ஒரு பிரதிபலனுங் கருதாமல் மாற்றுகின்ற கடவுளிலே நமக்கு இருக்க வேண்டிய அன்புக்கு அளவுமுண்டா? அவரை நினைக்க நினைக்க நமது மனம் உருகி ஒழுகவேண்டும். அளவற்ற ஆனந்த முண்டாக வேண்டும். வேறொரு பொருளில் எண்ணமும் வரலாகாது.

"தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறு வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
யகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்
சதுரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரமா வதிசய மாகக
கற்று மனமெனக் கதறியும் பதறியும்"

என்று மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தவாறு நாம் நிற்றல் வேண்டும்.

## 3. துதி

மேலே கூறப்பட்ட தியானங்களோடு, தேவாரம் திருவாசகம் முதலிய திருவருட்பாக்களைப் பாடிப் பத்தியை வளர்த்தல் வேண்டும். பத்தியை வளர்த்தற்கு அருட்பாக்களைப் பாடுவதுபோல வாய்ப்பான வழி வேறொன்றுமில்லை. ૦

கடவுள் வழிபாடு இவ்வளவோடு முடியவில்லை. இதுதான் கடவுள்வழிபாட்டின் தொடக்கம். கடவுள் வழிபாட்டின் பெரும்பகுதி நமது ஒழுக்கமாம். அது மற்றைய உயிர்களோடு நாம் சம்பந்தப்படும் போது நாம் நடந்துகொள்ளும் வகையிலுள்ளதாம். ૦

## 4. நல்லொழுக்கம்

சிலர் ஒவ்வொருநாளும் ஒழுங்காகச் சிவபூசை செய்கிறார்கள்; சிவபூசை செய்து உண்டபின் பொய்வழக்குப் பேசப்போகிறார்கள். வேறு சிலர் பசியிருந்து அநேக விரதங்களை அநுட்டிக்கிறார்கள்; விரதங்கள் முடிந்த பின்னர் ஆடு கோழிகளைக் கொன்று உண்ணுகிறார்கள். வேறு சிலர் நித்தியமும் கோயிலுக்குப் போய் வருகிறார்கள்; கோயிலிலிருந்து வந்தபின்பு பிறர் பொருளிலே ஆசைப்பட்டு அவர்களை வஞ்சிக்க

---

૦ சமயதீக்ஷை பெற்றவர்கள் பஞ்சாக்ஷர செபஞ் செய்தல் வேண்டும். பஞ்சாக்ஷர செபம் ஞானத்தைக் கொடுப்பது, கவலைகளைத் தீர்ப்பது, ஆசை கோபம் முதலியவற்றை அழிப்பது. விசேஷதீக்ஷை பெற்றவர்கள் சிவபூசையுஞ் செய்தல் வேண்டும்.

முயலுகிறார்கள். சிலர் ஒவ்வொருநாளும் தேவாரம் திருவாசகம் படிக்கிறார்கள்; படித்து முடிந்தபின்பு தெய்வரூபமாகிய தங்கள் பிதா மாதாக்களைப் பல விதமாகத் துன்பப்படுத்துகிறார்கள். இப்படியான வர்கள் கடவுளை உள்ளபடி வழிபடுகிறவர்க ளல்லர்.

இவர்களிற் சிலருடைய எண்ணம், "நாம் கடவுளிலே இவ்வளவு அன்பாய் இருக்கிறோம். நாம் என்னதீமை செய்தாலும் அவர் பொறுத்துக் கொள்ளுவார்" என்பது. * இதைப் போலக் கொடியஎண்ணம் வேறில்லை. எவர்களும் தாங்கள் செய்த குற்றத்துக்காகத் துன்பத்தை அனுபவிப் பார்கள். அப்படியான எண்ணத்தோடு பாவஞ் செய்கிறவர்கள் மற்றவர்களிலும் பார்க்க நூறு மடங்கு அதிகம் துன்புறுவார்கள்.

வேறு சிலருடைய எண்ணம் சிவபூசை முதலியவற்றிற்கும் நல்லொழுக்கத்திற்கும் ஒரு தொடர்புமில்லை யென்பது. அஃதாவது தீய ஒழுக்கம் சிவபூசைக்குத் தடையானதன்று என்பது. இதுபோன்ற அறியாமை வேறில்லை.

---

* இப்படியானவர்கள் பொக்கமுள்ளவரென்று அப்பர்சுவாமிகள் பாடியருளினர்:—

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே"

ஓரரசன் தன்னுடைய பகைவனோடு போர் செய்யத் தொடங்குதற்கு முன் தனக்குரிய கோட்டையைப் பெலப்பிப்பான்; பெலமான பீரங்கியை ஏற்றுவான்; சேனைகளுக்கு வேண்டிய ஆயுதங்களையும், உணவையும் சேர்த்துவைப்பான். இப்படி வைத்துக்கொண்டு உள்ளே நின்று போரை நடத்துவான். ஆன்மாக்களாகிய நாம் நம்முடைய சீவியத்திலே ஆணவத்தோடு போர் செய்ய வேண்டியிருக்கிறது. போருக்குத் தொடங்க முன் சிவத்தியானத்திலே நமது மனமாகிய கோட்டையைப் பலப்படுத்துகின்றோம். அவரை வணங்குவதினாலே நாம் பெறுகின்ற திருவருளாகிய பீரங்கிகளினால் ஆணவத்தின் சேனைகளாகிய ஆசைகளை அழிக்கின்றோம். இப்படி ஆணவத்தை வெல்லுவதே உண்மையான கடவுள் வழிபாடு. கடவுள் வழிபாடு என்று பொதுவாகச் சொல்லப்படும் சிவத்தியானம் முதலியவைகள் ஆணவத்தை வெல்லுதற்காக உள்ள பிரதானகருவிகளாம். இப்படியான ஆயத்தங்களைச் செய்துவிட்டு ஆணவத்தின் வழிப்பட்டுப் பாவஞ்செய்கிறவர்கள் கோட்டையைப் பலப்பித்தல் முதலிய ஆயத்தங்களைச் செய்துவிட்டு, இவைகளைப் பிரயோசனப்படுத்தாமல் பகைவன் நிற்குமிடத்திற்குத் தனியேபோய் அவனுடைய கையில் அகப்பட்டு மறியலாவாரைப் போல்வார்கள். ஆதலால் சிவத்தியானம் சிவபூசை முதலியவைகளோடு நல்லொழுக்கமுஞ் சேர்ந்தால் மாத்திரம் அவைகள் சரியான சிவவழிபாடாகும்.

## சிவஞானசித்தியார் (சு. 11-24)

"மனமது நினையவாக்கு வழுத்தமந் திரங்கள்சொல்ல
இனமலர் கையிற்கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றிவாழுஞ் செயல்அற மானல்யார்க்கும்
முனமொரு தெய்வமெங்குஞ் செயற்குமுன் னிலையாமன்றே"

குறிப்பு: (க) சிவபூசை செய்கிற ஒருவர் தீயநடை யுள்ளவரா யிருப்பதுமுண்டு. சிலர் இதைப் பார்த்துவிட்டுச் சிவபூசையினல் ஒரு பலனுமில்லை என்று சொல்லுவர். இது எதுபோல என்ருல், நீந்தப் பழகினஒருவன் கப்பல் உடைந்த பொழுது கடலுக்குள் விழுந்தான். கரை தூரமா யிருந்ததினுலோ அல்லது ஏதாவது ஒன்றிற் சிக்குப்பட்டோ அவன் நீந்தித் தப்பிக் கொள்ள முடியவில்லை. இதைக்கண்டு நீந்தப் பழகுதலால் ஒரு பலனுமில்லை யென்று சொல்வதுபோலாகும். உண்மை என்னவென்ருல், சிவத்தியானம் செய்கிறவனெருவன் துட்டனயிருந்தால், அவன் சிவத்தியானம் செய்யாவிட்டால் இன்னுமதிகம் துட்டனயிருப்பான்.

(உ) சிவத் தியானம், மிகுந்த அன்போடு செய்தல்வேண்டும். ஆயினும் சிவத்தியானம் செய்யாமல் விடுவதிலும் பார்க்க அன்பு குறைந்த தியானம் நல்லது. காயத்தினுற் செய்த புண்ணியத்துக்கும் அதற்குத்தக்க பலனுண்டு. எதுபோல வென்ருல்: உபாத்தியாயர் படிப்பிக்கிறபொழுது அவதானமாகக் கேட்பது அவசியம்; ஆயினும்

படியாமற் றிரிகிறதிலும் பார்க்க, அவதானக் குறைவோடு படிப்பது நல்லது. ஒருவன் பள்ளிக் கூடத்துக்குக் கிரமமாகப் போய் வந்தால், பொதுவாக அவதானக் குறைவுள்ளவனு யிருந் தாலும், சிலநாட்களில் ஊக்கமாயிருந்து அதன் பலனை யடைவான். அன்றேல் இப்போது அவதானக் குறைவாயுள்ளவன் பின் ஒரு காலத் திலே அவதானமுள்ளவனுய் வந்து பெரும் பண்டிதனுதலுங் கூடும். அதுபோல, இப்போது அன்பில்லாமல் தியானஞ் செய்பவன் பின்னெரு காலம் அன்போடு செய்து பெரும் பலனை அடைதலுங்கூடும்.

(௩) சிவத்தியானஞ் செய்யாதவர்கள் சிலர் நல்லொழுக்க முள்ளவர்களாய் இருப்பதைப் பார்த்து, "பார், அவன் கடவுளை வணங்காதவன்; அவன் யோக்கியனுய் இருக்கவில்லையா?" என்று சிலர் சொல்லுவார்கள். அவன் முற்பிறவிகளிலே சிவத் தியானஞ் செய்திருந்தபடியாற்றுன் இப் போது யோக்கியனுயிருக்கிறுன். அவன் இந்தப் பிறவியிலும் சிவத்தியானம் உள்ளவனுயிருந்தால் இப்போதிருப்பதிலும் பார்க்க அதிக நல் லொழுக்க முள்ளவனு யிருப்பான். ஒரு பிறவி யிலும் கடவுள் வழிபாடு செய்யாதவர்களுக்கு நன்மை தீமையென்னும் பேதமேயில்லை.

---

# பன்னிரண்டாம் அதிகாரம் — அறம்

## சிவஞான சித்தியார் (சு. 11, 24)

ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
வழுக்கிலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவோடு அர்ச்சித்தல் ஆதி
அழுக்கிலா அறங்களானுல் இரங்குவான் பணியறங்கள்.

### 1. பொதுக் குறிப்புக்கள்

கடவுள் வழிபாட்டிற்குப் பிரதான அங்கம் நல்லொழுக்கமென்று முன்னரே சொல்லப்பட்டது. நல்லொழுக்கமில்லாதவர் செய்யும் சிவ வழிபாடு வழிபாடாகாது. சிவ வழிபாட்டின் உண்மையான பயனை அடைதற்கு நல்லொழுக்கம் இன்றியமையாதது. நல்லொழுக்கம் கடவுள் வழிபாட்டிற்கு ஆவசியகமாவதுபோலக் கடவுள் வழிபாடு நல்லொழுக்கத்திற்கு ஆவசியகமானது. கடவுள் வழிபாடு ஒருவனுடைய மனசை இளகச் செய்கின்றது; அவனுடைய மனசில் இரக்கத்தை உண்டாக்குகின்றது. அதனுல் அவனுக்குச் சமய சாஸ்திரங்களிலே நம்பிக்கை உண்டாகிறது. அவன் வேதாகமங்களின் வழிப்பட்டு நடக்க முயலுவான். * தெய்வ விசுவாசம் அற்றவன் பொய் சொல்வது

* தெய்வ விசுவாசமற்றவர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களாதலுமுண்டு; ஆயினும் அவர்களை நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்கும்படி சட்டுப்படுத்துவது ஒன்றுமில்லை. அவர்கள் விரும்பினுல் நல்லொழுக்க முள்ளவர்களாய் இருக்கலாம்; விரும்பாவிடில் தீயவர்களாகலாம். நல்லொழுக்க அநுசரிப்பு அவர்களுடைய விருப்பத்திலேயே தங்கியிருக்கிறது.

னால் அதிகம் லாபம் அடையக்கூடுமென்றும், அப் பொய்யை வேறொருவரும் அறிந்துகொள்ள மாட்டார்களென்றுங் காணும்பொழுது, மெய் பேசுவதை விட்டுப் பொய்சொல்ல நினைப்பான். அவனைப் பொய் பேசாதபடி தடுப்பது ஒன்றுமில்லை. தந்தை தாய் குரு முதலிய பெரியோர்களிடத்தில் விசுவாச மில்லாதவர்கள், அவர்களுக்குக் கீழ்ப்படியாமல் தாங்கள் விரும்பியபடி யாதொரு தடையுமின்றி நடப்பதை எங்குங் காணலாம். அது போலவே கடவுளில் விசுவாசமில்லாதவர்கள் அவருடைய வேதாகம விதிகளுக்கு அமையாதவர்களாய்த் தங்கள் எண்ணப்படி நடக்க முயலுவார்கள். ஆதலால் நல்லொழுக்கத்திற்குக் கடவுள் வழிபாடு ஆவசியகம் வேண்டியதாகும்.

கெட்டவர்களுடனே சிநேகஞ் செய்யும் நல்லவனும் கெட்டவனவதுபோல, நல்லவருடனே சிநேகஞ் செய்யும் கெட்டவனும் நல்லவனவான். நல்லவர்கள் எவர்களுக்கும் நன்மையையே செய்வார்கள். அவர்கள் தங்களோடு சேர்ந்து நடப்பவர்களிடத்தில் உள்ள குற்றங்களை அவர்களுக்குக் காட்டி, அவர்கள் நல்லவழியிலே நடப்பதற்கு ஏற்ற புத்தி சொல்லுவார்கள். நல்லவர்களுடன் செய்யும் சம்பாஷணை அற்பம் அற்பமாகக் கேட்பவருடைய மனசிலே பதிந்து மனசை நல்வழிப்படுத்திவிடுகின்றது. நல்லவர்களுடனே கூடுகிறவன் அவர்களுடைய நடையை முன்மாதிரியாகக் கொண்டு தானும் நல்லொழுக்க முள்ளவனாக நடக்க முயலு

கிறான். இளமை தொடங்கி நல்லவர்களுடனே சகவாசஞ் செய்கிறவன் சன்மார்க்கனாய் வருவது மிகவும் எளிது. ஆதலால் இயன்ற அளவும் நல்லவர்களையே காணல்வேண்டும். நல்லவர்களுடனே ஊடாடல்வேண்டும். நல்லவர்களைப்பற்றியே பேசல்வேண்டும். அவர்களுடைய சொற் கேட்டு நடத்தல்வேண்டும்.

> "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
> நல்லார்சொற் கேட்பதுவு நன்றே—நல்லார்
> குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
> டிணங்கி யிருப்பதுவு நன்று".

ஒருவன் எப்படிப்பட்டவர்களுடனே சேருகின்றான் என்பதை அறிந்தால், அவன் எப்படிப்பட்டவனென்பது அறிந்துகொள்ளலாம். கள்வருடன் கள்வரும், சூதாடிகளுடன் சூதாடிகளும், கற்றவருடன் கற்றவரும், நல்லவருடன் நல்லவருஞ் சேர்வதே உலக வழக்கம். ஒருவன் நீந்தப் பழகும் போது முதன் முதல் அதிகம் பிரயாசப்படுகிறான்; தண்ணீர் மூக்கினுள்ளே போகின்றது; திடீரெனத் தாழ்ந்துபோகிறான்; எவ்வளவோ பாடுபடவேண்டியிருக்கிறது. பழகிவிட்டாலோ நீந்துவது ஒரு பிரயாசமாகத் தோன்றுவதில்லை. நீந்துவதை விட்டுக் குளத்திலிருந்து வெளியே வர மனம் வராது; நீந்துதல் அவ்வளவு இன்பமாயிருக்கும். நாம் குழந்தைப் பருவத்திலே நடக்கப் பழகும்போது எத்தனையோ முறை விழுந்து விழுந்து அழுகையோடு எழும்பினோம்; பின்பு நடப்பது மாத்திரமல்ல,

ஓடுவதும் இலகுவாயிருக்கிறது. ஓடுவது ஒரு விளையாட்டாயும் இன்பமாயுமிருக்கும். இப்படியே நல்ல செய்கைகள் தொடக்கத்திலே பிரயவீனமாயிருந்தாலும் அந்தப் பிரயவீனத்தை நினையாமல் அவைகளைச் செய்துகொண்டு வருதல்வேண்டும். செய்துவந்தால் அவைகள் பின்பு மிகவும் பிரியமான செயல்களாகும். உதாரணமாக, ஒருவன் என்னை ஏசுகிருனென்று எண்ணிக்கொள்வோம். அவன் ஏச எனக்குக் கோபம் வருகின்றது. நான் அந்தக் கோபத்தை அடக்கப் பழகிக் கொண்டால், பின் யார் எப்படி ஏசினுலும எனக்குக் கோபம் வராது.

இதுவரையுஞ் சொல்லியவைகளிலிருந்து சிவபத்தியும், நல்ல சகவாசமும், நல்ல பழக்கங்களும் நல்லொழுக்கத்துக்கு ஆவசியகமானவைகளென்று விளங்கும். இவைகள் ஆவசியகமானவைகளெனினும் போதியனவல்ல. ஒருவன் வியாபாரஞ் செய்யும்போது சில காலங்களிலே இலாபமும் சில காலங்களிலே நட்டமுமடைகிருன். அவன் இலாபம் வந்த வழியையும் நட்டம் வந்த வழியையும் ஆராய்ந்து அறிந்தானுயின், இலாபம் வந்த வழிப்படியே நடந்து பின்னும் இலாபத்தைப் பெறுவான்; நட்டம் வந்தவழியை அறிந்து அதிலிருந்து விலகி நடப்பான். ஒரு பெரிய போர் நடக்கும்போது தோல்வி வந்தால், அந்தத் தோல்வியின் காரண மென்னவென்று ஆராய்ந்து அந்தத் தோல்வி வாராதவழியை அரசன் தேடுவான்;

வெற்றி வந்ததானல் வெற்றி வந்தவழியையறிந்து பின்னும் அப்படியே நடப்பான்.

நம்முடைய ஒழுக்கமானது இந்த வியாபாரத்தைப்போலவும் போர்த் தொழிலைப்போலவு முள்ளது. அவைகளிலே லாபம் நஷ்டம் அல்லது வெற்றி தோல்வி வருகிறதுபோல, ஒழுக்கத்தில் நல்வினை தீவினைகள் வருகின்றன. சில காலங்களிலே நாம பிழையானதைச் செய்துவிடுகிறோம். அப்படிச் செய்திருந்தால் நாம் அந்தப் பிழை செய்தற்குக் காரணம் என்ன என்று ஆராய்தல்வேண்டும். பின்பு அந்தக் காரணம் வராமல் தடுக்கிறதற்கு ஆயத்தஞ் செய்தல்வேண்டும். உதாரணமாக, ஒரு நாள் நான் இளைத்துப்போய் இருந்தபொழுது என்னுடைய தாயார் அரிசி வாங்கிக்கொண்டு வரும்படி என்னிடஞ் சொன்னரென்று எண்ணிக்கொள்வோம். நான் போகச் சம்மதிக்கவில்லை. நான் அப்படிச்செய்தது குற்றம். இந்தக் குற்றத்துக்குக் காரணம் என்ன என்று நான் யோசித்துப் பார்த்தல் வேண்டும். முதலாவது என் சரீரம் வருந்தாமல் இருத்தல் வேண்டுமென்று எண்ணினேன்; இரண்டாவது என்னுடைய தாயாரை மதியாமலிருந்தேன். அப்படியாயின, என்னுடைய சரீர சுகமாகிய இன்பத்திலே நான் ஆசைப்படலாகாது என்று தீர்மானித்தல்வேண்டும். தீர்மானித்தபடி தவருது நடத்தற்குத் துணையாகச் சிவத்தியானம் அதிகமாகச் செய்தல்வேண்டும். அப்படிச் செய்வதனல் இந்தச் சரீரம் பிரதானமானதன்றென்பது நன்

ளாக மனசிலே பதியும். மேலும், என்னுடைய தாயாரை நான் மதியாததற்கு நியாயமென்ன என்று பார்த்தல்வேண்டும். நாம் தாய்மாரை மதியாத சில பிள்ளைகளோடு சில நாட்களாகக் கூடித் திரிந்ததனால் அவர்களுடைய பழக்கம் என்னிடத்தும் வந்துவிட்டது. ஆதலால் இனி நான் அவர்களோடு சேரலாகாதென்று தீர்மானித்தல் வேண்டும்.

இப்படியாக நாம் என்னென்ன குற்றங்கள் செய்கிறோம் என்று கண்டு அவைகளின் காரணங்களை ஆராய்ந்தறிந்து அவைகளைத் தடுத்தற்கேற்ற வழியைப் பார்த்தல்வேண்டும். திருந்துதற்கு இது மிகவும் ஆவசியகமான வழி. இப்படியான ஆராய்வு அடிக்கடி செய்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் ஆராய்தல் மிகவும் நல்லது. ஒருகிழமையில் ஒருநாள் அல்லது இரண்டு கிழமையில் ஒருநாள் அதிகமான நேரத்தை இப்படியான ஆராய்ச்சியிலும் கடவுள் வழிபாட்டிலும் கழிப்பது மிகவும் நல்லது. சிலர் இதற்காக ஒருகிழமையில் ஒருமுறை அல்லது இரண்டுகிழமையில் ஒருமுறை உபவாச விரதம் அனுட்டிக்கிறார்கள்.

அறங்களுக்கு இன்றியமையாததாகிய அன்பும், அன்பினின்றும் உதிக்கும் அருளுக்கு இன்றியமையாததாகிய புலாலுண்ணாமையும், இந்நூலில் விளக்கப்படுகின்றன. இவற்றையும் ஏனையவற்றையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய நான்காம் பாலபாடத்திலும் வாசித்தறிக.

## 2. அன்பு

"எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

கடவுளருளினால் உண்டாகுங் குணங்களில் அன்பு மிகவுஞ் சிறந்தது. அன்பு என்னுங் குணம் எல்லாப் பிராணிகளிடத்திலும் உள்ளது. கொடியதாகிய நாகபாம்பு தன் குட்டியில் அன்புள்ளதாயிருக்கிறது. இந்த அன்பு மெய்யன்பு.

இப்படியல்லாத அன்பும் உண்டு. அது ஆணவத்தினால் உண்டாவது. அது பொய்யன்பு. பொய்யன்பு எப்படிப்பட்டதென்று பார்ப்போம். ஒரு திருடனானவன், கையிலே பொற்காப்பு அணிந்திருந்த ஒரு சிறுவனைக் காண்கிறான். அவன் அவனுக்கு ஒரு வாழைப்பழத்தை வாங்கிக் கொடுத்துமிருந்த அன்பாய் ஆதரவாய்ப் பேசி அவனைத் தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறான். திருடன் சிறுவனுக்கு வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தது அன்புபோலத் தோன்றினாலும் அன்பன்று. சிறுவனுடைய பொற்காப்பைப் பறித்தற்காகவே வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தான். இது வஞ்சித்தற்காகச் செய்த செய்கை. இவன் காட்டிய அன்பு பொய்யன்பு.

ஒருவன் பஞ்சவர்ணக் கிளியை வளர்க்கிறான். அப்படி வளர்ப்பது கிளிமேல் வைத்த ஆசையினாலன்றி அன்பினாலன்று. அவனுக்குக் கிளிமேல் அன்பு இருக்குமானால் அதைக் கூட்டில் அடைத்து வருத்தமாட்டான்.

தன்னயங் கருதாமற் செய்யும் அன்புதான் கடவுளின் திருவருளால் உண்டாகும் பரிசுத்தமான அன்பு; இந்த அன்பினு லுண்டாவதெல்லாம் நன்மையாகவே இருக்கும். பசு தன் கன்றில் அன்பா யிருக்கிறது. அது ஏதாவது ஒரு பயன் பெறவேண்டுமென்று கன்றை நேசிக்கவில்லை. தாய் பிள்ளைகளில் வைக்கும் அன்பு இப்படிப் பட்டதே. இரந்திதேவர் நாற்பத்தெட்டு நாள் அன்னந் தண்ணீரின்றி இருந்தபொழுது, தமக்கு வந்த போசனத்தையும் தண்ணீரையும் விரும்பிக் கேட்டவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்துடன் கொடுத்தார்.

கடவுளிலே அன்புள்ளவர்கள், இப்படியான அன்புள்ளவர்களா யிருப்பார்கள். இவர்கள் எப்படிப்பட்ட அந்நியர் வருந்தும்பொழுதும தங்களா லியன்ற உதவி செய்வார்கள். இரந்திதேவருக்கு அந்தப் புலையனிலும், சிபிச் சக்கரவர்த்திக்கு அந்தப் புறுவிலும் இவ்வளவு அன்பு உண்டானதற்குக் காரணம் என்ன? அவர்கள் கடவுளிலே மிகுந்த அன்புள்ளவர்களா யிருந்தார்கள். கடவுள் ஒருவரே மெய்மான பொருள். அவரிலே உள்ள அன்பே அல்லாமல் நமக்கு வேறொரு இன்பம் இருத்தலாகாது. ஆயினும் நமக்கு அவரிலே உள்ள அன்பினுல் நாம் அவரை வணக்குவதல்லாமல் அவருக்கு ஒரு உதவியுஞ் செய்ய எம்மால் முடியாது.

என்னுடைய அன்பன் என் வீட்டுக்கு வரு கிறான். என்னுடைய பிள்ளையைக் கண்டதும், அதைத் தூக்கி மடியில் வைத்து அணைத்து முத்த மிட்டு அன்பு பாராட்டுகிறான். என்னிலுள்ள அன் பிலும் பார்க்க என் பிள்ளையிலே அதிக அன்புள்ள வனுயிருக்கிறான். என்னுடைய பிள்ளை ஏதாயி னும் தனக்குக் கொடுக்குமென்று அவன் அன்பா யிருக்கவில்லை; என்னில் அன்பாயிருக்கிறபடியால் என் பிள்ளையிலும் அன்பா யிருக்கிறான். ஆத லால் எங்களுக்குக் கடவுளில் மெய்யன்பு இருந் தால், அவருடைய குழந்தைகளாகிய உயிர்கள் மீதும் மெய்யன்பு இருக்கும். நாம் கடவுளுக்குத் தொண்டு செய்யும்போது உடல் எவ்வளவு வருந் துவதும் எமக்குச் சம்மதமானுல், உயிர்களுக்காக வும் உடல் அவ்வளவு வருந்தச் சம்மதமா யிருப் போம். கடவுளில் அன்பு வைப்பது எங்களுக்குப் பிரதானமான கடனுகும். ஆகையால் அவருடைய குழந்தைகளாகிய உயிர்களில் அன்பு வைப்பதும் எங்களுக்குப் பிரதானமான கடன். நாங்கள் பிற உயிர்களை நேசிக்கும்போது, அவைகள் எங்களுக்கு என்ன நன்மை செய்கின்றன என்று பார்க்க வேண்டியதில்லை. அவைகள் எங்களுக்கு நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் அவைகளை நேசிப் பது எங்களுடைய கடனுகும்.

எவர்களாயினும் நமக்குப் பிழை செய்தால், அவர்களும் கடவுளுடைய பிள்ளைகளென் றெண் ணிப் பிழைகளைப் பொறுத்தல்வேண்டும். அவர்கள்

நல்லவர்களா யிருந்தால் அவர்களை நம்முடைய அன்பினால் வசப்படுத்தல் வேண்டும். அவர்கள் தீயவர்களா யிருந்தால் "தீயாரைக் காண்பதுவுந் தீதே" என்ற விதிப்படி பொதுவாக அவர்களி னின்றும் நாம் விலகிக்கொள்ளல் வேண்டும். ஆயி னும், அவர்களில் உள்ளன்புடையவர்களாய் அவர் களுக்குத் துன்பம் நேரிட்ட காலங்களிலே, மற்றை யவர்களுக்கு நாம் உதவிசெய்வதுபோல, அவர்க ளுக்கும் உதவிசெய்தல் வேண்டும்.

அன்பு ஒருவனை நல்ல செய்கைகளைச் செய்யு மாறு செலுத்தும். அன்பு பாவங்களைச் செய்ய விடாது தடுக்கும். அன்புள்ளவன் உயிர்களை வருத்திக் கொல்லமாட்டான். அன்புள்ளவன் பிற ருடைய செல்வத்தைக் கண்டு பொறாமைகொள்ள மாட்டான். அன்புள்ளவன் பிறர் குற்றங்களைத் தூற்றித் திரியமாட்டான். அன்புள்ளவன் பொய்யி னாலோ களவினாலோ வேறெந்தத் தீய செய்கையி னாலோ பிறர் மனதை வருத்தமாட்டான். எந்தப் புண்ணியஞ் செய்தற்கும் அன்பு வேண்டும். அன் பில்லாமற் கொடுக்கப்பட்ட மிக ருசியாய உண விலும் பார்க்க அன்புடன் கொடுக்கப்பட்ட பழைய சாதத் தண்ணீர் மேலானதாம்.

### சிவதருமோத்திரம்

ஆதரவே பரமான அறமதாகும்
 ஆதிநடு அந்தம்இவற் றனைத்துமாகும்
ஆதரவற் றவர்ஈகை அறமேஆகா
 ஆதலினால் ஆதரவே மூலமாகும்

ஆதரவே பிரகிருதி ஆன்மாஈசன்
எனும்பொருளும் அறிவிக்கும் அமலன்றாளும்
ஆதரவே சடைவிக்கும் ஆதலாலே
அனைத்தினுக்கும் ஆதரவே மூலமாகும்.

### 3. புலாலுண்ணாமை

#### இருக்குவேதம்

"மாமிசத்தை விலக்கி மற்றைய பதார்த்தங்களைச் சுத்திசெய்து சமைத்து உண்பவர்கட்கு நல்ல சித்திகள் உண்டாகும்" —(௧-௧௬௨-௧௨)

"உயிர்கள் ஒன்றையுங் கொல்லாத இல்வாழ்வானுக்கு மேம்பாட்டைக் கொடு" —(௭-௧-௧)

#### யசுர்வேதம்

"கடவுளே, எல்லாப் பிராணிகளிலும் நான் அன்பாய் இருக்கவும், அவைகள் என்னில அன்பாயிருக்கவும் அருள் செய்க." —(௩௬-௧௮)

#### பதி பசு பாச விளக்கம்

கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலும்
மங்குபோற் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்புசிப்போன் போய்நர கடைவனன்றே.

### 1. மனித சரீரத்தின் அமைப்புக்கு மாமிச போசனம் பொருந்தாது

கடவுள் மூன்றுவகையான சர உயிர்களைப் படைத்திருக்கிறார். அவற்றுள் ஒருவகை உயிர்கள் மாமிசஞ் சாப்பிடத்தக்க சரீர அமைப்பை

உடையனவைகள். வேறொருவகை உயிர்கள் தாவரங்களைச் சாப்பிடத்தக்கவைகள். மற்றவகை உயிர்கள் மாமிசம் தாவரம் இரண்டையுஞ் சாப்பிடத்தக்கவைகள். சிங்கம் புலி முதலிய மிருகங்கள் இறைச்சியை மாத்திரஞ் சாப்பிடத்தக்கவை. மாடு ஆடு குரங்கு யானை முதலிய மிருகங்கள் புல்லு இலை தானியம் காய் பழம் முதலிய தாவரவர்க்கங்களை மாத்திரந் தின்னத்தக்கவை. நாய் பூனை முதலிய சில மிருகங்கள் மாமிசம் தாவரம் என்னும் இருவித போசனங்களையுந் தின்னத்தக்கவை. [சரஉயிர் - உலாவக்கூடிய உயிர்.]

சிங்கம் புலி முதலிய மிருகங்களுடைய பற்களையும் நகங்களையும் குடல்களையும் பார்த்தால், அவைகள் மாமிசமே சாப்பிடுதற்குக் கடவுளாற் படைக்கப்பட்டன என்று அறியலாம். இந்த மிருகங்களுடைய நீண்ட கூரிய நகங்களும், வாள்போன்ற கூரிய பற்களும், மற்றவையிலும் பார்க்க மிகவும் நீண்ட வேட்டைப் பற்களும் மாமிசத்தைக் கிழித்துத் தின்பதற்கு ஏற்றவைகள். அன்றியும் இந்த மிருகங்களுடைய குடல்கள் குறுகியிருக்கின்றன. மாமிசம் விரைவாக அழுகி விஷமாகுந் தன்மையை உடையது. அது சரீரத்திலே அதிகநேர மிருந்தால் அதின் விஷம் பரவிவிடும். அது விரைவாக உடம்பிலிருந்து கழிந்துபோகும்படியாகவே மாமிசந் தின்னும் மிருகங்களின் குடல்கள் சிறியனவாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

தாவரங்களை உண்ணும் பசு முதலியவைகளுடைய பற்களோ தாவரத்தை மாத்திரஞ் சாப்பிடக்கூடியனவாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் பற்கள் சிங்கம் புலி முதலியவற்றின் பற்களிலிருந்து மிகவும் வித்தியாசமாய் இருக்கின்றன. புலி சிங்கங்களுக்குள்ள கூரிய நகங்கள் இவைகளுக்கு இல்லை. தாவரங்களையே தின்னும் பசு முதலிய மிருகங்களின் குடல்கள் மிகவும் நீண்டிருக்கின்றன. தாவரபோசனம் விரைவிற் பழுதுபடாது. அது நெடுநேரஞ் சரீரத்திலிருந்தால் அதின் பகுதிகள் சரீரத்தில் அதிகமாகச் சேரும். ஆதலால் அவைகளுடைய குடல்கள் நீளமாயிருக்கின்றன. மனிதனுடைய சரீரத்தின் அமைப்பு, தாவரங்களையே தின்னும் குரங்கின் சரீர அமைப்பை ஒத்திருக்கிறது. குரங்குக்குப் போல மனிதனுக்கும் வேட்டைப்பற்கள் மற்றைப் பற்களினளவாய் இருக்கின்றன. தாவரந் தின்னும் மிருகங்களின் குடல் நீண்டிருக்கிறதுபோல மனிதனுடைய குடலும் நீண்டிருக்கின்றது.

## 2. மாமிசம் வியாதியை உண்டாக்குவது

மனிதர்கள் மிகப் பழைய காலத்திலே இலைகளையும் பழங்களையும் வித்துக்களையும் புசித்து வந்தார்கள் என்று மனித உற்பத்தியை ஊகித்தறியும் அறிவாளிகள் சொல்லுகிறார்கள். பின்புதாம் மனிதர்கள் தங்கள் சரீர அமைப்புக்குப் பொருத்தமில்லாத மாமிசத்தைத் தின்னத் தொடங்கிப் பலவித நோய்களையும் அற்ப வாழ்நாளையும்

உடையவர்களானார்கள். ஐரோப்பா அமெரிக்காவி லுள்ள சிறந்த கல்விமான்களிற் பலர் மாமிச போசனத்தினாற் சரீரத்துக்கு உண்டாகுங் கேடு களை அறிந்து மாமிசபோசனத்தை விட்டுவருகி றார்கள்.

மகாவைத்தியராகிய ரோஜெர்ஸ் (G. F. Rogers M. D.) என்பவர் சொல்லுகிறார்: "பதின்மூன்று வருட காலமாக நான் தாவர போசனமே உண்டு கொண்டு வருகிறேன். இவ்வளவுகாலமும் என்னு டைய தேகபலமும் மூளைப்பலமும் வரவர நன்கு கொண்டே வந்திருக்கின்றன. மாமிசம் நச்சுப் பதார்த்தம் சேர்ந்துள்ளது. அது வெறித் தன்மை யான உற்சாகத்தை உண்டாக்குவது. தாவர போசனஞ் செய்பவர்கள் களையாமல் நெடுநேரம் வேலை செய்கிறார்கள். நான் ஒரு நேரம் சாப்பாடு இல்லாமல் இருந்தால் எனக்குச் சற்றேனுங் களை தோற்றுகிறதில்லை."

இங்கிலாந்திலே லேடி மாக்கிறெற் வைத்திய சாலையிலே (Lady Margaret Hospital) முதல் வைத் தியராகிய யோசியா ஓல்ட்பீல்ட் (Lient Colonel Josiah Oldfield, D. C. L.; M. A. C. R. C. S.) சொல்லு கிறார்: "மாமிசம் மனித இயற்கைக்குமாறான உணவு. ஆதலால், அது சரீரத்திலே வியாதிக்குக் காரண மான ஒழுங்கீனங்களை உண்டாக்கும். என்னிடத் திலே வைத்தியத்துக்கு வந்தவர்கள் அநேகர் அறு பதாம் வயது எழுபதாம் வயதுகளிலும் மாமி

சத்தை விட்டிருக்கிறார்கள். ஒருவர் எழுபத்தைந் தாம் வயசிலே மாமிசத்தை விட்டிருக்கிறார். ஒருவர் எழுபத்தைந்தாம் வயசிலே மாமிசத்தை விட்டார். மாமிசத்தை விட்டதினாலே இவர்களில் எவருக்காவது ஒருவிதமான சுகவீனமும் பின்பு தோன்றவில்லை; எல்லாருக்கும் முன்னிருந்ததி லும் பார்க்கத் தேக சௌக்கியமும் பெலமும் அதிகப்பட்டன. [இன்னும் மேலைத்தேச வைத்திய சாஸ்திரிகளுடைய கருத்தையும் பரிசோதனைகளை யும் ஈற்றிற் காண்க.]

இந்த வைத்திய சாஸ்திர உண்மைகள் பழைய நாட்களில் வைத்தியம் படித்தவர்களுக்குத் தெரி யாது. ஆதலால் என்ன வியாதிக்கும் கோழிக் குஞ்சை அவித்துக் குடிக்கும்படி சொல்லுகிறார் கள். இவர்களுடைய மூடத்தனமான சொல்லைக் கேட்டுச் சில நோயாளிகள் கோழிக்குஞ்சுகளைக் கணக்கின்றிக் கொல்லுகிறார்கள். ஒருவியாதி நீங்க முன் சிலர் நூறு கோழிக்குஞ்சு சாப்பிடுகிறார்கள், முதலாவது, கோழிக்குஞ்சினது மாமிசம் வியா தியை அதிகப்படுத்துவதல்லாமற் குறைக்க மாட் டாதென்பது இக்கால வைத்திய சாஸ்திர பண் டிதர்களுடைய கருத்தென்பது இங்கே காட்டப் பட்டது; இரண்டாவது, இந்தக் கோழிக்குஞ்சு களை ஒவ்வொன்றாகக் கொல்ல இவர்களுக்கு மனம் வருகின்றதே! மூன்றாவது, இவர்களுக்கு வருத்தம் வருகிறபொழுது அது வந்ததற்குக் காரணம் தாங்கள் முன்னே செய்த பாவந்தான்

என்றெண்ணிப் பின்பாவது பாவஞ் செய்யா திருக்கவேண்டியது இவர்களுடைய கடமை. அப் படியிருக்கவும் அந்தச் சமயத்திலே இத்தனை உயிர் களைக் கொன்று பெரும் பாதகஞ் செய்கிறவர்கள் பெரும் அறிவீனர்கள். செய்த குற்றத்துக்காக மறியற்சாலையிலே இருந்து தண்டனை அடைகிற ஒருவன், அப்படி வருந்தும்போது அங்கே உள்ள வர்களிற் சிலருக்குக் கத்தியாலே குற்றுவான் என்றால் அவனுக்குத் தண்டனை இன்னும் எவ் வளவு அதிகமாகக் கிடைக்கும்! அவன் எவ்வளவு அறிவீனன்! நோயுள்ள காலத்திலே மாமிசஞ் சாப்பிடுகிறவர்கள் இப்படியான அறிவீனனிலும் அதிகம் அறிவீனர்கள்.

மீன் உணவு மூளைக்கு நல்லதென்று ஒரு பேய்த்தனமான எண்ணம் சிலரிடத்து இருக்கின் றது. டக்டர் மக்படின் (Dr. Macfavden) என்பவர் பலவகையான மீன்களின் பகுதிகளைச் சாஸ்திர முறையாக நன்றாய்ப் பரிசோதித்து, அவைகளிலே மூளையை வளர்க்கக்கூடிய பொருள் ஒன்றுமில்லை யென்று பதின்மூன்று வருஷங்களுக்கு முன் வெளிப்படுத்தி யிருக்கிறார். இவர் இவ்வாறு சொல்லிய பின்பு, மூளைக்கு மீன் நல்லதென்ற இந்தப் பேய்த்தனமான எண்ணத்தை எல்லாரும் விட்டுவிடலாம். துவரம்பருப்பு மூளையை வளர்ப்ப தென்று சாஸ்திரிகள் பரிசோதித்து அறிந்திருக் கிறார்கள்.

மாமிசத்தைச் சமைத்துத் தின்னுமற் பச்சையாகத் தின்ருல், அது உடம்பி லிருந்துகொண்டு அழுகிப் பலவித நோய்களையும் உண்டாக்கும். மாமிசத்தைச் சமைத்து நெடுநேரம் வைத்தால், அது பழுதாகுமென்றுதான் காரமுள்ள சரக்குகளைச் சேர்த்துச் சமைக்கின்ருர்கள். மாமிசத்தினுல் உடனே ஒரு தீமையும் உண்டாகவில்லையே என்ருல், அதன் தீமை பின்புதான் தெரியும். வெள்ளைப் பாஷாணம் காஞ்சிரை விதை முதலானவைகள் நஞ்சுகளல்லவா? அவைகளை அற்பம் அற்பமாகத் தின்னுகிறவர்களுக்கு உடனுக்குடன் யாதுந் தீங்குண்டாவது காணேம். நாட்செல்லத்தான் அவைகள் பலவித உபத்திரவங்களை உண்டாக்குகின்றன; இவைகளைப்போலவே மாமிசமும்; நமது தேசத்தவர்களிலே மாமிசஞ் சாப்பிடுகிறவர்களுடைய சாப்பாட்டிற் சோறு முக்காற் பங்குக்கு மேற்படுகிறது; கறிகளில் தாவரக் கறிகளுஞ் சாப்பிடுகிருர்கள். மாமிசக் கறிகளிலும் தேங்காய் மிளகாய் சரக்கு முதலிய தாவரப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. ஆகவே, முழுத் தீனிலும் மாமிசம் மாகாணி பங்கும் இராது. (மாகாணி-பதினறி லொன்று.)

இவ்வளவு அற்பமாகத் தின்னுதலால் அவர்களுக்கு மாமிச போசனத்திஞல் வரக்கூடிய தீமை தோன்றுகிறதில்லை. உணவிற் பெரும் பங்கை மாமிசமாகக்கொள்ளும் மேலைத் தேசத்தவர்களுக்குத்தான் அதின் தீமை விளங்கும்; விளங்குகிற

படியாற்றான் அறிவாளிகள் மாமிச போசனத்தை விட்டு வருகிறார்கள்.

மாமிசந் தின்பவர்கள் பலர் இடையில் விடுதற்குச் சம்மதிக்கின்றார்களில்லை. இடையில் விட்டால் தீன் சமிக்கிறதில்லையென்றும், வயிற்றில் வாயு உண்டாகப் பார்க்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். இவர்கள் தமது வாய்க்கு இதமாயிருந்த மாமிசத்தை விடுதற்கு மனம் இல்லாமையினால் இந்தப் போலி நியாயங்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். மாமிசத்தை விட்டால், உணவு ஏன் சமிக்கமாட்டாது? மாமிசந் தின்றபொழுதும் இவர்களுடைய போசனத்தில் அதிகப்பகுதி தாவரப் பொருள்கள் தாமே; அவைகள் அப்பொழுது சமித்துத்தானே வந்தன. மாமிசத்தை விட்டவுடன் அந்தத் தாவரப் பொருள்கள் ஏன் சமியாமற் போக வேண்டும்? அற்ப மாமிசஞ் சேராமையால் தாவரப் பொருள்கள் சமிக்கவில்லையே என்றால், மாமிசமானது சமிக்கச் செய்யும் மருந்தா? மனித சரீரமானது தாவர போசனத்திற்கு ஏற்றதாகப் படைத்திருக்கவும், மாமிச போசனத்திற்குப் பொருத்தமில்லாமலிருக்கவும், மாமிசக்கறியொன்றை விட்டதனால் வழக்கமாக உண்டு வந்த சோறுந் தாவரக் கறிகளும் சமிக்கவில்லையென்றால் யார் நம்புவார்கள்? மாமிசக்கறியை அதிககாரமாகச் சமைப்பதினாலுந் தாவரக் கறியைக் காரங் குறைவாகச் சமைப்பதினாலும், காரமுள்ள மாமிசக் கறியை விட்டதினால் ஒருபோது சமி

யாப்பா முண்டாகலாம். அப்படியானால் தாவரக் கறிகளைக் காரமாகச் சமைக்கலாமே. மாமிசத்தை விடுவதினால் உள்ளபடி வருத்தம் வருகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். அந்த வருத்தத்தை நாங்கள் பொறுத்துக்கொள்ள முடியாதா? நமக்கு அந்த அற்ப வருத்தம் பெரிதா? நம்மைப்போன்ற ஒரு உயிரைக் கொல்வதால் அதற்கு வரும் வருத்தம் பெரிதா?

மாமிசம் அதிக பலத்தைத் தரக்கூடியதென்று சிலர் நினைக்கிறார்கள். அது அதிக பலத்தை உண்டாக்கும் உணவன்று. அது குடிவகைகளைப் போல அற்ப நேரத்துக்கு உற்சாகத்தை உண்டாக்குவது. இந்த உற்சாகத்தைப் பெலன் என்று சிலர் பிழையாக நினைக்கிறார்கள்.

### 3. மாமிசம் கெட்ட குணங்களை உண்டாக்குவது

மாமிசம் தூல சரீரத்துக்கு வியாதியை வருவிப்பதுபோல, சூக்கும சரீரத்திற்கும் வியாதியை வருவிக்கின்றது. அது கடும் உற்சாகத்தையும் மிருகத் தன்மையையும் உண்டாக்குகின்றது. இவைகளாலே கோபம் காமம் செருக்கு மதுபானப் பிரியம் முதலிய கெட்ட குணங்களுண்டாகின்றன. கோபம் காமம் செருக்கு தாவர போசனகாரருக்கும் உண்டுதானே என்று எதிர் நியாயஞ் சொல்லலாம். ஆயினும் தாவர போசனகாரன் மாமிச போசனஞ் செய்தால் அவனுக்கு இந்தக் கெட்ட குணங்கள் அதிகப்படும். மாமிசந் தின்னுவோன்

அதை விட்டால் இந்தக் கெட்டகுணங்கள் குறையும். குடிவகை பருகுவோர் பெரும்பாலும் மாமிசம் புசிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்; மாமிசம் வெறித் தன்மையுள்ளதாதலால், வெறித்தன்மை உள்ளதாகிய மதுபானத்திலே அது பிரியமுண்டாக்குகின்றது. ஐரோப்பாவிலே மதுவிலக்குச் சங்கத்தார் குடிவகையைக் குறைக்கிறதற்குத் தாவர போசனமே சுகமான வழியென்று கண்டு மாமிச போசன விலக்குப் பிரசங்கங்கள் செய்து வருகின்றார்கள். உள்ளி செம்முருங்கை முதலிய தாவரப் பொருள்களும் இப்படியான கெட்ட குணங்களை வளர்ப்பதினாலேதான் விலக்கப்பட்டன.

## 4. மாமிசம் கொலையாகிய பெரும் பாதகத்துக்குக் காரணம்

மாமிச உணவு வேண்டுமானால் நம்மைப்போல அறிவுள்ள உயிர்களைக் கொல்லவேண்டியிருக்கின்றது. அது எவ்வளவு பெரும்பழி. பாதகங்களுக்குள்ளே கொலையே மகா பாதகம். ஆன்மாக்கள் ஈடேறுதற்காகவுள்ள உடம்பை அழிப்பதுபோலப் பெரும் பாதகம் வேறென்ன இருக்கிறது? நாம் அவைகளைக் கொல்லவில்லையே என்றால், நமக்காக அவைகள் கொல்லப்படுதலால் நாமே அந்தக் கொலைக்குக் காரணர். ஆதலால் அந்தப் பாவம் பழியிற் பெரும்பகுதி நமக்கேயாம். ஒரு மனிதனைக் கொல்லும்படி நான் ஒருவனை ஏவினால், நீதித் தலங்களில் முதற் குற்றவாளி நானென்று தீர்க்கப் படும்.

## 5. மாமிச போசனம் தெய்வத் தன்மையாகிய இரக்கத்தைக் கெடுப்பது

தம்முயிரைப்போலப் பிற உயிர்களை நினைக்கும் உத்தமர்கள் ஒருகாலத்தும் பிற உயிரைக் கொன்று மாமிசம் புசியார்கள். ஒரு மீனை அல்லது கோழியைக் கொல்லும்போது அது எவ்வளவு பாடு படுகின்றது! நமக்கு ஒரு முள் ளுத் தைத்தால் நாம் எவ்வளவு வருந்துகிறோம். நம்மை வெட்டினால் நமக்கு எப்படியிருக்கும். அதுபோலத்தானே அதற்கும் இருக்கும். இவ்வளவு கொடுமைகளை யெல்லாஞ் செய்வதினால் ஒருவனுக்கு வருகிற லாபமென்ன? மாமிசத்தைத் தின்று பழகினவனுக்கு அது சற்றே ருசியாய் இருக்கும்; இந்த அற்ப ருசிக்காக ஒரு உயிரை இவ்வளவாக வதைப்பதிலே நல்ல குணமென்பது கடுகளவாவது இருக்குமா? இவனுக்கு நீதி ஏது? இரக்கம் ஏது? மோக்ஷம் ஏது? மாமிச போசனி தன் சுகத்திற்காக வேறு எந்தத் தீங்கை எவருக்குத்தான் செய்யமாட்டான்?

எல்லா உயிர்களுங் கடவுளுடைய குழந்தைகள். ஆதலால் நாம் கடவுளுக்காக எல்லா உயிர்களிலும் அன்பு வைத்து அவைகளுக்கு நன்மை செய்ய வேண்டும். நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இருத்தல்வேண்டும். அப்படியுமில்லாமல், அவைகளைக் கொல்லும்போது அவைகள் எவ்வளவு பாடுபடுகின்றன என்று பார்த்தவன்.

இரக்கம் உள்ளவனுனல், பின் ஒருபோதும் மாமிசம் புசிக்க நினையான்.

யாழ்ப்பாணத்திலே ஒரு ஆங்கில வித்தியாசாலை உபாத்தியாயர், மாணுக்கர்களுக்கு அங்காதிபாதம் விளங்கப்படுத்துதற்காக ஒரு ஆட்டைக் கொல்லத் தீர்மானித்தார். அதனை அறிந்த பலர் அப்படிச் செய்யாதபடி தடுத்தார்கள். ஆசிரியரோ அவர்கள் சொன்னதைக் கேளாமல் ஆட்டை வெட்டுவித்தார். அப்பொழுது அந்த ஆடு பட்ட உபத்திரவத்தை அவர் கண்டு மிகவுங் கவலையடைந்தார். "ஐயையோ! இந்த ஏழைப் பிராணிகள் இவ்வளவு பாடுபட்டு இறக்க இவைகளுடைய மாமிசத்தை நாம் உண்டுவிட்டு மனம் களிக்கின்றோமே" என்று மனம் வருந்தி, அன்றைக்கே மாமிச போசனத்தை அவர் விட்டுவிட்டார். மாமிசம் புசிப்பவர்கள் பலர் இவைகளைப்பற்றி யோசிக்கிற தில்லை. யோசித்தால் நமது ஆசிரியர் விட்டது போலவே, அவர்களும் மாமிச போசனத்தை விட்டு விடுவார்கள்.

மாமிசம் நமது சரீரத்துக்குப் பொருத்தமில்லாதது; வியாதியைக் கொடுப்பது; தீய குணங்களை எழுப்புவது; கொலைக்குக் காரணமாயுள்ளது; நம்மிலேயுள்ள தேவ குணமாகிய இரக்கத்தைக் கெடுப்பது; ஆதலால் மாமிச போசனம் அவசியம் நீக்கப்படவேண்டியது.

மாமிச போசனம் கடவுளுடைய விதிக்கு மாறானது

ஒரு வைத்தியன் வியாதியை நீக்குதற்கு (இன்னது செய்யலாம் இன்னது செய்யக்கூடாதென்று) விதிகள் சொல்லுவதுபோல, வைத்திய நாதராகிய கடவுள் நம்முடைய மும்மலங்களாகிய வியாதியை நீக்குதற்காக விதிகள் செய்திருக்கிறார். வைத்தியனுடைய விதிகளுக்கு மாறாக நடந்தால், வியாதி அதிகப்பட்டு நாம் இரண்டு வகையாக வருந்தவேண்டி வரும். வியாதியின் உபத்திரவம் ஒருபக்கமாகவும், வியாதியை நீக்குதற்குரிய கசப்பான மருந்துகளுஞ் சுவையில்லாத உணவுகளும் ஒரு பக்கமாகவும் நின்று நம்மை மிகவும் வருத்தும். கடவுளுடைய விதிக்கு மாறாக நாம் மாமிசம் புசித்தால், கர்மமலமும் மாயாமலமும் ஏறும். இந்தப் பிறவியில் அதிகம் வருந்தாவிட்டாலும், நரகத்திலே அளவில்லாத காலம் வருந்துவது நிச்சயம். நரகத் துன்பம் அனுபவித்தபின்னர், இழிவான மிருகங்களாய்ப் பிறந்து மிகவும் வருந்திப் பின்பு மனிதராய்ப் பிறக்குப்போதும், குருடர் செவிடராயும், பெருவியாதி கயரோகம் முதலிய பெரு நோய்களாற் பீடிக்கப்பட்டும் வருந்துவது நிச்சயம்.

முன்னே சொல்லிய ஐந்து நியாயங்களாலுந் தீயதென்று காட்டப்பட்ட மாமிசத்தைத் தின்று நமது உயிர்க்குயிராகிய பரம பிதாவாயிருக்கிற கடவுளுடைய திருவாக்கைத் தட்ட எவர்கள் விரும்பு

வார்கள்? இப்படிமாக அளவில்லாத துன்பத்தை அனுபவிக்க எவர்கள் நினைப்பார்கள்? பிள்ளைகளே! ஒருகாலமும் மாமிசம் உண்ணுதீர்கள்.

### பதி பசு பாச விளக்கம்

அம்மா வெனவலற ஆருயிரைக் கொன்றருந்தி
இம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
போய்ம்மா நிரயமென்றுற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

### திருக்குறள்

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
ஆங்கில்லை யூன்றின்ப வர்க்கு.

### தாயுமானவர்

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

குறிப்பு :—தாவரங்களுக்கும் உயிருண்டுதானே. அவைகளைக் கொல்லலாமா? என்று ஒரு கேள்வி கேட்கலாம். தாவர போசனம் மனித சரீரத்துக்குப் பொருத்தமாயும், வெறித்தன்மை இல்லாமலும், காமக் குரோதம் முதலிய தீய குணங்களை வளர்க்காமலும், இரக்கத்தைக் கெடுக்காமலும் இருத்தலால் அது கடவுளாலே விலக்கப்படவில்லை. நமக்கு ஏதாயினும் ஒருவித உணவு வேண்டும். உணவின்றி இருந்துகொள்ளல் இயலாது. ஆத

லால், மாமிசம் அல்லது தாவரமாகிய இரண்டில் ஒன்று புசித்தல வேணடும. இந்த இரண்டில் மாமிசம் விலக்கப்பட வேண்டியது. தாவரம் விதிக்கப்படவேண்டியது.

ஐரோப்பாவிலே மிகப் பேர்பெற்ற சாஸ்திர பண்டிதராகிய ஆசிரியர் பறன் கூவியர் (Pro. Baron Cuvier) சொலலுகிறதாவது :- "மனித சரீரப் பகுதிகளையும் மிருக சரீரங்களின் பகுதிகளையும் ஒப்பிட்டுப் பார்க்குமபொழுது மனித சரீரம் காய்கனிகளை உண்ணும் மிருகங்களின் சரீரப் பகுதிகளை, எல்லா விதத்திலும் ஒத்திருக்கின்றது; மாமிசம் உண்ணும் மிருகங்களின் சரீரப் பகுதிகளை ஒரு வகையிலும் ஒத்திருக்கவில்லை. மனிதனை அதிகம் ஒத்திருக்கிற மிருகம் வாலில்லாக் குரங்கு. அது காய் கனி தானியம் முதலியவற்றை மாத்திரம் தின்னுகின்றது. மனிதனும் இந்தப் பொருள்களையே உண்ணல் வேண்டும்.

மில்டுரு வைத்தியசாலையின் அதிபராகிய அப்ரேமோவுஸ்கி (O. L. M. Abromowiski M. D. dh. D. Medical Superintendent of the District Hospital, Mildura) சொல்லுகிறதாவது:—'தாவர போசனம் நல்லதென்று நான் சொல்வது மனிதனுடைய சரீரப் பகுதிகளைப் பார்த்துமாத்திரமன்று; என்னுடைய வைத்திய அனுபவத்திலும் சொல்லுகின்றேன்".

கேம்பிறிஜ் சர்வகலாசாலை வைத்திய சாஸ்திர ஆசிரியராகிய சிம்ஸ் வூட்கேற் (Prof G. Sims Wood-Head, M. D.. F. R. C. P., F. R. S.) சொல்லுகிறதாவது:—"மாமிசம் தேகசௌக்கியத்திற்குப் பொருத்தமில்லாதது. தாவர போசனஞ் செய்கிறவர்கள் நன்முக வேலைசெய்யக் கூடியவர்களாய் இருக்கிருர்கள்"

ஒக்ஸ்வோட் சர்வகலாசாலை M. A. பட்டம் பெற்ற ஜோன்வூட் (John Wood) என்பவர் சொல்லுவது:— 'என்னுடைய அனுபவததிலிருந்தும் அநேக வருஷகாலமாக வைத்தியசாலையில் அவதானித்த காரியங்களிலிருந்தும் நான் சொல்லக்கூடியது என்னவென்றால், மாமிச போசனம் அவசியமற்ற உணவு; இயற்கைக்கு மாருனது; சௌக்கியத்துக்குப் பழுதானது."

அமெரிக்காவிலே மிகப் பிரசித்திபெற்ற 'நியூயோக் ற்றிபியூன்' (New York Tribune) என்னும் பத்திரிகையின் அதிபராகிய கோறேஸ் கிறீலி (Horace Greely) என்பவர் சொல்லுவது:—'மாமிசம் புசிக்கிற ஒருவன் மாமிசத்தை விடுவானுயின் இன்னும் பத்து வருஷங் கூடச் சீவிப்பான்: அவனுக்கு வரக்கூடிய வியாதிகளுங் குறைந்துபோம்."

எடின்பரோவிலே (Edinburgh) சரித்திர பண்டிதராயிருந்த டக்ரர் அடம் வேர்க்கசன் (Dr. Adam Ferguson) என்பவருக்கு அடிக்கடி பாரிசவாதம்

வருவதாயிற்று. அவர் தமது அறுபதாம் வயதிலே மாமிசபோசனத்தை விட்டார்; அதன்பின் அவருக்கு ஒருகாலமும் வாதம் வரவில்லை. அவருடைய உடம்பு நன்ருகப் பெலத்து அவர் சுகதேகியாய் 95 வயதுவரை இருந்தார்.

ஐக்கிய தேசத்திலே நிலச்செய்கைப் பகுதித் தலைவராகிய ஆசிரியர் சிற்றெண்டேன் (Prof. Chittenden Ph. D., SC. D., L. L. D.) என்பவர் இருபது அமெரிக்கபோர்வீரரை, சோபகிருது ஹூ ஐப்பசிமீ சோதித்துப் பார்த்து, அவர்களின் தேகபெலத்தை அளந்து வைத்துக்கொண்டு, ஒன்பது மாதமாக அவர்களுக்குத் தாவர போசனங் கொடுத்து வந்தார். ஒன்பதாம் மாதமுடிவில் அவர்களின் தேகபெலத்தை அளந்தபொழுது, அவர்கள் முன்னிருந்ததில் ஒன்றரைப் பங்கு பெலசாலிகளாகக் காணப்பட்டார்கள். அவர்களின் தேகசுகம் நன்ருய்த் திருந்தி விட்டது. அதற்குப் பின் அவர்களில் ஒருவராவது மாமிசம் புசிக்க விரும்பவில்லை.

சைவபோதம் இரண்டாம் புத்தகம்

முற்றிற்று.

---

உ

கணபதி துணை

# தோத்திரத் திரட்டு

## விநாயகக்கடவுள்

### திருப்புராணம்

திருச்சிற்றம்பலம்.

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

## சிவபெருமான்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றாளுமாயெனக்கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்க்கன்பன்றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன் றன்னடியோங்களுக்கே.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியா வுன்னடியென்மனத்தே
வழுவா திருக்கவரந்தர வேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்த
தீவண்ணனே.

மண்பாதலம்புக்குமால்கடன்மூடிமற்றேழுலகும்
விண்பாறிசைகெட்டிருசுடர்வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந்திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக்கடவுட்சுடரான்கழலிணையே.

## திருவாசகம்

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்
உடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே [ரேல்
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்
கொள்ளே.

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்த்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே,
உன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
அன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்
பொருளே.

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ளம்
ஆகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
மொட்டறுமலர்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீர்
அத்தனேயடியேனாதரித்தழைத்தால்
அதெந்துவேயென்றருளாயே.

## திருவிசைப்பா

நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா

ஆறணிசடையெம்மற்புதக்கூத்தா
அம்பொன்செயம்பலத்தரசே
ஏறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்ட ருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும்பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்லுவதறியேன்வாழிதோற்றியதோற்றம்போற்றி
வல்லைவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
எல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன.

## உமாதேவியார்

அலகிலாக்கருணையென்னுமந்தளிரீன்றுதொல்லை
உலகெலாம்பூத்துக்கங்கையுவட்டெடுத்தொழுகுஞ்சென்னி
மலையினிற்படர்ந்தபச்சைமரகதக்கொடியைஞானக்
கலையமுதொழுகுதீஞ்சொற்கனியினைக்கருத்துள்வைப்
பாம்.

## சுப்பிரமணியக் கடவுள்

பன்னிருகரத்தாய்போற்றிபசும்பொன்மாமயிலாய்போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சத் தலையாதே
பரமகுரு வருணினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே.

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவா வினன்குடிப் பெருமாளே.

## வைரவக்கடவுள்.

உலக மளித்தல் சுதந்திர மன்
றுவண முயர்த்தோற் கெனவவன் சேய்
இலகு முருவம் பொடித்தவன் பா
லெழுந்து படைப்புஞ் சுதந்திர மன்
றலர்மெல் லணையாற் கெனவவனை
யரங்கத் திசைமா முக னுக்கிப்
பலரும் வெருவப் பொழி னெய்த்தோர்ப்
பயிக்கம் புகுந்தோன் பதம் பணிவாம்.

## திருநந்திதேவர்.

அங்கணன் கயிலைக்கு மகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லா முதற்குரு நாதனுக்கிப்
பங்கயந் துளவநாறும் வேத்திரப் படை பொறுத்த
செங்கயம் பெருமானந்தி சீறடிக் கமலம் போற்றி.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

பரசமய கோளரியைப் பாலறு
வாயனைப்பூம் பழனஞ் சூழ்ந்த
சிவபுரத்துத் திருஞான சம்பந்தப்
பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர்தங் குல தீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.

## திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப் பேரன்பு மழைவாரு
மிணைவிழியு முழவா ரத்திண்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதண் ஞானப் பாடற்
றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்.

## சுந்தரமூர்த்திநாயனார்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லா முய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோ லப்பெருமாண் மறைப்
பெருமா னெமதுகுல தெய்வமாமால்.

## மாணிக்கவாசகர்

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவாரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி.

## நால்வர்

பூழியர்கோன்வெப்பொழித்தபுகலியர்கோன்கழல்போற்றி
ஆழிமிசைக்கன்மிதப்பிலணைந்தபிரானடிபோற்றி
வாழிதிருநாவலூர்வன்றொண்டர்பதம்போற்றி
ஊழிமலிதிருவாதவூரர்திருத்தாள்போற்றி.

## அறுபத்துமூவர்

ஒப்பினோடுயர்விகந்தவனுவந்தினிதருள
அப்புராதனன்றோழனுமருண்மொழிக்கவிஞன்
செப்புமேன்மையினொன்பதிற்றெழுவர்செம்மலர்த்தாள்
வைப்பினாவினுமனத்தினுஞ்சிரத்தினுமணப்பாம்.

## சண்டேசுரர்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதர்க் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனு டைகள் பிறவும்
வேறு தனக்கென் றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின்
மல்கும் பயனை யடியார்கள்
துன்னும் படிபூ சனைகொள்ளுந்
தூயோ னடித்தா மரைதொழுவாம்.

## மெய்கண்டதேவர்

அல்லாத பரசமய வலகைத்தேர் விண்டகல
வகல்புனற் பெண்ணை யயல்சூழ் வெண்ணெய்ப்
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
புனித சிவாகமப் பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குநிலை யிதுவெனமெய்ந் நெறிதேர்ந் தியாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீதுகொள்வாம்.

திருச்சிற்றம்பலம்